தமிழரசு

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

மலர் : 52 இதழ் : 8

பிப்ரவரி 2022

விலை ரூ.20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு





73ஆவது குடியரசு நாள் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்,
22.01.2022 அன்று, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் கலைஞர் மு. கருணாநிதி
செம்மொழித் தமிழ் விருதாளர்களுக்கு, சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

73ஆவது குடியரசு நாள் விழா

சாதனைகளை எண்ணிப் பெருமிதம் கொள்வோம்!

இந்தக் குடியரசு நாளில்
அரசியலமைப்பின்
மதச்சார்பின்மைப்
பண்பினை உயர்த்திப் பிடிக்க
உறுதியேற்று, அனைத்துத்
துறைகளிலும் நம் மக்களை
முன்னேற்றுவதில் நாம் புரிந்த
சாதனைகளை எண்ணிப்
பெருமிதம் கொள்வோம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
(26.01.2022)

73ஆவது குடியரசு தினவிழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
முன்னிலையில் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து
மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் குடியரசு தினவிழா சென்னை, காமராஜர் சாலையில் உள்ள அண்ணல் காந்தியடிகள் சிலை அருகே 26.01.2022 அன்று காலையில் நடைபெற்றது. விழா நடைபெறும் இடத்திற்கு, போக்குவரத்துக் காவல் பிரிவினர் மோட்டார் சைக்கிளில் அணிவகுப்புடன் வருகைதந்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

இதனைத்தொடர்ந்து, விமானப்படை வீரர்களின் மோட்டார் சைக்கிள் அணிவகுப்புடன் விழா மேடைக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பசுமைக் கூடை வழங்கி வரவேற்றார். முப்படைகளின் உயர் அதிகாரிகள், காவல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இந்திய விமானப் படையின் ஹெலிகாப்டர், வானத்தில் தாழ்வாகப் பறந்து தேசியக்கொடியின்மீது மலர் தூவி மரியாதை செலுத்திச் சென்றது.

தொடர்ந்து, இராணுவப் படைப் பிரிவு, கடற்படைப் பிரிவு, இராணுவ கூட்டுக் குழல் முரசிசைப் பிரிவு, வான்படைப் பிரிவு, கடலோரக் காவல்படைப் பிரிவு, சி.ஆர்.பி.எப்., சி.ஐ.எஸ்.எப்., ஆர்.பி.எப். படைப்பிரிவுகள், தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப்பிரிவுகள் (ஆண்கள், பெண்கள்) உட்பட பல்வேறு படைப் பிரிவினர்களின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வீர தீரச் செயல் புரிந்தமைக்கான அண்ணா பதக்கங்கள், கோட்டை அமீர் விருது, காந்தியடிகள் காவலர் பதக்கம், “திரு. சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது” உள்ளிட்ட பதக்கங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின், மூன்று அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பைப் பறைசாற்றுகின்ற வகையில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்திகள் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. நிறைவாக நாட்டுப்பண் இசைக்க விழா நிறைவு பெற்றது.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2053
பிலவ வருடம் : தை – மாசி
பிப்ரவரி 2022
மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 8

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. ஹரிராம்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
அ. சுகுமார்
மு. மணிமேகலை
அ. மதன்
கு. சுபாஷ்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542224 / 22542221
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். *(குறள் : 546)*

ஓர் அரசுக்கு வெற்றியைத் தருவது பகைவரை வீழ்த்தும் வேலல்ல; குடிமக்களை வாழவைக்கும் வளையாத செங்கோல்தான்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ **73ஆவது குடியரசு நாள் விழா** 3
★ **நீட் விலக்கு சட்டமுன்வடிவு மீண்டும் நிறைவேற்றும் இந்நாள் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள்** (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.02.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை) 17
★ **ஈரோடு மாவட்டத்தில் ரூ.209.76 கோடியில் அரசு நலத்திட்டங்கள்** 32
★ **சென்னையில் இஸ்பாகான் 2022** 35
★ **தமிழ்நாட்டில் ரூ.4,080 கோடியில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள்** 43
★ **திருக்கோயில்கள் வளர்ச்சிப் பணியில் ஆலோசனைக் குழு** 55
★ **தருமபுரி மாவட்டத்தில் 13,587 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்** 61
★ **மதுரையில் 67,831 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்** 65
★ **தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் தொடக்கம்** 73
★ **சமூக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் ஒருங்கிணைந்த தேசிய திட்டம்** 76

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆகியோர் 26.01.2022 அன்று, சென்னை, காமராஜர் சாலையில் நடைபெற்ற 73ஆவது குடியரசு நாள் விழாவையொட்டி விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பைப் பறைசாற்றுகின்ற வகையில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினைப் பார்வையிட்டார்கள்.

குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினைப் பார்வையிடல்

வீரதீரச் செயல் புரிந்தமைக்கான விருதுகள்

73ஆவது குடியரசு நாள் விழாவையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வீரதீரச் செயல் புரிந்தமைக்கான அண்ணா பதக்கங்கள் உள்ளிட்ட பதக்கங்களை வழங்கினார்.

அண்ணா பதக்கம் 2022

அண்ணா பதக்கம்–2022 (அரசு ஊழியர் பிரிவு) சென்னை மாவட்டம், கீழ்ப்பாக்கத்தைச் சேர்ந்த காவல் ஆய்வாளர் திருமதி இராஜேஸ்வரி; விழுப்புரம் மாவட்டம், ஆதியூர் திருவத்தியைச் சேர்ந்த தீயணைப்பு வீரர் திரு. மூ.இராஜீவ் காந்தி; கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளத்தைச் சேர்ந்த வன கால்நடை உதவி மருத்துவர் மரு.கி.அசோகன் ஆகியோருக்கும்; அண்ணா பதக்கம் (பொதுமக்கள் பிரிவு) சிவகங்கை மாவட்டம், வைகை வடகரையைச் சேர்ந்த ஓட்டுநர் திரு.முத்துக்கிருஷ்ணன்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், தே. துலுக்கம்பட்டியைச் சேர்ந்த செல்வன் லோகித்; திருப்பூர் மாவட்டம் வே.கள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த திரு.சொக்கநாதன் மற்றும் திருமதி சுதா என்ற பேச்சியம்மாள்; சென்னை, திருவொற்றியூரைச் சேர்ந்த திரு. மு.தனியரசு ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டது.

கோட்டை அமீர் விருது

மக்களிடையே நல்லுணர்வை ஏற்படுத்தி மத மற்றும் சமூக நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டுவரும் கோயம்புத்தூர் மாவட்டம், கே.கே.புதூரைச் சேர்ந்த திரு.ஜே.முகமது ரஃபி அவர்களுக்கு இந்த ஆண்டிற்கான கோட்டை அமீர் விருது வழங்கப்பட்டது.

காந்தியடிகள் காவலர் பதக்கம்

சென்னை மாவட்டம், வடக்கு மண்டலம், மத்திய நுண்ணறிவுப்பிரிவு, காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.ப. தெட்சணாமூர்த்தி; வேலூர் மண்டலம், மத்திய நுண்ணறிவுப்பிரிவு, காவல் ஆய்வாளர் திரு.மா.குமார்; கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.பா.சக்தி; திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி காவல் உதவி ஆய்வாளர் திரு.ச.சிதம்பரம்; காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரம் காவல் நிலையம், அயல்பணி மத்திய நுண்ணறிவுப் பிரிவு தலைமைக் காவலர் திரு.ஆ. அசோக் பிரபாகரன் ஆகியோருக்குக் காவலர் பதக்கங்கள் வழங்கப்பட்டது .

சிறந்த காவல் நிலையத்திற்கான பரிசு

சிறப்பான பணி, குற்றங்களைக் குறைத்தல், உடனடி நடவடிக்கை ஆகிய செயல்பாட்டில் சிறந்த காவல் நிலையத்திற்கான விருது, முதல்பரிசு திருப்பூர் மாநகரம், தெற்கு நகரக் காவல் நிலைய ஆய்வாளர் திரு.பி. பிச்சையா, இரண்டாம் பரிசு திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் திருமதி அ. ஹேமமாலினி; மூன்றாம் பரிசு மதுரை மாநகர இ–3 அண்ணாநகர் காவல் ஆய்வாளர் திரு. மு.சாதுரமேஷ் ஆகியோருக்கும் வழங்கப்பட்டது.

திரு. சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது

திருந்திய நெல் சாகுபடித் தொழில்நுட்பத்தினைக் கடைப்பிடித்து அதிக உற்பத்தித் திறன் பெற்ற விவசாயிக்கான வேளாண்மைத்துறை சிறப்பு விருதான “திரு. சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது” சேலம் மாவட்டம், பூலாம்பட்டியைச் சேர்ந்த திரு.செ.இராமசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மாவட்டந்தோறும் காட்சிப்படுத்தப்படும் குடியரசு தின அலங்கார ஊர்திகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.01.2022 அன்று சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பைப் போற்றுகின்ற வகையில் வடிவமைக்கப்பட்டு, குடியரசு தின அலங்கார அணிவகுப்பில் பங்கேற்ற மூன்று அலங்கார ஊர்திகளை மாவட்டந்தோறும் காட்சிப்படுத்தும் பொருட்டுக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

புதுடெல்லியில் 26.01.2022 அன்று நடைபெற்ற குடியரசு தின அலங்கார அணிவகுப்பில் மாநிலங்கள் சார்பாகவும், ஒன்றிய அரசின் துறைகள் சார்பாகவும் “இந்தியா 75” என்கின்ற தலைப்பில் நடைபெற்ற அலங்கார ஊர்தி அணிவகுப்பில் இந்த ஆண்டு விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பை பறைசாற்றுகின்ற வகையில் அலங்கார ஊர்திக்கான வடிவமைப்பு மாதிரிகள் ஒன்றிய அரசின் தேர்வுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு மூன்று முறை அவர்கள் எடுத்துரைத்த திருத்தங்களை மேற்கொண்டும் எந்தவித காரணமுமின்றித் தமிழகத்தின் சார்பிலான அலங்கார ஊர்திகள் நிராகரிக்கப்பட்டது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வருத்தத்தினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

மேலும், புதுடெல்லியில் குடியரசு தின அலங்கார அணிவகுப்பில் வாய்ப்பு மறுக்கப்பட்ட தமிழ்நாடு அலங்கார ஊர்திகள் சென்னையில் நடைபெறும் குடியரசு தின விழாவில் இடம் பெறுவதோடு, தமிழ்நாடு முழுவதும் காட்சிப்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்.

அந்த வகையில், சென்னையில் 26.01.2022 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில், இந்திய விடுதலைப் போரில் ஆங்கிலேயர்களைத் தீரமுடன் எதிர்கொண்ட தமிழகச் சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்களிப்பினைப் போற்றி, பெருமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் மூன்று அலங்கார ஊர்திகள் வடிவமைக்கப்பட்டு அணி வகுப்பில் பங்கேற்றுப் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பினையும், பாராட்டுதலையும் பெற்றுள்ளது. அம்மூன்று அலங்கார ஊர்திகளையும் முதற்கட்டமாக, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் காட்சிப்படுத்தப்படும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அலங்கார ஊர்திகளை வரவேற்று, பொதுமக்கள் பெருந்திரளாகப் பார்வையிட்டுப் பயன்பெறுகின்ற வகையில் நகரின் முக்கியப் பகுதிகளில் இவ்வூர்திகள் காட்சிப்படுத்தப்பட்டது.

முதற்கட்டமாக, 28.01.2022 அன்று ஈரோடு மாவட்டத்திற்கு வருகைதந்த, இந்திய விடுதலைப்போரில் தமிழகத்தின் பங்களிப்பைப் போற்றுகின்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள அலங்கார ஊர்தியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத் தலைவர், மாநிலங்களவை உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், அரசு அலுவலர்கள் ஆகியோர் வரவேற்றுப் பொதுமக்களுக்கு அலங்கார ஊர்தியைக் காட்சிப்படுத்தினர். பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் பெருந்திரளாக அலங்கார ஊர்தியினைப் பார்வையிட்டுப் பயனடைந்தனர்.

ஈரோடு

தமிழகச் சுதந்திர போராட்ட வீரர்களின் பங்களிப்பை போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தியினை மதுரை மாவட்ட எல்லையான சுரப்பட்டி கிராமத்தில் 28.01.2022 அன்று மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் வரவேற்று, மதுரை மாநகராட்சி வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் பகுதியில் அலங்கார ஊர்தியினைப் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தினர்.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள் 30.01.2022 அன்று காட்சிப்படுத்தப்பட்டிருந்த அலங்கார ஊர்தியில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மலர் தூவி மரியாதை செய்தார்.

28.01.2022 அன்று கோயம்புத்தூர் வந்தடைந்த "இந்திய விடுதலைப் போரில் தமிழகம்" அலங்கார ஊர்தியினை மாவட்ட எல்லையான கருமத்தம்பட்டியில் அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகளுடன் மலர்தூவி வரவேற்றனர்.

கோயம்புத்தூர் மாநகராட்சி வ.உ.சி.பூங்கா மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப., அவர்கள், மற்றும் மாநகராட்சி ஆணையர் ஆகியோர் அலங்கார ஊர்தியினைப் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தினர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 27.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னையில் நடைபெற்ற குடியரசு தின அலங்கார அணிவகுப்பில், இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பைப் போற்றுகின்ற வகையில் வடிவமைக்கப்பட்டு, அணிவகுப்பில் பங்கேற்ற அலங்கார ஊர்திப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்ட செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

விடுதலைப்போரில் தமிழகத்தின் பங்களிப்பைப் பறைசாற்றும் அலங்கார ஊர்திகள்

முதலாவது அலங்கார ஊர்தியில்...

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு அளப்பரியது. பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரில் வணிகம் செய்ய வந்த வெள்ளையர்கள் காலப்போக்கில் மண்ணின் மைந்தர்களின் உணர்வுகளை நசுக்கி, உரிமைகளைப் பறித்து, தங்களுக்குத் தாங்களே முடிசூடிக்கொண்டார்கள். இக்கொடுமைகளை எதிர்த்து இமயம்முதல் குமரிவரை எழுந்த மாபெரும் விடுதலைப் போராட்டத்தில் மன்னர்கள் தொடங்கி மகாத்மா காந்தியடிகள் வரை களங்கண்டோர் ஏராளம். அதில், தமிழ் மண்ணின் பங்கு குறிப்பிடத்தக்கது. முதல் விடுதலைப் போராட்டம் என வரலாறு எடுத்துரைக்கும் சிப்பாய் கலகத்துக்கு முன்னரே தமிழ் மண்ணில் ஆங்கிலேயரை எதிர்த்துக் குரல் கொடுத்த மன்னர்கள், குறுநில மன்னர்கள், தியாகிகளின் வரலாறு ஏராளம் உண்டு. விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்களிப்பை, எடுத்துரைக்கும் வகையிலான குடியரசுதின விழா அலங்கார ஊர்தியில் ஒருசில நிகழ்வுகள் மற்றும் சில தியாகச் சீலர்களின் திருவுருவச் சிலைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வேலூர்க் கோட்டை

விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட முதல் போராட்டக் களமே வேலூர்க் கோட்டை.

திப்புசுல்தானின் வாரிசுகள் சிறை வைக்கப்பட்டிருந்த கோட்டையை ஆங்கிலேயச் சிப்பாய்களும் அவர்களுக்குக் கட்டுப்பட்ட இந்தியச் சிப்பாய்களும் காவல் காத்து வந்தனர். ஆங்கிலேயப் படைத் தளபதி ஜான் ரடாக் சிப்பாய்களுக்கு அறிமுகப்படுத்திய புதிய தோல் தொப்பி மாட்டுத் தோலால் செய்யப்பட்டது எனவும், தோட்டாக்கள்மீது பன்றிக்கொழுப்பு பூசப்பட்டது எனவும் சிப்பாய்கள் கருதியதாலும், சமயச் சின்னங்களை அணியக்கூடாது என இட்ட உத்தரவாலும் சிப்பாய்கள் புரட்சியில் ஈடுபட்டனர்.

1806ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் நாள் இரவு இரண்டு மணிக்கு வேலூர்க் கோட்டையில், இந்தியச் சிப்பாய்கள் மற்றும் போராட்டக்காரர்கள் புரட்சி செய்து ஆங்கிலேய அதிகாரிகளைச் சுட்டுக் கொன்று கோட்டையைக் கைப்பற்றினர். செய்தி அறிந்த ஆங்கிலேயத் தளபதி கில்லஸ்பி தலைமையில் ஆற்காட்டிலிருந்தும் பிற பகுதிகளிலிருந்தும் ஆங்கிலேயப்படை வேலூருக்கு விரைந்து, புரட்சியாளர்களைச் சுட்டுக்கொன்று வேலூர்க் கோட்டையைக் கைப்பற்றியது.

இப்புரட்சி தோல்வியில் முடிவடைந்தாலும் இந்திய விடுதலைப்போருக்கு வித்திட்ட முன்னோடியாகப் புரட்சியாக 'வேலூர்ப் புரட்சி' அமைந்தது.

மருது சகோதரர்கள்

தென்னிந்திய விடுதலைப் போராளிகளில் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராட முதலாவதாக மக்கள் படையைத் திரட்டியவர்கள் சிவகங்கைச் சீமையின் மன்னர்களான மருது சகோதரர்கள்.

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி அருகிலுள்ள முக்குளம் என்ற கிராமத்தில் 1748ஆம் ஆண்டில் பெரிய மருதும், 1753இல் சின்னமருதும் பிறந்தனர். மருது சகோதரர்களின் தீரச் செயல்களை அறிந்த சிவகங்கைச் சீமை மன்னர் முத்து வடுகநாதரால் படை வீரர்களாகவும், படைத் தளபதிகளாகவும், மெய்க் காப்பாளர்களாகவும், ஆலோசகர்களாகவும் நியமிக்கப்பட்டனர். 1772ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களின் வஞ்சனை தாக்குதலில் மன்னர் வடுகநாதர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவரது மனைவி வேலுநாச்சியாருக்கு, ஆங்கிலேயர்களை எதிர்க்க உதவி புரிந்தார். ஹைதர்அலி அளித்த படையுடன் மருது சகோதரர்கள் சிவகங்கை பாளையத்தின் மீது படையெடுத்து பொதுமக்கள் உதவியுடன் போர் புரிந்து வெற்றி கண்டு வேலுநாச்சியாரை சிவகங்கைச் சீமையின் அரசியானார். வேலுநாச்சியார் மறைவுக்குப்பின் சிவகங்கைச் சீமையின் மன்னரானார்.

ஆங்கிலேயரை நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் உள்நாட்டு அரசர்களிடையே ஒற்றுமையை உருவாக்க மருது சகோதரர்கள் பாடுபட்டனர். 1801 ஜூன் 16ஆம் தேதி மருது சகோதரர்களின் புகழ்பெற்ற ஜம்பு தீவு பிரகடனம் திருச்சி கோட்டையில் பிரகடனப்படுத்தப்பட்டது. மருது சகோதரர்களைப் போர் புரிந்து வெல்ல இயலாது என உணர்ந்த ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி வலை விரித்து கைது செய்தனர். திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24 அன்று ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டனர்.

ஆங்கிலேயரை நாட்டை விட்டுத் துரத்த மக்கள் போராட்டத்திற்கு வித்திட்டவர்கள் மருது சகோதரர்கள் ஆவார்.

வீரமங்கை வேலுநாச்சியார்

ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய இந்தியாவின் முதல் பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனை வீர மங்கை வேலுநாச்சியார். ஆங்கிலேயரிடம் இழந்த நாட்டை மீட்ட பெருமைக்குரிய ஒரே வீர மங்கை.

இராமநாதபுர மன்னர் முத்து விஜய ரகுநாத செல்லத்துரை சேதுபதிக்கு மகளாக 1730ஆம் ஆண்டு பிறந்த வேலுநாச்சியார் 1746இல் சிவகங்கைச் சீமை மன்னர் முத்து வடுகநாதருக்கு மனைவியானார்.

1772இல் ஆங்கிலேயர்களின் சூழ்ச்சியால் மன்னர் முத்து வடுகநாதர் கொல்லப்படவே, சிவகங்கையிலிருந்து தப்பிச் சென்று திண்டுக்கல் கோட்டை, விருப்பாச்சி கோட்டையில் பாதுகாப்பாகத் தங்கி அங்கிருந்தபடியே, தனது போர்ப்படைகளைத்திரட்டி மருது சகோதரர்களின் தலைமையில் ஹைதர் அலி தந்த நவீன ரக ஆயுதங்களோடு போர் செய்து முதலில் காளையார் கோவிலைக் கைப்பற்றினார். பின்னர் வேலுநாச்சியாரும், அவரோடு இருந்த பெண்கள் படையும் விஜயதசமி நாளன்று அரண்மனைக்கு உள்ளே இருந்த கோயிலுக்குச் செல்வதுபோல் சென்று திடீர் தாக்குதல் நடத்தி சிவகங்கை கோட்டையைக் கைப்பற்றினார். வேலுநாச்சியாரது வாழ்க்கை தமிழ் மண்ணின் வீரத்திற்கும், பெண்ணின் வீரத்திற்கும் சாட்சியாக விளங்குகிறது. வீரமங்கை வேலுநாச்சியார் 1796 டிசம்பர் 25ஆம் நாள் இயற்கை எய்தினார்.

வடஇந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை ஜான்சி ராணி காலத்திற்குச் சுமார் ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே தமிழ்நாட்டில் பிறந்து வெள்ளையனை எதிர்த்த முதல் பெண் போராளி வீரமங்கை வேலுநாச்சியார்.

வீரத்தாய் குயிலி

ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட வீரமங்கை வேலுநாச்சியாரின் போர்ப்படையில் பெண்கள் படைக்குத் தலைமையேற்று வழி நடத்திய முதல் தற்கொலைப் படை போராளி வீரத்தாய் குயிலி.

சிவகங்கை மாவட்டம், குண்டன்சாவடியில் எளிய குடும்பத்தில் பிறந்து தனது வீரத்தாலும், விவேகத்தாலும் வேலுநாச்சியாரின் படைகளில் ‘உடையாள் பெண்கள் படை’க்குத் தலைமையேற்று ஆங்கிலேயரின் சதியை முறியடித்து வேலுநாச்சியாரின் உயிரைப் பாதுகாத்தவர். 1780ஆம் ஆண்டு சிவகங்கையை மீட்க **விருப்பாச்சியில்** நவாப்பின் படைகளை வென்று காளையார் கோவிலில் வெற்றி கண்ட வேலுநாச்சியாரின் படை சிவகங்கைக்குள் நுழைய, விஜயதசமி திருவிழாவில் சிவகங்கை கோட்டையிலுள்ள ராஜராஜேஸ்வரி கோயிலுக்குச் செல்வதற்குப் பெண்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிந்து, கோயிலுக்குள் மாறுவேடத்தில் சென்று தாக்குதல் நடத்த ஆலோசனை கூறியவர் குயிலி. மாறுவேடத்தில் சென்று போரிட்டபோது, ஆங்கிலேயர்களின் படைக்கு ஆயுதங்கள் பெருமளவில் இருப்பதால் ஏற்பட்ட பின்னடைவைக் கருதி உடம்பில் எண்ணெய்யை ஊற்றி தீப்பந்தத்தோடு தற்கொலைப் படையாக மாறி ஆயுதக் கிடங்கை அழித்து வெற்றிக்குக் காரணமாக இருந்தவர் வீரத்தாய் குயிலி.

ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டத்தில் தனது உயிரையே துச்சமென மதித்து தற்கொலைப் படையாக மாறி சிவகங்கைச் சீமையை மீட்பதில் நாயகியாகத் திகழ்ந்த வீரத்தாய் குயிலியே உலகில் முதல் தற்கொலைப்படை போராளி.

மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன்

ஆங்கிலேயர்களின் அடக்குமுறைக்குச் சிறிதும் அடிபணியாமல் துடித்தெழுந்து தோள் தட்டியவர் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் மன்னர் மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன்.

பாஞ்சாலங்குறிச்சி மன்னன் ஜெகவீர கட்டபொம்மனுக்கு மகனாக 1760ஆம் ஆண்டில் பிறந்தவர் கட்டபொம்மன். 96 கிராமங்கள் அடங்கிய பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் மன்னராக 1790ஆம் ஆண்டு முடிசூடிக்கொண்டார். நெல்லை மாவட்டத்தின் வரிவசூலிக்கும் ஆங்கிலேயத் தளபதி மார்க்ஸ்வெல்லிடம், வரி செலுத்த மறுத்தார். எனவே, 1797ஆம் ஆண்டு ஆலன்துரை பாஞ்சாலங்குறிச்சியினை முற்றுகையிட்டார். வீரர்களின் கொரில்லா போர் முறையால் ஆங்கிலேயப்படை தோற்று ஓடியது. பின்னர், நெல்லை மாவட்ட கலெக்டராகப் பொறுப்பேற்ற ஜாக்சன் துரை அழைப்பை ஏற்று, 1798ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் தேதி இராமநாதபுரத்தில் சந்திக்கச் சென்றார். அப்போது அவருக்கு ஆசனம் கூட கொடுக்காமல் அவமானப்படுத்திய ஜாக்சன் துரையிடம், எங்களிடம் நீங்கள் வரிகேட்க நினைத்ததே தவறு என்று கூறி அங்கிருந்து வெளியேறினார்.

1799ஆம் ஆண்டில் மேஜர் ஜான் பாணர்மேன் தலைமையில் எட்டப்பன் நாயக்கர் படை உதவியுடன் பாஞ்சாலங்குறிச்சி மீது போர் தொடுத்து, செப்டம்பர் 9ஆம் நாளில் கோட்டையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றவே, தப்பித்துச்சென்ற கட்டபொம்மனைப் புதுக்கோட்டை மன்னர் காட்டிக்கொடுத்து, கைது செய்யப்பட்டு அக்டோபர் மாதம் 16ஆம் நாள் கயத்தாறில் ஒரு புளியமரத்தில் தூக்கிலிடப்பட்டார். மானத்தை இழந்து வாழ்வதைக் காட்டிலும் வீரத்தோடு போரிட்டுச் செத்து மடிவதே மேல் எனக் கடைசி மூச்சுவரை கர்ஜித்து வாழ்ந்து வீரத்திலும், தியாகத்திலும் இந்தியர்களின் நெஞ்சை உருகச்செய்தவர் வீரபாண்டிய கட்டபொம்மன்.

வீரன் சுந்தரலிங்கம்

ஆங்கிலேயர்களிடமிருந்து தான் பிறந்த மண்ணைக் காப்பாற்ற, தன்னை நம்பியவர்களின் நம்பிக்கையை நிறைவேற்ற, தற்கொலைப் படையாக மாறி புரட்சிப்பயணத்திற்கு வழிகாட்டியவர் சுதந்திரப் போராட்ட வீரர், வீரன் சுந்தரலிங்கம்.

பாஞ்சாலங்குறிச்சி அருகே கவர்னகிரி என்ற ஊரில் 1770ஆம் ஆண்டு எளிய குடும்பத்தில் ஏப்ரல் 16ஆம் நாள் பிறந்து கிடைத்த வருமானத்தின் மூலம் தற்காப்புக் கலைகளைக் கற்று, இளைஞர்களுக்கும் தற்காப்புக் கலைகளைக் கற்றுத்தந்தார். வீரன் சுந்தரலிங்கத்தின் நேர்மையையும், வீரத்தையும், விவேகத்தையும் அறிந்து அவரை தமது படைத்தளபதியாக வீரபாண்டிய கட்டபொம்மன் நியமித்தார்.

1799ஆம் ஆண்டு ஆங்கிலேயப்படை பாஞ்சாலங்குறிச்சியை முற்றுகையிட்டுத் தாக்கியபோது ஒற்றர் படைத்தளபதியாக வீரன் சுந்தரலிங்கம் இடம்பெற்றிருந்தார். ஆங்கிலேயப் படை, போரில் முன்னிலை பெறக் காரணமான ஆயுத பலத்தை அழித்துவிட்டால் வெற்றிப் பெறலாம் என எண்ணி செப்டம்பர் 8ஆம் நாள் ஆங்கிலேயர் மறைத்து வைத்திருந்த ஆயுதக்குவியல் புதர் பகுதியில் தனது மாமன் மகளை ஆட்டு மந்தையினை ஓட்டிவரச் செய்து மாறுவேடத்தில் நுழைந்து, தீப்பந்தத்துடன் பாய்ந்து, ஆயுதக்கிடங்கை அழித்தார்.

ஒரு மாவீரன் எடுத்துக்கொண்ட முதல் தற்கொலைப்படைத் தாக்குதல் இந்திய மண்ணிற்குப் பெருமை சேர்க்கும் ஒரு வீரதீரச் செயலாகும்.

மாவீரன் ஒண்டிவீரன்

சுதந்திரப்போரில் ஆயுதப்போராட்டம் நடத்தி வெற்றிகளைப்பெற்ற தென் தமிழகக் குறுநில மன்னர்களில் குறிப்பிடத்தக்க பூலித்தேவன் படையில் தளபதியாக இருந்து பல வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்தவர் மாவீரன் ஒண்டிவீரன். இவரின் இயற்பெயர் வீரன். ஒண்டியாகச்சென்று எதிரிகளை அழித்ததால் ஒண்டிவீரன் என அழைக்கப்பட்டார் என்பது வரலாறு.

பூலித்தேவனின் போர்வாள் என்று அழைக்கப்பட்ட ஒண்டிவீரன் 1767ஆம் ஆண்டு நெற்கட்டான் செவல்மீது போர் தொடுக்கும் வகையில், திருமலையில் முகாமிட்டிருந்த ஆங்கிலேயர் படையினர், பாளையத்தில் சுத்த வீரர்கள் எவரேனும் உள்ளனரா எனக் கொக்கரித்தபோது, மாறுவேடமிட்டு, ஆங்கிலேயப் படையில் சேர்ந்து, ஒரு கையை இழந்த நிலையிலும், ஆங்கிலேயரது அறைகூவலை ஏற்கும் வகையில், அவர்களது பீரங்கியின் திசையை அவர்களது முகாம் பக்கமே திருப்பிவைத்ததோடு, பட்டத்துக் குதிரைமீது ஏறி அவர்களது வெங்கல நகராவை ஒலிக்கச் செய்துவிட்டு, தப்பிச் சென்றார். முகாமிற்குள் எதிரி புகுந்ததாக நினைத்து இருட்டில் ஆங்கிலேயர்கள் பீரங்கியை இயக்கியபோது, பீரங்கி அவர்களையே தாக்கியதால் ஆங்கிலேயப் படை சின்னாபின்னமாகியது. ஒரு கையை இழந்தும் அறைகூவலில் வெற்றிப் பெற்று ஆங்கிலேயர்களைக் கூண்டோடு ஒழித்தவர் மாவீரன் ஒண்டிவீரன்.

மாவீரன் பூலித்தேவன்

ஆங்கிலேயரை எதிர்த்து வீரமுழக்கமிட்ட தென்னக மன்னர்களில் முதன்மையானவராக அறியப்படுபவர் நெற்கட்டான்செவல் பாளையக்காரர் மாவீரன் பூலித்தேவன்.

1715ஆம் ஆண்டு பிறந்த காத்தப்ப பூலித்தேவன் சிறுவயதிலேயே வீர உணர்ச்சியும், இறையுணர்வும் மிகுந்தவராக விளங்கினார். பூலித்தேவனின் திறமையைக்கண்ட அவரது பெற்றோர், அவரின் 12ஆம் வயதிலேயே முடிசூட்டி அரசனாக்கினர். ஆற்காடு நவாப்பிடமிருந்து பாளையக்காரர்களிடம் நேரடியாக வரி வசூலிக்கும் உரிமையைப் பெற்றுக்கொண்ட ஆங்கிலேயர்களின் தளபதி அலெக்ஸ்சாண்டர் கெரானிடம் பூலித்தேவன் கப்பம் கட்ட மறுக்கவே, 1755ஆம் ஆண்டு மாபூஸ்கான் துணையுடன் அலெக்ஸ்சாண்டர் கெரான் நெற்கட்டான் செவல் மீது படையெடுத்தார். ஆங்கிலேயப் படையை வரும் வழியிலேயே வழிமறித்து விரட்டியடித்தார் பூலித்தேவன். இந்திய மண்ணில் ஆங்கிலேயர்கள் சந்தித்த நேரடி போரில் ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்ட முதல் தோல்வி இதுதான்.

பல்வேறு போர்களில் ஆங்கிலேயப் படையை விரட்டியடித்த பூலித்தேவனிடம் தோல்வியுற்ற கான்சாகிப் சூழ்ச்சி செய்து பாளையக்காரர்களையும், புரட்சிப்படையினரையும் விலைகொடுத்து வாங்கி பூலித்தேவனின் கோட்டையை மீண்டும் தாக்கினார். சுமார் மூன்று ஆண்டுகள் நடைபெற்ற போரில் பூலித்தேவன் தோல்வியுற்று, கோட்டையைவிட்டு வெளியேறி மேற்குத்தொடர்ச்சி மலையில் தலைமறைவானார். பூலித்தேவனை நேருக்கு நேராக நின்று வெல்லமுடியாத ஆங்கிலேயர்கள், 1767ஆம் ஆண்டு கடவுள் பக்தி மிகுந்த பூலித்தேவனை பௌர்ணமி பூஜைக்குத் தந்திரமாக வரவைத்து கைது செய்தனர்.

15 ஆண்டுகளுக்கு மேலாக ஆங்கிலேயர்களை எதிர்த்து மாவீரன் பூலித்தேவன் நடத்திய போர்களைப்போல் எந்தப் பாளையக்காரர்களும் நடத்தியதில்லை.

மாவீரன் அழகு முத்துக்கோன்

பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டுவதைத் தடுத்து, ஆங்கிலேயர்களை எதிர்த்த கட்டாலங்குளம் சீமையின் மன்னராகத் திகழ்ந்தவர் வீர அழகுமுத்துக்கோன்.

1710ஆம் ஆண்டு மன்னர் அழகுமுத்துக்கோனுக்கு மகனாகப் பிறந்தவர் விடுதலை வீரர் வீர அழகுமுத்துக்கோன், 1750இல் தன்னுடைய 22ஆவது வயதில் முடிசூடிக்கொண்டார். பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டுவதை எதிர்த்தும், தடுத்தும் வந்தமையால், ஆங்கிலேய அரசு யூசுப்கான் தலைமையில் கட்டாலங்குளம் பாளையம் மீது போர்தொடுத்தது. வீர அழகுமுத்துக்கோனின் வலது காலில் குண்டு பாய்ந்தும் மூன்று மணி நேரம் தொடர்ந்து போர் புரிந்து, இறுதியில் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு, இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நடுக்காட்டூர் என்னும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு 1759ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறு தளபதிகளுடன் பீரங்கியின் முன் நிறுத்தப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பீரங்கி முன் நின்று சாகும் தருவாயிலும் யாரையும் காட்டிக் கொடுக்காத நெஞ்சுரம் மிக்க வீர அழகுமுத்துக்கோன் விடுதலை போராட்டத்தில் நீங்கா இடம் பெற்றார்.

காளையார் கோயில் கோபுரம்

ஆங்கிலேயரை எதிர்த்துத் தென்தமிழகத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க போர்க்களம் காளையார் கோவில். பாண்டிய நாட்டின் பாடலில் இடம்பெற்ற பதினான்கு திருத்தலங்களில் ஒன்று திருக்கானப்பேர் என்று அழைக்கப்படும் காளையார் கோவில். மருதுபாண்டியருக்கு ஒரு பலமிக்க இராணுவக் கோட்டையாகத் திகழ்ந்தது. காளையார் கோவிலில் சோமேஸ்வரர் சந்நிதிக்கு எதிரிலுள்ள ராஜ கோபுரம் மருது சகோதரர்களால் கட்டப்பட்டதாகும்.

ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடும் முக்கிய போர்க்களமாகத் திகழ்ந்த காளையார் கோவிலை 1801ஆம் ஆண்டு அக்டோபர் 1இல் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். கோவிலை மீட்க நடைபெற்ற போரில் மருது சகோதரர்களைக் கைது செய்து தூக்கிலிட்ட ஆங்கிலேயர்கள், மருது சகோதரர்களின் கடைசி ஆசையின்படி உடலைக் காளையார் கோவில் கோபுர வாசலுக்கு எதிராகப் புதைத்தனர்.

இரண்டாவது அலங்கார ஊர்தியில்...

பாரதி என இவருக்குப் பெயர் சூட்டினார். சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா, சூரியோதயம், கர்மயோகி, தர்மம், பாலபாரதா, யங் இந்தியா ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றினார்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வூட்டும் கவிதைகளைப் படைத்து மக்களிடையே சுதந்திரத் தாகத்தை ஊட்டியமையால் தேசிய கவியாகப் போற்றப்படுகிறார். பெண்ணுரிமைப் போராளியாக, பெண் விடுதலைக்காக எழுச்சிமிகுப் பாடல்களைப் பாடியவர். குழந்தைத் திருமணத்தை எதிர்த்தவர். தாய்மொழியாம் தமிழைத் தெய்வமாகப் போற்றியவர். விடுதலை இயக்கத்தில் தீவிர பங்குகொண்டு ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு இலக்காகி, கடலூரில் கைது செய்யப்பட்டுச் சிறைவாசம் அனுபவித்தவர். 1921 செப்டம்பர் 12ஆம் நாள் அதிகாலையில் இயற்கை எய்தினார்.

தாய்த்தமிழின் உயர்வுக்காகவும், அறநெறிக்காகவும், அருந்தொண்டாற்றி, தனது புரட்சிகரமானக் கவிதைகளால் விடுதலை வேள்விக்கு வித்திட்டவர் முண்டாசுக் கவிஞர் பெரும்புலவன் மகாகவி பாரதியார்.

மகாகவி பாரதியார்

நெருப்பு மழை பொழியும் கட்டுரைகளையும், கனல் தெறிக்கும் கவிதைகளையும் எழுதி மக்கள் உள்ளங்களில் சுதந்திரத் தாகத்தை உருவாக்கியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

தூத்துக்குடி மாவட்டம், எட்டையப்புரத்தில் 1882ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் நாள் பிறந்தார், சுப்பையா என்றழைக்கப்பட்ட சுப்பிரமணியன். இவரது கவிபுனையும் ஆற்றலை அறிந்து, எட்டையப்புரம் ஜமீன்

வ.உ.சிதம்பரனார்

தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த புலமை பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர், வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் எனும் பன்முகத் தன்மை பெற்றவர் வ.உ.சிதம்பரனார்.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் 1872ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் பிறந்தார். தாலுகா அலுவலகத்தில் பணிபுரிந்த வ.உ.சி. 1895இல் ஒட்டப்பிடாரத்திலும், பின்னர், தூத்துக்குடியிலும் வழக்கறிஞராகத் திகழ்ந்தார். சுதேசி பிரச்சார சபை, தர்ம சங்க நெசவு சாலை, தூத்துக்குடி கைத்தொழில் சங்கம், சுதேசிய பண்டக சாலை, வேளாண் சங்கம் போன்றவற்றை ஏற்படுத்தினார்.

பாரதியாரின் நெருங்கிய நட்பாலும், சுவாமி இராமகிருஷ்ணானந்தர் சந்திப்பாலும், ஆங்கிலேயர்களுக்கு எதிராக 1907ஆம் ஆண்டு பிரித்தானியக் கப்பல்களுக்குப் போட்டியாக முதல் உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியமையால், ஆங்கிலேய அரசு தேசத்துரோக குற்றம் சாட்டி, 1908ஆம் ஆண்டு ஜீலை 8ஆம் தேதி 40 ஆண்டுக்காலம் சிறைத் தண்டனை விதித்தது. கோவை சிறையில் இவரைச் செக்கிழுக்க வைத்துச் சித்திரவதை செய்ததால் செக்கிழுத்த செம்மல் என அனைவராலும் போற்றப்படுகிறார்.

தமிழ் மொழியில் உள்ள பல்வேறு இலக்கியங்களைப் படித்து அவற்றைப் பற்றி கட்டுரைகளையும், செய்யுள்களையும் எழுதியுள்ளார். ஆங்கில நூல்களை மொழிபெயர்த்துள்ளார். ‘தமிழ்நேசன்’ பத்திரிகையை நடத்தினார். 1936ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் நாள் உயிர் நீத்தார்.

தியாகி சுப்பிரமணிய சிவா

இந்திய விடுதலைக்காகப் போராடிய ஆன்மீகப் போராளி தியாகி சுப்பிரமணிய சிவா. திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு என்ற ஊரில் 04.10.1884 அன்று பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்புராமன். சுப்பிரமணியன் என்றே அழைத்தனர். சதானந்த சுவாமிகள் இவரது பெயருடன் சிவம் என்ற பெயரையும் சேர்த்ததால் சுப்பிரமணிய சிவா என்று அழைக்கப்பட்டார்.

1906இல் ஆரிய சமாஜ் தொண்டர் தாகூர் தாஸ் அவர்களின் உரைகளால் அரசியல் சிந்தனை தூண்டப்பட்டு, 1907இல் திருவனந்தபுரத்தில் தர்ம பரிபாலன சமாஜம் என்ற அமைப்பை உருவாக்கினார். தனது சீற்றமிகு உரைகளால் இளைஞர் சமுதாயத்திடம் சுதந்திர வேட்கையை வீறுகொள்ளச் செய்தமையால் திருவனந்தபுரம் சமஸ்தானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். 1908 முதல் வ.உ.சிதம்பரனாருடன் இணைந்து செயலாற்றினார். ஸ்வராஜ் அல்லது சுயாட்சி அரசாங்கம் ஒன்றுதான் நிலையானது என்று கர்ஜித்தார். 1920இல் சுயராஜ்ய சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். ஞான பானு, பிரபஞ்சமித்திரன் ஆகிய மாத, வாரப் பத்திரிகைகளை நடத்தினார். பாப்பாரப்பட்டியில் பாரத மாதா ஆலயத்தை ஏற்படுத்த அடிக்கல் நாட்டினார். 1920இல் சென்னை டிராம்வே வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தினார். விவின் சந்திரபாலர் விடுதலையைக் கொண்டாடியதால் சிறை தண்டனைப் பெற்றார். சிவாவைப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளக் கூடாது என்று ஆஷ் துரை, விஞ்சு துரை ஆகியோர் தடை விதித்ததோடு, ராஜ துரோக குற்றத்திற்காகக் கைது செய்தது ஆங்கிலேய அரசு. 1921ஆம் ஆண்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட சிவா கொடிய தொழுநோயால் பாதிக்கப்பட்டார். 1925 ஜூலை மாதம் 23ஆம் நாள் மரணமடைந்தார்.

சேலம் விஜயராகவாச்சாரியார்

தேச விடுதலைக்காக அறுபது ஆண்டுகள் போராடிய தேசியத் தலைவர் சேலம் விஜயராகவாச்சாரியார். சேலத்து நாயகன் தென் இந்தியாவின் சிங்கம் எனவும் பாராட்டப்பட்டவர். மதுராந்தகம் அருகிலுள்ள களத்தூர் கிராமத்தில், 1852ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் தேதி பிறந்தார். 1875ஆம் ஆண்டில் சென்னை மாநிலக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

1881இல் சேலத்தில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். 1882இல் சேலம் மாநகரச் சபை உறுப்பினரானார்.

சேலத்தில் நடைபெற்ற இனக்கலவரத்தில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு 10 ஆண்டுகள் அந்தமான் தீவுக்கு நாடு கடத்தப்பட்டுச் சிறைத்தண்டனை பெற்றார். சிறையிலிருந்தபடியே நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தன்னைக் குற்றமற்றவர் என நிரூபித்து நஷ்ட ஈடும் பெற்றார். 1895இல் சென்னை மாகாண சட்டசபை உறுப்பினரானார்.

1913ஆம் ஆண்டு மத்திய கவுன்சில் உறுப்பினராகவும், 1920இல் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1927ஆம் ஆண்டு இந்தியாவிற்கு முதன்முதலாகத் தனி ஒரு மனிதனாக ஸ்வராஜ் அரசியல் அமைப்பு ஒன்றைத் தயாரித்துக் கொடுத்தார். இந்து மகாசபையின் தலைவராகவும், வ.உ.சி. நடத்திய சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் சட்ட ஆலோசகராகவும் இருந்துள்ளார். ஆலன் ஆக்டெவியன் ஹ்யூன் அவர்களுடன் தாதாபாய் நௌரோஜி, பாலகங்காதரத் திலகர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.

ஆசிரியர், சீர்திருத்தவாதி, தீண்டாமை எதிர்ப்பாளர், வழக்கறிஞர், சிறந்த அரசியலமைப்பு நிபுணர் எனப் பன்முகம் கொண்ட விஜயராகவாச்சாரியார் 1944 ஏப்ரல் 19ஆம் நாள் காலமானார்.

தந்தை பெரியார்

பகுத்தறிவுப் பகலவன் என்று போற்றப்படும் பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் தமிழகத்தின் முற்போக்குச் சிந்தனையாளர்களின் முன்னோடியாவார். ஈரோடு வெங்கட்ட இராமசாமி நாயக்கர் அவர்கள், ஈரோட்டில் 1879ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் பிறந்தார். விவசாயிகள் சங்கம், சங்கீத சபை எனப் பல்வேறு பொதுநல அமைப்புகளில் பதவி வகித்தார்.

வரதராஜுலு நாயுடு, இராஜாஜி ஆகியோரின் தொடர்பால் காங்கிரஸில் சேர்ந்து நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். காந்தியடிகள் கொண்டுவந்த மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, ஒத்துழையாமை இயக்கம்மீது ஆர்வம் கொண்டு தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தார். கள் தரும் மரங்களை அழிப்பதற்காக தன் சொந்த நிலத்திலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். கேரளா மாநிலம், வைக்கத்தில் தீண்டாமை, சாதிக் கொடுமையை எதிர்த்துப் போராடித் தாழ்த்தப்பட்டவர்கள் கோவிலுக்குள் நுழைவதற்கு அனுமதி பெற்றுத் தந்தமையால், வைக்கம் வீரர் எனப் போற்றப்பட்டார்.

குடியரசு வார இதழைத் தொடங்கி நடத்தினார். பின்னர் நீதிக் கட்சியில் சேர்ந்த ஈ.வெ.ரா. தமிழர்களுக்காகப் பாடுபட்டார். 1937இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் 'தமிழ்நாடு தமிழர்களுக்கே' என்று முழங்கி மறியல் போராட்டம் நடத்தினார். 13.11.1938 அன்று சென்னையில் நடந்த தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் மறைமலை அடிகளார் மகள் நீலாம்பிகை அம்மையார் 'பெரியார்' பட்டத்தை வழங்கினார். 1944ஆம் ஆண்டு நீதிக்கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றினார்.

தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்றும் கோவிலில் தமிழினில் அர்ச்சனை செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார். குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்தார். தன் வாழ்நாள் முழுவதும் அறியாமை, மூட நம்பிக்கை, சாதி வேற்றுமை ஆகியவற்றிற்கு எதிராகப் பாடுபட்டு, வெண்தாடி வேந்தர் என்றும் பகுத்தறிவுச் சிங்கம் எனவும் புகழப்பட்டார். 24.12.1973 அன்று இயற்கை எய்தினார்.

மூதறிஞர் இராஜாஜி

சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல். ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரி, கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளி கிராமத்தில் 10.12.1878 அன்று பிறந்தார். தமது நுண்ணறிவு பேச்சால், சுவாமி விவேகானந்தரால் வாழ்த்தப்பட்டவர். வழக்கறிஞராக சேலத்திலும், சென்னையிலும் பணியாற்றியவருக்கு அரசியலிலும் ஈடுபாடு ஏற்பட்டது. இராஜாஜியின் அறிவுத் திறமையைக் கண்ட காந்திஜி இவரை சத்தியாகிரக அமைப்பிற்குத் தலைவராக்கினார்.

1919இல் ஜாலியன்வாலாபாக் படுகொலை கண்டன ஆர்ப்பாட்டத்திற்காக ஆங்கிலேய அரசு மூன்று மாத சிறை தண்டனை வழங்கியது. 1937இல் சென்னை மாநில முதலமைச்சர் ஆனார். தாய்மொழிப்பற்று, கதர் மீது பற்று கொண்டவர். ஆலயப் பிரவேச சட்டம் கொண்டுவந்தவர். அணு ஆயுதங்களை ஒழிக்கவேண்டும் என்பதற்காகக் காந்தி அமைதி நிலையத்தின் தூதுவரான இவரது பணியை அமெரிக்க அதிபர் கென்னடி பாராட்டினார். இராமாயணம், மகாபாரதம், உபநிடதம், பகவத்கீதை ஆகியவற்றைத் தமிழில் சிறப்பாக எழுதினார்.

ஆங்கிலத்தில் பல நூல்களையும் கவிதைகளையும் எழுதியுள்ளார். 1917க்கு பின் காந்தியடிகளுடன் மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, தாழ்த்தப்பட்டோர் ஆலய நுழைவுப் போராட்டம், உப்புச் சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் போன்ற விடுதலை போராட்டங்களிலும் ஈடுபட்டுச் சிறை சென்றார். 1947இல் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்தார். ஏழையின் தோழராக விளங்கிய இராஜாஜி 1972இல் தன்னுடைய 95ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

தெய்வீகத்தையும், தேசியத்தையும் இரு கண்களாக போற்றி வளர்த்த முத்துராமலிங்கத்தேவர் அவர்கள் 1908 அக்டோபர் 30 அன்று பசும்பொன் என்ற சிறு கிராமத்தில் பிறந்தார். தலைசிறந்த பேச்சாளரும், ஆன்மீகவாதியும், சாதி மறுப்பாளராகத் திகழ்ந்தார். 1936இல் தென்தமிழகத்தில் காங்கிரஸ் வளர்ச்சிக்காக உழைத்தார். 1937இல் இராமநாதபுரம் தொகுதியில் வெற்றி பெற்றார். 1939இல் வைத்தியநாதர் ஐயர் நடத்திய மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்குள் அரிஜனங்களை அழைத்துச் செல்லும் போராட்டத்திற்கும் ஆதரவு அளித்தார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோசுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். சுபாஷ் சந்திரபோஸ் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியைத் தொடங்கியவுடன் அவருடன் இணைந்தார். தொழிலாளர்களின் போராட்டங்களைக் காரணம் காட்டி மதுரையை விட்டு அவர் வெளியே செல்லாத வகையில் மதுரா பாதுகாப்பு என்ற பெயரில் ஆங்கிலேய அரசு வழக்குத் தொடுத்தது.

நேதாஜி என்ற வாரப் பத்திரிகையை நடத்தினார். 1952 மற்றும் 1957இல் பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் அருப்புக்கோட்டை லோக்சபை மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும் போட்டியிட்டு வென்றார்.

தம் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கைச் சிறையில் கழித்த பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் 1963ஆம் ஆண்டு அக்டோபர் 29ஆம் தேதி இயற்கை எய்தினார்.

கர்மவீரர் காமராஜர்



நாட்டு நலனையே தன் நலனாகக் கொண்ட தன்னலமற்ற தலைவர் கர்மவீரர் பெருந்தலைவர் காமராஜர், விருதுப்பட்டியில் 1903ஆம் ஆண்டு ஜீலை மாதம் 15ஆம் நாள் பிறந்தார். ஆறு வயதில் தந்தையை இழந்து தொடக்கக் கல்விக்கே முற்றுப்புள்ளி வைத்து மாமாவின் ஜவுளிக்கடையில் வேலைக்குச் சேர்ந்தார்.

மகாத்மா காந்தியின் தொண்டராக ஆங்கிலேயரை எதிர்த்தார். 1930இல் உப்பு சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார். 1947 மற்றும் 1950இல் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவரானார். 1952இல் விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினரானார். 1954 மற்றும் 1957இல் முதலமைச்சரானார்.

முதலமைச்சராக இருந்தபோது கிராமங்கள்தோறும் தொடக்கப்பள்ளிகளைத் தொடங்கிவைத்து, மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி, கல்விப் பணி ஆற்றினார். பல்வேறு அணைகளைக் கட்டி, பாசன வசதியை ஏற்படுத்தி, வேளாண்மை வளர்ச்சிக்கு வழிகோலினார். 57 ஆண்டுகள் நாட்டுக்காக அரும்பாடுபட்டு வாய்மை, தூய்மை, நேர்மையின் இலக்கணமாகத் திகழ்ந்து, மக்கள் தொண்டாற்றியவர். கர்மவீரர் என்றும், பெருந்தலைவர் என்றும், கிங் மேக்கர் எனவும் போற்றப்படும் கர்மவீரர் காமராஜர் அவர்கள் 02.10.1975 அன்று இயற்கை எய்தினார்.

இரட்டைமலை சீனிவாசன்



சமூக சீர்திருத்தவாதி, வழக்குரைஞர், ஆதித்தமிழர் மக்களுக்காகக் குரல் கொடுத்த இந்தியத் தேசியவாதி.

காஞ்சிபுரம் மாவட்டம், கோழியாளம் கிராமத்தில் 07.07.1859 அன்று விவசாயக் குடும்பத்தில் இரட்டைமலை சீனிவாசன் பிறந்தார். வறுமை காரணமாகப் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு தீண்டாமை கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதைப் பற்றிச் சிந்தித்தார்.

1891இல் பறையர் சபையையும், 1893இல் "பறையன்" பத்திரிகையையும் ஆரம்பித்தார். 1893இல் தாழ்த்தப்பட்டோருக்கு மேல்தரை பதவி வகிப்பதற்கு அனுமதி தரக் கூட்டத்தைக் கூட்டினார். சென்னை சர்வகலா சங்கத்தில் உறுப்பினராகி ஆதிதிராவிட மக்களுக்குக் குடியிருக்க வீட்டுமனைப் பட்டாக்களும், விவசாயம் செய்வதற்கு நிலங்களும், குழந்தைகளுக்குக் கல்வி வசதியும் பெற்றுத் தந்தார். பஞ்சமி நிலங்களை மீட்டார்.

1900ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளுடன் பழக்கம் ஏற்பட்டு, அவருக்குத் தமிழையும், திருக்குறளையும் கற்றுக் கொடுத்தார். 1930–1932ஆம் ஆண்டுகளில் இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். ஆங்கிலேய அரசு ராவ் சாகிப், ராவ் பகதூர், திவான் பகதூர் பட்டங்களை வழங்கி கௌரவித்தது. 1923 முதல் 1938 வரை தாழ்த்தப்பட்டோரின் உறுப்பினராகச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1940இல் மூதறிஞர் இராஜாஜி தலைமையில் தமிழ்த்தென்றல் திரு.வி.க. முன்னிலையில் திராவிடமணி பட்டம் வழங்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகத் தன் ஆயுள் முழுவதும் அயராது பாடுபட்ட இரட்டைமலை சீனிவாசன் 18.09.1945 அன்று இயற்கை எய்தினார்.

வீர வாஞ்சிநாதன்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் புரட்சிப்பாதையில் போராடிய இளைஞன் வீர வாஞ்சிநாதன். செங்கோட்டை, அம்பிகாபுரம் என்ற ஊரில் 1886ஆம் ஆண்டு பிறந்தார். தமிழ், ஆங்கிலம், மலையாளம், சமஸ்கிருதம் மொழிகளில் வல்லமை பெற்றவர் வாஞ்சி.

ஆங்கிலேய ஆட்சியை ஒழித்துக் கட்ட நண்பர்களுடன் திட்டம் தீட்டினார். 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யை வ.உ.சி. தொடங்கியமையால், பெரும் நஷ்டமடைந்த ஆங்கிலேயர்கள், திருநெல்வேலி கலெக்டர் ஆஷ்துரையின் உத்தரவின்படி, 'சுயராஜ்ஜிய தினம்' கொண்டாடியமைக்காக வ.உ.சி., சுப்பிரமணிய சிவா இருவரையும் ராஜ துவேஷ வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

எருக்கூர் நீலகண்டன், வாஞ்சி மற்றும் இளைய தலைமுறையினர் ஒன்று கூடி பாரத மாதா சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினர். 1910ஆம் ஆண்டு கலெக்டர் ஆஷ்துரைக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பினர். புதுச்சேரியில் வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கிச் சுடும் பயிற்சி எடுத்த வாஞ்சி, ஜுன் 17ஆம் தேதி புகை வண்டி மூலம் ஆஷ்துரை கொடைக்கானல் செல்வதை அறிந்து, தன் நண்பர்களுடன் சென்று, மணியாச்சி இரயில் நிலையத்தில் ஆஷ்துரையைச் சுட்டுக்கொன்றார். தன்னையும் சுட்டுக்கொண்டு தன் சுதந்திர தியாகத்தை உலகறியச் செய்தார்.

தீரன் சின்னமலை

ஆங்கிலேய அரசை எதிர்த்த தமிழகத்தின் இந்திய விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை, காங்கேயத்தை அடுத்த செ.மேலபாளையம் சிற்றூரில் 1756ஆம் ஆண்டு ஏப்ரல் 17அன்று பிறந்தார். இவரது இயற்பெயர் தீர்த்தகிரி கவுண்டர்.

கொங்கு நாட்டை மைசூர் மன்னன் ஆட்சி செய்ததமையால், மைசூருக்குச் சங்ககிரி வழியாக எடுத்துச் சென்ற கொங்கு நாட்டு வரிப்பணத்தைப் பிடுங்கி தீர்த்தகிரி ஏழைகளுக்கு விநியோகித்தார். தண்டல்காரன் தீர்த்தகிரியிடம் நீ யாரெனக் கேட்க, சென்னிமலைக்கும் சிவன் மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை பறித்ததாகச் சொல் என்று சொல்லி அனுப்பினார். அது முதல் சின்னமலை என்று அழைக்கப்பட்டார்.

1782இல் திப்புசுல்தான் மைசூர் ஸ்ரீரங்கப்பட்டணத்தில் ஆட்சிக்கு வந்து ஆங்கிலேயரை எதிர்த்தபோது மாவீரன் சின்னமலை கொங்கு இளைஞர்களைத் திரட்டி மைசூர் சென்று உதவினார். இதனால் கோபம் அடைந்த ஆங்கிலேயப் படைத்தலைவர் மேக்ஸ்வெல் ஓடாநிலைக் கோட்டையைக் கைப்பற்ற போர்தொடுத்தார். இரண்டு முறை போர்தொடுத்தும் தீரன் சின்னமலையே வென்றார். ஆங்கிலேயர் நயவஞ்சகத்தனத்தோடு சமையல்காரனைக் கருவியாக்கி உணவருந்தச் சென்றபோது கைது செய்து 1806ஆம் ஆண்டு சின்னமலையையும் அவரது தம்பிகளையும் தூக்கிலிட்டனர்.

கொடிகாத்த குமரன்

ஆங்கிலேயரை எதிர்த்த போராட்டத்தில் காவலர்களால் தாக்கப்பட்டு மயங்கிய நிலையிலும் தேசியக்கொடியைக் கையிலே ஏந்தியபடியே இருந்த சுதந்திரப்போராட்ட தியாகி திருப்பூர் குமரன். ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் 1904ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் நாள் பிறந்தார். இவர் இயற்பெயர் குமாரசாமி.

மகாத்மா காந்தியடிகளின் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, அகிம்சை முறையில் அறப்போராட்டங்களில் ஈடுபட்டார். பருத்தி நிறுவனத்தில் பணியாற்றி வந்தாலும் தேசிய வாலிபர் சங்கத்தில் உறுப்பினராகி இரவு பகல் பாராமல் தேசத் தொண்டுகளைச் செய்தார். 1930இல் காந்தியடிகளின் உப்புச்சத்தியாகிரகம் வலுப்பெற்ற காலத்தில் தேசபந்த வாலிபர் சங்க உறுப்பினர்களுடன் மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டார்.

10.01.1932 அன்று தேசபந்து வாலிபர் சங்க அறப்போராட்டத்தில் திருப்பூர் குமரன் மூவண்ணக் கொடியைக் கையில் ஏந்தியபடி ஈடுபட்டார். அறப்போர் வீரர்களைக் காவலர்கள் வெறிநாயைத் தாக்குவது போல் சூழ்ந்துகொண்டு தாக்கினர். தாக்குதலில் குமரனின் மண்டைஓடு உடைந்து இரத்தம் பீரிட்டு வெளியே பாய்ந்து, சாய்ந்த நிலையிலும் கையிலிருந்த மூவண்ணக் கொடியைப் பிடித்துக்கொண்டே இருந்தார். 11.01.1932 அன்று குமரனின் உயிர் பிரிந்தது.

தன்னுடல் மண்ணில் விழுந்தாலும், தன் உயிர்க்கூட்டை விட்டுப் பிரிந்தாலும், ஏந்திய கொடி கீழே சாய்ந்திட அனுமதியேன் என்று தன்னுயிர் கொடுத்து நாட்டின் மானம் காத்த திருப்பூர் குமரனின் பெருமை இந்திய வரலாற்றில் தனிப் பெருமை வாய்ந்தது.

வ.வே.சுப்பிரமணிய ஐயர்

எழுத்தாளராக, சிறந்த பத்திரிகையாளராக, ஒழுக்க சீலராகத் தமிழ் இலக்கியத்தில் தேர்ந்தவராக நேர்மை தவறாத விடுதலை வீரர் வ.வே.சு. ஐயர். திருச்சி, வரகனேரியில் 02.04.1881 அன்று பிறந்தார். இவருடைய முழுப்பெயர் வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர்.

இலண்டனில் இந்தியா விடுதியில் தங்கி பாரிஸ்டர் பட்டம் பயின்ற ஐயர், பாரிஸ்டர் பட்டம் பெறும்போது, பிரிட்டிஷ் அரசுக்குரிய விசுவாச பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதால் அப்பட்டத்தை ஏற்கவில்லை. இதனால் சந்தேகமடைந்த ஆங்கிலேய அரசு இந்தியா விடுதியைக் கலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு, குரு சாவர்க்கரை கைது செய்தது. இதனால் இலண்டனில் இருந்த இந்தியத் தேசபக்தர்களும், ஐயரும் இலண்டன் நகரிலிருந்து வெளியேறி, பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிஸ் நகருக்குச் சென்றனர்.

இந்தியாவுக்கு அழைத்துவரப்பட்ட சாவர்க்கருக்கு ஆங்கிலேய அரசு ஐம்பது ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்தை அறிந்து மாறுவேடத்தில் இந்தியாவிற்கு வந்தார் வ.வே.சு. ஐயர். புதுச்சேரியில் தங்கியிருந்த வ.வே.சு.ஐயரைப் பிடித்துவிட எண்ணிய ஆங்கிலேய அரசு புதுச்சேரியில் தமிழக இளைஞர்களுக்குத் துப்பாக்கிச் சுடும் பயிற்சியை வழங்கியதாக ஆஷ்துரை வழக்கில் வ.வே.சு.ஐயர் மீது வழக்குப் பதிவு செய்தது.

திருநெல்வேலி, சேரன்மகாதேவியில் தமிழ்நாட்டின் குருகுலம் என்ற குருகுலத்தை ஏற்படுத்தினார். பாலபாரதி என்ற மாத இதழை நடத்தினார். தேசபக்தி என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். பல சிறந்த நூல்களையும் எழுதினார். 03.06.1925 அன்று குற்றால அருவியில் கால் இடறித் தவறி விழுந்த தனது மகளை மீட்கச் சென்றபோது, அருவியில் மூழ்கி உயிரை இழந்தார்.

கண்ணிய தென்றல் காயிதேமில்லத்



கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், பேட்டையில் 1896ஆம் ஆண்டு ஜுன் 5ஆம் நாள் பிறந்தார். இவருடைய இயற்பெயர் முகம்மது இஸ்மாயில் சாகிப். தமது சிறு வயதிலேயே கல்வியில் ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

பொது வாழ்க்கையில் கண்ணியத்தையும், நேர்மையையும் அணு அளவுக்கூட இழக்காமல் தேசப்பணி, மார்க்கப்பணி செய்தார். அண்ணல் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். 1920 முதல் பதினாறு வருடகாலம் காங்கிரஸின் பெருந்தலைவர்களில் ஒருவராக இருந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்.

1936ஆம் ஆண்டு ஜின்னாவின் அழைப்பை ஏற்று முஸ்லீம் லீக்கில் சேர்ந்து, பின்னாளில் ராஜ்ஜிய முஸ்லீம் லீக்கின் தலைவராகப் பொறுப்பேற்றார். 1947இல் இந்தியா–பாகிஸ்தான் என்று நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, முஸ்லீம் லீக் இரண்டாகப் பிரிந்ததால், இந்திய யூனியன் மூஸ்லீம் லீக்கின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டு, 1948ஆம் ஆண்டில் தலைவரானார். 1946இல் சென்னைச் சட்டப்பேரவை உறுப்பினரானார். 1952 வரை சென்னை மாநிலச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

1948 முதல் 1950 வரை மத்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக இருந்து, எல்லா மதத்தினருக்கும், எல்லா ஜாதியினருக்கும் ஏற்புடையதாக இருக்கக் கூடிய ஓர் அரசியல் திட்டத்தைத் தீட்டினார். 1952 முதல் 1958 வரையும், பின்னர் 1962இல் கேரளத்தில், மஞ்சேரித் தொகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினரானார். 05.04.1972 அன்று இயற்கை எய்தினார்.

ஜே.சி. குமரப்பா

எளிமையிலும், கொள்கையிலும் காந்தியவாதியாகத் திகழ்ந்த ஜே.சி.குமரப்பா 1892ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் நாள் தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் ஜோசப் செல்லத்துரை கொர்னலியஸ்.

காந்தியடிகள் உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டபோது, காந்தியடிகளின் "யங் இந்தியா" பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகத் தொடர்ந்து எழுதி வந்தார்.

1931ஆம் ஆண்டு ராஜதுவேஷ எழுத்துக்காக ஒன்றரை ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டார். பின்னர், 1932ஆம் ஆண்டு இரண்டாண்டுகள் கடுங்காவல் தண்டனைப் பெற்றார்.

உணவுக்கான பயிர் விளைய வேண்டிய இடத்தில், பணப்பயிர்கள் விளைவதையும், உடலுக்கு ஊறு விளைவிக்கும், புகையிலை விளைவதையும் அவர் எதிர்த்தார். இயற்கையோடு இணைந்த தொழில்களே பலநூறு ஆண்டுகள் தொடரும் என்றார்.

காந்தியப் பொருளாதார நிபுணராகவும், கிராமங்களுக்கான பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துத் தந்தவருமான ஜே.சி.குமரப்பா 1960ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் தேதி இயற்கை எய்தினார்.

தியாகச் சீலர் கக்கன்

தியாகச் சீலர் என்று அனைவராலும் அழைக்கப்பட்ட கக்கன் 1909ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18ஆம் தேதி மதுரை மாவட்டம், தும்பைப்பட்டி எனும் கிராமத்தில் பிறந்தார்.

1932ஆம் ஆண்டு ஏற்பட்ட பூனா ஒப்பந்தப்படி 10 ஆண்டுகளில் தீண்டப்படாதவர்களுக்கு இந்து சமுதாயத்தில் இருக்கும் அனைத்துச் சிவில் உரிமைகளும் தரப்பட வேண்டும் என அம்பேத்கரும், காந்தியடிகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் போராட்டங்கள் மூலம் செயலாக்கிக் காட்டினார். காந்தியடிகளின் தீண்டாமை ஒழிப்பின் இதயமான கோயில் நுழைவுப் போராட்டத்தில் கலந்துகொண்டு தேச விடுதலைக்கு வழிவகுக்கத் தன்னை அர்ப்பணித்தார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு ஒன்றரை ஆண்டுக்காலம் தஞ்சை சிறையில் அடைக்கப்பட்டார்.

காந்தியடிகளால் பாராட்டப்பட்டார். 1946இல் அரசியல் நிர்ணயசபை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். 1954 முதல் 1957 வரை மூன்றாண்டுக் காலம் காங்கிரஸ் தலைவராகப் பதவி வகித்தார். 1957இல் மேலூர் சட்டமன்ற உறுப்பினரானார். 1957இல் காமராஜர் அமைச்சரவையில் இடம்பெற்று சீரிய முறையில் தொண்டாற்றினார்.

கடமையே கடவுளென வாழ்ந்து, தன்னையே அழித்து நாட்டிற்கு ஒளி கொடுத்த தீயாகச் சீலர் கக்கன் 28.12.1981 அன்று இயற்கை எய்தினார்.

நீட் விலக்குச் சட்டமுன்வடிவு மீண்டும் நிறைவேற்றும் இந்நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.02.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நீட் தேர்வு விலக்குத் தொடர்பான சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தில் ஆற்றிய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் மக்களால் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் ஆட்சிமுறை நிறுவப்பட்டபோது, சென்னை மாகாணத்திலும் தேர்தல் நடந்தது. 1920ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி ஆட்சி அமைத்தது. அது பிரிட்டிஷ் ஆட்சிக் காலம். இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்களெல்லாம் சென்னை மாகாணத்துச் சட்டமன்றம் எப்படி நடக்கிறது என்பதைப் பார்க்க வந்ததாகவும், அப்போது இந்தியாவிலேயே சென்னை மாகாணத்தின் நிருவாக நெறிமுறைப்படி, சட்டத்தினுடைய ஆட்சி நடப்பதாகவும் அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட மக்களாட்சியின் விழுமியங்களை உருவாக்கிய மாமன்றத்தில் இந்த நாள் என்பது, மிக முக்கியமான நாளாகும். ஜனநாயகம் காக்க, மக்களாட்சியின் மாண்பைக் காப்பாற்றுவதற்காக, கூட்டாட்சித் தத்துவத்தை நிலைநிறுத்துவதற்காக, கல்வி உரிமையை வென்றெடுப்பதற்காக நாம் இன்று கூடியிருக்கிறோம். ஏதோ நீட் தேர்வுக்கு எதிராக விவாதிப்பதற்காக மட்டும் நாம் கூடவில்லை. நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தின் இறையாண்மையை, உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகவும் கூடியிருக்கிறோம். பல்வேறு, இனம், மொழி, பண்பாடுகள் கொண்ட இந்தியப் பெருநாட்டை உண்மையில் காக்கும் உன்னதமான தத்துவம் என்பது கூட்டாட்சித் தத்துவம்! அந்தக் கூட்டாட்சித் தத்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக நாம் இங்கே கூடியிருக்கிறோம். பதினாறு வயதில் அரசியல் களத்தில் நான் நுழைந்தேன். எனது பொதுவாழ்வில் மறக்க முடியாத நாளாக இந்த நாள் அமைந்துள்ளது. அந்த உணர்வோடுதான் நான் இந்த மாமன்றத்தில் நின்று கொண்டிருக்கிறேன்.

நூறாண்டுகளுக்கு முன்பே சமூக நீதிக்கு அடித்தளம் போட்டது இந்தச் சட்டமன்றம். நமது அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டு வர உந்து சக்தியாக விளங்கியது இந்தச் சட்டமன்றம். பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு; பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு இட ஒதுக்கீடு; சிறுபான்மையின மக்களுக்கு உள் ஒதுக்கீடு; அருந்ததியின சமுதாயத்திற்கு உள் இட ஒதுக்கீடு எனச் சமூக நீதிக்கு வழங்கியது இந்தச் சட்டமன்றம். அகில இந்திய அளவில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு, ஒன்றிய அரசுப் பணிகளில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் மண்டல் கமிஷன் அறிக்கையைச் செயல்படுத்த வைத்ததும் இந்தச் சட்டமன்றம்தான். ஏன், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதி செய்ததும் இந்தச் சட்டமன்றம்தான்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பொறியியல் உள்ளிட்ட தொழிற் கல்வியில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கியது இந்தச் சட்டமன்றம். அகில இந்தியத் தொகுப்பிற்கு அளிக்கும் மருத்துவ இடங்களில், 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டைத் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்த இந்தியத் துணைக் கண்டத்திற்கே பெற்றுத் தந்ததும் இந்தச் சட்டமன்றம்தான். இன்றைக்கு இருக்கின்ற 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நாட்டிலேயே முதல்முறையாகத் தமிழ்நாட்டில் செயல்படுத்தி, சாதனை படைத்தது இந்தச் சட்டமன்றம். அதற்கான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்ய, அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்துச் சமூக நீதியில் மாபெரும் வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியது இந்தச் சட்டமன்றம்தான். மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு இருந்த நுழைவுத் தேர்வை ரத்து செய்து, இதே சட்டமன்றத்தில்தான் சட்டம் இயற்றப்பட்டது. அப்போது இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார். அந்த நுழைவுத் தேர்வு ஒழிப்புச் சட்டம் செல்லும் என்று கூறி, சென்னை உயர்நீதிமன்றமும், நம் நாட்டின் உச்சநீதிமன்றமும் துணை நின்றதும் இந்தச் சட்டமன்றத்திற்குத்தான்.

நுழைவுத் தேர்வு வேண்டாம் என்று கூறி, குடியரசுத் தலைவர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சட்டம், தமிழ்நாட்டில் 10 ஆண்டுக் காலம் நடைமுறையிலிருந்தது. பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்விக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டிருந்தோம். கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள ஏழைகளிலும், நடுத்தர வர்க்கத்திலிருந்தும்

எண்ணற்றவர்கள் மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும் பட்டம் பெற்று, இன்று பார் போற்ற, மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சமூக நீதி, சட்ட நீதி, ஒடுக்கப்பட்டோர் உரிமை, தமிழினத்தின் மேன்மை, மொழி மேம்பாடு ஆகிய அனைத்துக்கும் அடித்தளம் அமைத்த இந்தச் சட்டமன்றத்தில் நின்று ''நீட் என்ற சமூக அநீதியை அகற்ற, இந்தச் சட்டமன்றத்தால் முடியும்; நிச்சயமாக முடியும்'' என்ற தன்னம்பிக்கையுடன் நான் பேசிக் கொண்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று எட்டு மாதத்திற்குள் சிறப்புச் சட்டமன்றக் கூட்டத்தை இன்று நாம் கூட்டியிருக்கிறோம். இதேபோன்றுதான், ஆட்சிப் பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே, அதாவது, 1968 சனவரி 23ஆம் நாள் சிறப்புச் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டினார், முதலமைச்சராக இருந்த பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். அதில்தான், தமிழ்நாட்டு மாணவர்களின் தாகத்தைத் தீர்த்து, நமது மொழியுரிமையை நிலைநாட்டிய, வரலாற்றுப் பிரகடனமாக இருமொழிக் கொள்கையை நிறைவேற்றினார், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்.

அந்தத் தீர்மானத்தில், ''பல்வேறு மொழி, பண்பாடு, நாகரிகங்களைக் கொண்ட இந்தியாவில் ஒரு வட்டார மொழியை மட்டும் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டிருப்பது; இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து; ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமைகொள்ளச் செய்திடும் என்று உணரப்படும் காரணத்தால், தமிழும் மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம், திருத்தப்பட வேண்டும். அது வரையில், ஆங்கிலமே ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்து வர வேண்டும். அதற்கு ஏற்றபடி, இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது'' என்றும், ''தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, 'இந்தி' மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது'' என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களால் அரசியல் களத்தில் பயிற்றுவிக்கப்பட்ட நாம், இந்தியா முழுமைக்குமான சமூக நீதிக் கல்விக் கொள்கையை முன்மொழிவதற்காக இந்தச் சிறப்புச் சட்டமன்றக் கூட்டத்தில் இப்போது நாம் கூடியிருக்கிறோம். நாம் அனைவரும் ஒருங்கிணைந்து, ஒற்றுமையுடன் செயல்பட்டு, சமூக நீதியை நிலைநாட்டிட, மாணவர்களின் மருத்துவக் கல்வி தாகத்தைத் தணித்திடக் கூடியிருக்கிறோம். நூற்றாண்டு கண்ட வரலாற்றுப் புகழ்மிக்க கொள்கை முடிவுகளை மேற்கொண்ட உன்னதமான இந்த அவையின் இறையாண்மையைக் காப்பாற்றிட, 8 கோடி மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் இந்தச் சட்டமன்றத்திற்கு, அரசியல் சட்டம் வழங்கியுள்ள சட்டமியற்றும் அதிகாரத்தைப் பாதுகாத்திட நாம் இன்று கூடியிருக்கிறோம்.

நீட் தேர்வு என்பது அரசியலமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட தேர்வு முறை கிடையாது. அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்ற தேர்வு முறையும் கிடையாது. நீட் என்பது இந்திய மருத்துவக் கவுன்சில் ஒழுங்குமுறை விதிப்படி உருவாக்கப்பட்ட ஒரு தேர்வுதான். 2010ஆம் ஆண்டு இப்படி ஒரு தேர்வு முறை முன்மொழியப்பட்டபோதே அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களும் எதிர்த்தது. இந்தியா முழுவதும் 115 வழக்குகள்

ஊரகப் பகுதி மாணவர்கள் பாதிப்பு

நீட் தேர்வு அமலாவதற்கு முன்பு

2010 – 2017 ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த 61.45 சதவீத மாணவர்களுக்கு அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம்.

நீட் தேர்வு அமலான பின்பு

நீட் தேர்வு அமலான பிறகு, அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம்பெற்ற ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் அளவு சராசரியாக 50.81 சதவீதமாகச் சரிவு.

சுயநிதிக் கல்லூரிகளில் சேரும் ஊரகப் பகுதி மாணவர்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைவு

இந்தத் தேர்வுக்கு எதிராகப் போடப்பட்டன. அப்படி வழக்குப் போட்டதில் தமிழ்நாடு முதன்மை மாநிலம். இந்த வழக்குகளை மொத்தமாக உச்சநீதிமன்றம் விசாரித்தது.

இந்தத் தேர்வு அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றமே 18 ஜூலை 2013 அன்று தீர்ப்பளித்தது. அதுவும் உச்சநீதிமன்றத்தினுடைய தலைமை நீதியரசரின் அமர்வே அந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அத்தோடு இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அந்தத் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால், ஒன்றிய அரசாக பா.ஜ.க. அரசு அமைந்த பிறகு, ஒரு தனியார் பயிற்சி நிறுவனம் இந்த வழக்கை மீண்டும் கையில் எடுத்தது. உச்சநீதிமன்றத்தில் நீட் தேர்வு குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணைக்கு வந்தவுடனே, "Judgement is recalled" என்றும் "Hear this case afresh" என்றும்தான் 24.05.2016 அன்று உச்சநீதிமன்றம் கூறியது. இதன் அடிப்படையில்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு 11.04.2016 அன்று ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்து, நாடு முழுவதும் நீட்டைச் செயல்படுத்தியது.

நீட் தேர்வு என்பதே தனியார் பயிற்சி நிறுவனங்களுக்குச் சாதகமானதுதான். இந்தத் தேர்வின் மூலமாக மாணவ, மாணவியரிடம் இருந்து இலட்சக்கணக்கில் பணம் வசூலிக்கிறார்கள். அந்த நிறுவனங்களின் நன்மைக்காக மட்டுமே இந்தத் தேர்வு இன்றுவரை பயனுள்ளதாக இருக்கிறது. இவ்வளவு பணத்தைச் செலுத்திப் பயிற்சி பெற முடியாதவர்களுக்காகத்தான் நாம் நீட் விலக்குக் கேட்கிறோம். மசோதாவைக் கொண்டு வருகிறோம். நீட் தேர்வு என்பது ஏழை, எளிய மாணவர்களது கல்வி உரிமைக்குத் தடை போடுகிறது. அவர்களது மருத்துவக் கனவில் தடுப்புச் சுவர் எழுப்புகிறது. ''நீ டாக்டர் ஆக முடியாது'' என்று தடுக்கிறது. ''உனக்குத் தகுதியில்லை'' என்று

தடுக்கிறது. அதனால்தான் நீட் விலக்கு மசோதாவைக் கொண்டு வருகிறோம். அந்தத் தேர்வில் நடந்த முறைகேடுகளை நான் இந்த மாமன்றத்தில் அதிகம் விளக்கிச் சொல்லத் தேவையில்லை. இருந்தாலும் நான் சிலவற்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2019ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக 4 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2020ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக 5 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2021ஆம் ஆண்டு தேர்வில் 15 பேர் முறைகேடு செய்ததாக ஒன்றிய அரசே மக்களவையில் கூறியிருக்கிறது. ஆள்மாறாட்டம் செய்வது, வினாத்தாள்களைத் திருடுவது, விடைத்தாள்களை மாற்றி வைப்பது என அனைத்து முறைகேடுகளும் நடந்துள்ளன. இதனை சி.பி.ஐ. வழக்காகவும் பதிவு செய்துள்ளது. நம்முடைய தமிழ்நாடு மட்டுமல்ல, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் நீட் தேர்வு முறைகேடு தொடர்பாகப் பல்வேறு வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதியதாக உதித் சூர்யா என்ற மாணவரும், அவரது தந்தை வெங்கடேசனும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதுவரை 5 மாணவர்கள், அவர்களின் பெற்றோர் 6 பேர், ஒரு இடைத்தரகர் என 12 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதிய 10 பேரின் புகைப்படங்களை நம் மாநில சி.பி.சி.ஐ.டி. போலீசார் வெளியிட்டு இருக்கிறார்கள். கோவை மாணவர் ஒருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில், இது விஷயமாக வழக்குத் தொடர்ந்தார். எதற்காக என்று கேட்டால் 700க்கு என்னுடைய மதிப்பெண் 594 என்று அக்டோபர் 5ஆம் தேதி இணையத்தில் காட்டுகிறது. அக்டோபர் 17ஆம் தேதி 248 என்று காட்டுகிறது. இது சம்பந்தமாக வழக்குப் போட்டிருக்கிறார். தேர்வை நடத்தக்கூடியவர்கள் இதற்கு விளக்கம் தந்தாகவேண்டும். ஆனால் அதைப்பற்றிச் சொல்லாமல், வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கு மனு போட்டார்கள். 09.02.2021 அன்று சென்னை உயர்நீதிமன்றம், ''நீட் தேர்வு விடைத்தாள் முறைகேடு மோசடி வழக்கை சி.பி.ஐ.க்கு ஏன் மாற்றக் கூடாது'' என்று ஒரு கேள்வி எழுப்பியது. இன்னொரு மாணவி தனது விடைத்தாள்களில் முறைகேடு நடந்திருப்பதாகவும், தான் ஒரே ஒரு கேள்விக்கு மட்டுமே பதிலளிக்காத நிலையில், விடைத்தாளில் 11 கேள்விகளுக்குப் பதிலளிக்காதது போல இருக்கிறது என்றும் வழக்குப் போட்டார்.

நீட் தேர்வு முறைகேட்டில் ஈடுபட்ட 15 மாணவர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக மக்களவையில் ஒன்றிய அரசே 03.12.2021 அன்று அறிவித்திருக்கிறது. கடந்த 29.09.2021 அன்று உச்ச நீதிமன்றத்தில் மாணவர்கள் சிலர் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். செப்டம்பர் 12 அன்று நடந்த நீட் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளன. ஆள்மாறாட்டம் நடந்துள்ளது எனவே தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று அதில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

ஆகவே, நாம் சொல்ல விரும்புவது என்னவென்றால், நீட் தேர்வு ஒன்றும் வானத்திலிருந்து குதித்துவிடவில்லை; பல்வேறு குளறுபடிகளோடு ஏழை, எளிய மாணவர்களைத் தகுதி என்ற பெயரில் ஓரங்கட்டக் கொண்டுவரப்பட்ட தேர்வு. அதனால்தான் இந்தத் தேர்வை நாங்கள் எதிர்க்கிறோம்; அதிலிருந்து விலக்கு கோருகிறோம். நீட் தேர்வு என்பதைவிட, அதை 'மாணவர்களைக் கொல்லும் தேர்வு' என்றே கூறிட வேண்டும். நீட் என்பது தேர்வு அல்ல, ஒரு பலிபீடம். அரியலூர் அனிதா உள்ளிட்ட பல மாணவச் செல்வங்களை, இந்தியாவின் வருங்காலத் தலைமுறையை நாம் இழந்திருக்கிறோம். அந்தக் குழந்தைகளை, இளம் பிஞ்சுகளைப் பெற்றோர்கள் மட்டும் பறிகொடுக்கவில்லை; நாமும் இழந்தோம்! தமிழ்நாடு மட்டுமல்ல; இந்திய நாடே பறிகொடுத்துள்ளது.

சில மாணவர்களைக் கல்லறைக்கும், சில மாணவர்களைச் சிறைச்சாலைக்கும் அனுப்பிய இந்த நீட் தேர்வு தேவையா என்பதுதான் இந்த மாமன்றத்தில் நான் எழுப்பக்கூடிய கேள்வி. நான் மட்டுமல்ல; ஒட்டுமொத்த மாணவச் சமுதாயமும் பெற்றோர்களும் எழுப்பக்கூடிய கேள்வி. அதனால்தான் நீட் தேர்விலிருந்து விலக்கு பெறும் மசோதாவை நாம் நிறைவேற்றினோமே தவிர; ஏதோ எடுத்தேன், கவிழ்த்தேன் என்று நிறைவேற்றிவிடவில்லை. பல மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்த இந்த நீட் தேர்விலிருந்து விலக்குப் பெறுவதே தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நன்மை பயக்கும். நீட் தேர்வு சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதா என்பதைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்திட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் டாக்டர் ஏ.கே. இராஜன் தலைமையில் 10.06.2021 அன்று ஒரு குழு அமைக்கப்பட்டது. மக்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது. அந்தக் கருத்துகளின் அடிப்படையில், 14.07.2021 அன்று இக்குழு 193 பக்க அறிக்கையை அரசுக்கு அளித்தது. அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவம் படிக்க இயலவில்லை என்று சொன்னது. தகுதி, திறமை பேசுகிறார்களே, அந்தத் தகுதி, திறமை கூட இந்தத் தேர்வில் அடிபடுகிறது என்றும் இக்குழு தரவுகளுடன் சொன்னது.

இந்த அறிக்கை மீது விரிவான பரிந்துரைகளை அளிக்கத் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை முதலமைச்சர் என்கிற முறையில் நான் அமைத்தேன். இறுதியில் எல்லாவற்றையும் பரிசீலித்து, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்களிக்க வேண்டும் என்ற மசோதா இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இவ்வளவு விரிவாக ஆராய்ந்து, உரியத் தரவுகளுடன்தான் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றினோம்.

மொத்தம் இந்த அவையில் இருக்கக்கூடிய 234 உறுப்பினர்களில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் சேர்த்து, 4 பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நீங்கலாக மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் ஆதரவோடும் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வை மட்டுமல்ல இந்த மாமன்றத்தின் இறையாண்மை உணர்வையும் எதிரொலித்தது. அதனை



மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும். மாறாக அதுகுறித்து எந்த முடிவெடுக்காமல் 142 நாட்கள் வைத்திருந்தார்கள். அதுகுறித்து, நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திய நிலையில், மீண்டும் நமக்கே திருப்பி அனுப்பி உள்ளார். அந்த மசோதாவை நிராகரிப்பதற்காக அவர் சொன்ன காரணங்கள், சரியானவை அல்ல என்பதை இந்த மாமன்றத்தில் நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

நீட் தேர்வு குறித்து ஆராய்வதற்காகத் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நீதியரசர் ஏ.கே.ராஜன் குழுவின் அறிக்கை யூகங்களின் அடிப்படையிலானது என்று தெரிவித்துள்ளார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள். அரசாணை எண் 283, மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத்துறை, நாள் 10.06.2021 அன்று நீதியரசர் ஏ.கே.ராஜன் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இடம் பெற்றிருந்தார்கள். இந்த உயர்மட்டக் குழுவின் ஆய்வு வரம்புகளும் வெளியிடப்பட்டன. பொதுமக்கள் அனைவரிடம் இருந்தும் கருத்துகளை இக்குழு கேட்டுப் பெற்றது. மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் ஆணையத்தில் வைக்கப்பட்டிருந்த கருத்துக்கேட்புப் பெட்டியில் போடப்பட்ட மனுக்கள் என ஆணையத்துக்குப் பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களது கருத்துகளை வழங்கியிருந்தார்கள்.

இந்த வழிமுறைகளின் வாயிலாக 86,342 பேர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளை ஆராய்ந்து தனது விரிவான பரிந்துரைகளை நீதியரசர் ஏ.கே.இராஜன் குழு அரசுக்கு 14.07.2021 அன்று அளித்தது. அதாவது தனிப்பட்ட சிலரின் யூகங்களின் அடிப்படையில் அல்ல; சுமார் ஒரு இலட்சம் பேரின் கருத்துகளைக் கேட்டுப் பெற்று இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்தப் பரிந்துரை அறிக்கையில் சமுதாயத்தில் பின்தங்கியோர் மருத்துவக் கல்வியைப் பெறும் கனவிற்கு இடையூறாகவும், சமூகப் பொருளாதாரத்தில் வளமிகுந்த பிரிவினருக்குச் சாதகமாகவும் இருந்து, எம்.பி.பி.எஸ். மற்றும் உயர் மருத்துவப் படிப்புகளிலுள்ள பலதரப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை நீட் தேர்வானது குறைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் யூகம் அல்ல. இதற்கான புள்ளிவிவரமும் அந்த அறிக்கையில் விரிவாக உள்ளது.

அரசுப் பள்ளியின் மாணவர்கள், பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கும் குறைவாகக் கொண்டுள்ளவர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் பிரிவுகளைச் சேர்ந்த வசதி குறைந்தவர்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் இந்த அறிக்கையில் புள்ளி விவரங்களோடு சொல்லப்பட்டுள்ளது.

‘நீட் தேர்வு தகுதிக்கு எதிரானது’ என்று இந்த அறிக்கை சொல்வதை ஆளுநர் விமர்சித்துள்ளார். இதனை மறுக்கும் ஆதாரப்பூர்வமான தகவல்கள் நீதியரசர் ஏ.கே.ராஜன் குழுவின் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை தேர்வானவர்களில் கிராமப்புற ஏழை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் பயின்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்த அறிக்கை சொல்கிறது. தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் இடம் பெற்றவர்களையும், நீட் தேர்வால் பலன் பெற்றவர்கள் என்று யாரும் தவறாகக் கணக்கிட்டுக் கொள்ளக் கூடாது என்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இயற்பியல், வேதியியல், உயிரியல் தேர்வுத் திறன் குறித்து இந்த அறிக்கையில் இல்லை என்று ஆளுநர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதும் அறிவியல் பிரிவு மாணவர்கள் அனைவருமே இந்த மூன்று பாடங்களையும் படிக்கிறார்கள். எனவே, இம்மூன்று பாடங்களில் தேர்ந்தவர்கள்தான் பன்னிரண்டாம் வகுப்பில் உயர்ந்த இடங்களைப் பெறுகிறார்கள். அதனால்தான் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்ணே போதுமானது என்று நாங்கள் சொல்கிறோம். இன்னொரு தேர்வு தேவையில்லை என்று நாம் இங்கே குறிப்பிடுகிறோம். நீட் தேர்வு வருவதற்கு முன்பு, 90 விழுக்காட்டுக்கும் மேலான இடங்களை மாநிலப் பாடத்திட்டத்தின்படி பயின்ற மாணவர்கள்தான் பெற்று வந்தார்கள். ஆனால், நீட் தேர்வுக்குப் பின்னர், மருத்துவப் படிப்பில் சேர்க்கையில் மாநிலப் பாடத்திட்டத்தின்படி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

கருப்பாக உள்ளவர்கள் உள்ளே வரக்கூடாது என்பது எத்தகைய பாகுபாடோ, அதைப்போல மாநிலப் பள்ளிக் கல்வித் திட்டத்தின்கீழ் படித்தவர்களது புத்தகங்களிலிருந்து வினாத்தாள் தயாரிக்காததும் மிகப்பெரிய பாகுபாடுதான்.

நீட் என்பது கல்விமுறை அல்ல. அது பயிற்சி முறை. இது தனியார் பயிற்சி மையங்களைத்தான் ஊக்குவிக்கும். தனிப் பயிற்சி பெற முடியாதவர்கள், கல்வி பெறத் தகுதியற்றவர்கள் என்ற பாகுபாட்டை உருவாக்குகிறது.

ஒரு மாணவர் இரண்டு மூன்று ஆண்டுகள் தனிப் பயிற்சிக்காக ஒதுக்க வேண்டும்; இலட்சக்கணக்கில் செலவு செய்ய வேண்டும். இதனைப் பொருளாதாரத்தில் பின்தங்கிய, ஏழை, எளிய மாணவர்களால் எப்படிச் சமாளிக்க முடியும்? என்பதுதான் திரும்பத் திரும்ப நாம் எழுப்புகிற கேள்வியாகும்.

கட்டணம் செலுத்திப் பயிற்சி எடுக்க முடியாதவர்களால் மருத்துவப் படிப்புக்கு உள்ளே நுழைய முடியாது என்பதே, கட்டணம் செலுத்தி இரண்டு மூன்றாண்டுக் காலம் பயிற்சி பெற முடிந்தவர்களால் மட்டுமே உள்ளே நுழைய முடியும் என்பதே, இந்த 21ஆம் நூற்றாண்டில் மாபெரும் அறிவுத் தீண்டாமை! தகுதி என்ற போர்வையில் உள்ள இந்தத் தீண்டாமை அகற்றப்பட வேண்டாமா? அதற்காகத்தான் நீட் விலக்கு மசோதாவை மீண்டும் இங்கே நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரி வழக்கைப் பற்றி இந்த அவையில்கூட எல்லோரும் பேசினார்கள். ஆளுநர் அவர்கள் அந்த வழக்கை மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். இந்த வழக்கு சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு அரசியல்

சட்டம் வழங்கியுள்ள உரிமைகளுக்கு எதிரானதா நீட் தேர்வு என்பது தொடர்புடையதாகும். அந்த வழக்கு மாநிலச் சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம் குறித்தது அல்ல. ஆகவே, அந்த வழக்கிற்கும், நாம் கொண்டுவரவிருக்கக்கூடிய நீட் விலக்கு மசோதாவுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

மாடர்ன் பல் மருத்துவமனைக்கும், மத்தியப் பிரதேச அரசுக்குமான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் அமர்வில் நடந்தது. உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை குறித்துச் சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கே உண்டு என்று தீர்ப்பளித்தது. அதே வழக்கில் நீதியரசர் பானுமதி வழங்கிய தனித்தீர்ப்பில், மாணவர் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம், மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டதே என்று அவர்கள் தீர்ப்பளித்தார்கள். மாநில சட்டமன்றத்திற்கு இருக்கக்கூடிய சட்டமியற்றும் அதிகாரத்தின்படிதான் நாம், நீட் தேர்வுக்கு எதிரான சட்ட முன்வடிவை நிறைவேற்றி இருக்கிறோம்.

அரசமைப்பு ரீதியாக நீட் தேர்வு தேவைப்படுவதாக ஆளுநர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். சமூகத்திலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியவர்களது உரிமைக்காக எந்தச் சட்ட ஏற்பாட்டையும் செய்துகொள்ளலாம் என்று அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. அந்த அடிப்படையில்தான் நாங்கள் இந்தச் சட்ட மசோதாவை மீண்டும் கொண்டு வருகிறோம். அரசியலமைப்புச் சட்டம், பாகுபாட்டுக்கு எதிரானது. ஆனால், நீட் தேர்வு பாகுபாடு காட்டுகிறது. அரசியலமைப்புச் சட்டம் சமூக நீதியை வலியுறுத்துகிறது. ஆனால், நீட் தேர்வு சமூக நீதிக்கு எதிரானது. அரசியலமைப்புச் சட்டம், சட்டத்தின் நீதியைப் பேசுகிறது. ஆனால், நீட் தேர்வு, பணக்கார நீதியைப் பேசுகிறது. சமத்துவம் என்பதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிநாதம். ஆனால், நீட் தேர்வு, சமத்துவத்துக்கு முற்றிலும் எதிரானது. அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தும் அனைத்து அடிப்படை உரிமைகளுக்கும் எதிரானது நீட் தேர்வு. அதனால்தான் நீட் தேர்விலிருந்து விலக்கு கேட்கிறோம். என்னுடைய வேதனையெல்லாம், ஏழை, எளிய, கிராமப்புற மாணவர்களைப் பாதிக்கும் மிக மோசமான ஒரு தேர்வு குறித்து, அது மோசமானதுதான் என்று இவ்வளவு நீண்ட நேரம் வாதிட வேண்டியதாக இருக்கிறதே என்பதுதான் என் வருத்தம். நாம் சொல்வது புரிய வேண்டியவர்களுக்கு, இன்னமும் புரியாமல் இருக்கிறதே என்பதுதான். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, டெல்லி அமைச்சர் ஒருவரிடம், கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை விவகாரம் பற்றி போன் செய்து பேசினாராம். அப்போது எதிர்முனையில் பேசியவருக்கு, கள்ளக்குறிச்சி என்ற பெயரைப் புரிந்துகொள்ளவே 15 நிமிடம் ஆனது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதே மாதிரி நீட் தேர்வின் மோசமான அம்சங்களையே நாம் ஐந்தாண்டு காலமாக விளக்கிக் கொண்டு இருக்கிறோம். ஆனால், இன்னும் அவர்களுக்குப் புரியவில்லை. உண்மையில், புரிந்துகொள்ள மறுக்கிறார்கள் என்றுதான் கருத வேண்டியுள்ளது. ஆனால், நாம் வெற்றி பெறும்வரை நமது இந்தப் போராட்டத்தை விடமாட்டோம் என்பதை இந்த மாமன்றத்தில் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஏதோ நீட் விவகாரம் மட்டுமல்ல என்பதை நான் தொடக்கத்தில் சொன்னேன். ஒரு சட்ட மசோதாவை நிறைவேற்றினோம், அதை ஆளுநர் திருப்பி அனுப்பினார் என்று மட்டும் நான் இதைப் பார்க்கவில்லை. யாரும்

பயிற்சி நிறுவனங்களின் ஆதிக்கம்

அப்படிப் பார்க்க மாட்டீர்கள் என்பதையும் நான் அறிவேன். இந்தச் சட்டமுன்வடிவைத் திருப்பி அனுப்பியதன் மூலமாக நமது தமிழ்நாடு மாநிலத்தின் உரிமை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமன்றத்தின் இறையாண்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. மாநில சுயாட்சிமீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கூட்டாட்சித் தத்துவம் தலைகவிழ்ந்து நிற்கிறது. அதுதான் வேதனைக்குரியது. அதுதான் கவலையளிக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கு எல்லாம் முன்னுதாரணமான, வழிகாட்டியான தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவை நிறுத்தி வைக்க முடியும், உதாசீனப்படுத்த முடியும் என்றால், இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் மாநிலங்களின் கதி என்ன? அரசியல் சட்டம் வகுத்துத் தந்துள்ள ஒன்றிய, மாநில அரசுகளின் உறவு எங்கே போகும்? பல்வேறு இனம், மொழி, கலாச்சாரம், பண்பாடு கொண்ட மக்களின் நிலைமை என்ன? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின் கொள்கை முடிவை, வெறும் நியமனப் பதவியில் அமர்ந்திருக்கும் ஓர் ஆளுநர் மதிக்காமல் திருப்பி அனுப்புவது மக்களாட்சித் தத்துவத்துக்கே எதிரானது அல்லவா? "பிறகு எந்த நம்பிக்கையில் மக்கள் வாக்களிப்பார்கள்? யாரை நம்பி வாக்களிப்பார்கள்?" என்பதுதான் நாம் எழுப்ப வேண்டிய கேள்வி ஆகும்.

'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதுதான் நம்முடைய இந்தியத் துணைக்கண்டத்தின் பண்பாடு. அதனைச் சிதைக்கலாமா? இவற்றையெல்லாம் சிந்திக்கத் தெரிந்தவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வலிமையான அரசா, நேர்மையான அரசா என்றால், நேர்மையான அரசுதான் அனைவரும் விரும்பும் அரசாக இருக்க முடியும். வலிமையான சாம்ராஜ்யங்கள் வரலாற்றின் பக்கங்களில் மட்டும்தான் இருக்கின்றன. ஆனால், பாகுபாட்டுக்கு எதிரான அசோகர்தான், மக்களால் இன்றும் நினைக்கப்படுகிறார். பலதரப்பட்ட மனிதர்களை உள்ளடக்கிய இந்திய நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்தைச் சீர்குலைக்கும் முயற்சியாகச் சமீபகாலக் காட்சிகள் அமைந்து வருவது வருத்தம் அளிப்பதாக உள்ளது. இந்த நேரத்தில் நான் சிறிது கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். சமூகநீதி மட்டும்தான் திராவிட இயக்கத்தின் கொடை என்று சிலர் நினைக்கிறார்கள். மாநில சுயாட்சியும் திராவிட இயக்கத்தின் கொடைதான். 1918 அக்டோபர் 2 அன்று இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பேசியவர், நீதிக்கட்சித் தலைவரான திரு.டி.எம்.நாயர் அவர்கள். அவர்தான்

1917ஆம் ஆண்டிலேயே மொழிவாரி மாநிலங்களுக்காகக் குரல் கொடுத்தார். மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார். அப்படிச் செய்தால்தான் கூட்டாட்சி முறை வெற்றி பெறும் என்றும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அத்தகைய முன்னோடித் தலைவரான டி.எம்.நாயர் அவர்களை இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர் சொல்லி 100 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும் மாநிலங்களின் உரிமைக்காக இன்னமும் நாம் பேசிக் கொண்டு இருக்கிறோம்! நிதி ஒதுக்கீட்டுச் சட்ட முன்வடிவின் மீது 15.07.1967 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மாமன்றத்தில் உரையாற்றியபோது, ''மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் உள்ள தொடர்புகள் எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும், சட்டப்படி இருக்கின்ற தொடர்புகள், நடைமுறையிலே உள்ள தொடர்புகள் இவை திருத்தி அமைக்கப்பட வேண்டும். அதற்கு அரசியல் சட்டத்தையே கூட திருத்த வேண்டுமென்றாலும் அதற்கும் தயக்கம் கூடாது. அதற்கான ஒரு கமிஷன் அமைத்து விசாரிக்கப்பட வேண்டும் என்பதைத்தான் இதுவரை வலியுறுத்திக் கொண்டு வந்ததைப் போலவே இனியும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார். அப்படி முழங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களை வியப்போடு நான் திரும்பிப் பார்க்கிறேன்.

''நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேரா வண்ணம் மாநில சுயாட்சி அடிப்படையில் மத்திய, மாநில உறவுகளை ஆராய'' சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ராஜமன்னார் அவர்கள் தலைமையில் 22.09.1969 அன்று குழு அமைத்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை நான் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன். 27.05.1971 அன்று ராஜமன்னார் குழு அறிக்கையை அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அந்த அறிக்கையைப் பெற்றுக் கொண்டு, “These are important issues and we intend to consult all the Chief Ministers” என்று பதிலளித்து 22.06.1971 அன்று பெறப்பட்ட கடிதம் இந்த அவையின் குறிப்புகளை அலங்கரிப்பதைப் புரட்டிப் பார்த்து நான் பெருமிதம் அடைகிறேன். அனைத்திற்கும் மேலாக, மாநில சுயாட்சித் தீர்மானம் 16.04.1974 அன்று இதே அவையில் கொண்டு வரப்பட்டு ஏப்ரல் 20ஆம் நாள் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க வாதங்களை மீண்டும் படித்துப் பார்த்து, இந்தச் சட்டமன்றத்தின் நீண்ட நெடிய வரலாற்றை எண்ணி உள்ளபடியே நான் பெருமிதப்படுகிறேன்.

அதிலும் குறிப்பாக, தீர்மானத்தின் மிக முக்கியமான வாசகமாக, ''மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் ராஜமன்னார் குழு அறிக்கையை ஏற்று, இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இந்தப் பேரவை முடிவு செய்கிறது'' என்று முன்மொழிந்த தலைவர்தான் நம்முடைய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அதையும் நினைத்துப் பார்க்கிறேன். மாநிலங்கள் மட்டும் அல்ல, மத்திய அரசுத் தேவையான அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டு கிடப்பானேன்? இந்தக் கேள்வியின் நீண்ட நாளைய தாகத்தைத் தீர்க்கும் நெல்லிக்கனியாகத்தான் இன்று, இந்த மாபெரும் சபைதனில் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த முத்தமிழறிஞர் எத்தகைய தொலைநோக்குப் பார்வை கொண்டவர் என்பதை எண்ணி எண்ணிப் பெருமை கொள்கிறேன்.

அன்றைய நாள், ''இந்திய அரசியல் அரங்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் நாம் ஏற்றி வைக்கும் இந்தச் சுடர் விளக்கு ஒளிவிட வேண்டும்'' என்றவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். அதைத்தான் இன்றைக்கு நாம் எதிர்பார்க்கிறோம். நீட் விலக்கு சட்டமுன்வடிவை நிறைவேற்றி மீண்டும் அனுப்பி வைப்பதன் மூலமாக இந்தியாவுக்கே ஒரு ஒளிவிளக்கை நாம் ஏற்றி வைக்கிறோம். தி.மு.க. எதிர்க்கட்சியாகவும், அ.தி.மு.க. ஆளுங்கட்சியாகவும் அன்றைய தினம் இருந்தாலும், நாம் இணைந்து, ஒருமுகமாக நின்று நீட் விலக்கு மசோதாவைக் கடந்த 01.02.2017 அன்று இதே அவையில் நிறைவேற்றினோம்.

அந்த மசோதாவிற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறாமல் 27 மாதங்கள் கிடப்பில் போட்டு வைக்கப்பட்டது. இறுதியில் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. அப்போதே இரண்டாவது முறையாக நீட் விலக்கு சட்ட மசோதாவை நிறைவேற்றி அனுப்பி வைத்திருக்கலாம். அந்த வாய்ப்புத் தவறிப் போனது. அதைப்பற்றியெல்லாம் நான் இப்போது பேச விரும்பவில்லை. அது தேவையும் இல்லை. இந்தச் சூழலில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் குழு அமைத்தோம். அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற சட்டமுன்வடிவை 13.09.2021 அன்று நிறைவேற்றி அனுப்பினோம். அரசியல் சட்டப்படி ஆளுநர் அவர்களுக்கு உள்ள அதிகாரம் என்ன? இதை நான் சொல்வதை விட, ஒன்றிய, மாநில உறவுகள் பற்றி ஆராய அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் பரிந்துரையில் சொல்லப்பட்டுள்ளதை இந்த அவையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுப் பட்டியலில் (Concurrent List) உள்ள பொருள் குறித்து மாநிலச் சட்டமன்றத்திற்கு உள்ள சட்டமியற்றும் அதிகாரத்தைப் பாதுகாக்கவே அரசியல் சட்டத்தில் 254 (1) என்ற பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்துடன் முரண்படும் ஒரு சட்டத்தை மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றினால், அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கக்கோரி ஆளுநருக்கு மாநில அமைச்சரவை அறிவுறுத்தலாம். மாநில அமைச்சரவை அப்படி அறிவுறுத்தினால், ஆளுநர் அதன்படி உடனடியாகச் செய்தாக வேண்டும்.

அரசியல் சட்டப்பிரிவு 254(1)இன்கீழ் மாநிலச் சட்டமன்றம் சட்டம் நிறைவேற்றினால், அரசியல் சட்டப்பிரிவு 200இன்கீழ் அதற்கு ஒப்புதல்

வழங்கக்கூடிய அதிகாரத்தை ஆளுநர் அமைச்சரவை முடிவுக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டும். ‘The Governor must abide by the advice of the Council of the Ministers.’

ஆளுநருக்கு அனுப்பப்படும் சட்டமுன்வடிவு தன் சொந்தக் கொள்கைக்கு மாறாக உள்ளது என்று நிராகரிக்காமல், அமைச்சரவை என்ன அறிவுரை வழங்குகிறதோ அதன்படிதான் நடக்க வேண்டும் அதைத்தான் 2006இல் இருந்த ஆளுநர் அவர்கள், ‘நுழைவுத் தேர்வு ரத்து’ என்று சட்டமுன்வடிவை நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து இந்தச் சட்டமன்றம் நிறைவேற்றி அந்த வரலாற்றைப் படைத்திருக்கிறார்.

நமக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தின் அடிப்படையில்தான், 13.09.2021 அன்று நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கச் சட்டமுன்வடிவினை நாம் நிறைவேற்றினோம். அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க வேண்டியது ஆளுநரின் அரசியல் சட்டக் கடமை. அந்தக் கடமையை முறையாக இனியாவது ஆளுநர் செய்வார் என நான் நினைக்கிறேன், எதிர்பார்க்கிறேன். நாம் மட்டுமல்ல, நீங்களும் எதிர்பார்க்கலாம். அதுதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின், சட்டமியற்றும் அதிகாரத்திற்கு உட்பட்டு ஆளுநர் நிறைவேற்ற வேண்டிய கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றவில்லை என்பதால் நானே நேரில் ஆளுநர் மாளிகைக்குச் சென்றேன். ஆளுநரிடம் பல முறை நான் வலியுறுத்தியிருக்கிறேன். நம்முடைய மூத்த அமைச்சர், அவையின் முன்னவர், மாண்புமிகு துரைமுருகன் அவர்களும் நேரில் சந்தித்து ஆளுநரை வலியுறுத்தினார். நம் மாநில எம்.பி.க்கள் எல்லாம் குடியரசுத் தலைவரைச் சந்திக்க முயற்சி செய்து, அவரது அலுவலகத்தில் மனுவினை அளித்து வலியுறுத்தினார்கள். ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து விளக்கியிருக்கிறோம். எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய அ.தி.மு.க.வைச் சேர்ந்த எம்.பி.க்கள், அதேபோன்று பல்வேறு கட்சிகளில் இருக்கக்கூடிய எம்.பி.க்கள் அனைவரும் நேரடியாகச் சென்று, சொல்லியிருக்கிறோம். இந்த நிலையில்தான், ஏறக்குறைய 142 நாட்கள் கழித்து, ‘நீட்’ விலக்கு சட்டமுன்வடிவைத் திருப்பி அனுப்பி, மீண்டும் சட்டமன்றம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார் ஆளுநர் அவர்கள். இந்த அசாதாரணச் சூழலில், அரசியல் சட்டப்பிரிவு 254(1) இன்கீழ் சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய சட்டமியற்றும் அதிகாரத்தைக் கேள்வி கேட்கக்கூடிய வகையில் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் செயல் இருக்கிற காரணத்தினால், கடந்த 05.02.2022 சனிக்கிழமை அன்று அனைத்துக் கட்சியைச் சார்ந்த சட்டமன்றக் கட்சியில் இடம் பெற்றிருக்கின்ற தலைவர்களின் கூட்டத்தினை நடத்தினோம். அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்தான், இன்றைக்கு ‘நீட்’ விலக்கு சட்டமுன்வடிவினை இந்த அவையில் மீண்டும் நான் முன்மொழிகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், 30.03.1967இல் இதே அவையில், ஆளுநர் உரைமீதான விவாதத்தில் பேசியபோது, “கவர்னர் பதவியே வேண்டாமென்று முதன்முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன நேரத்தில் அது ரொம்ப பைத்தியக்காரத்தனம் என்று பேசிக் கொண்டிருந்த அரசியல் வட்டாரத்தில், ஒரு பகுதி இன்றையதினம் அதே கண்ணோட்டத்திற்கு வந்திருப்பதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்” என்று குறிப்பிட்டதை நினைவுபடுத்திப் பார்க்கிறேன்.

நீட் தேர்வு முறைகேடுகள்

- தேர்வர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக முறைகேடுகள் நடக்க உதவுதல்.
- தேர்வெழுத மாற்று நபர்களை பயன்படுத்துதல்.
- போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்துதல்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி, நீட் மதிப்பெண்ணில் திருத்தம் செய்தல்.
- இரட்டைக் குடியிருப்பு முறையைப் பயன்படுத்துதல்,
- தேர்வு அமைப்பாளருக்கு லஞ்சம் கொடுப்பது போன்ற பல்வேறு மோசடிகள்.

அது போன்றதொரு சூழலை, நமது ஆளுநர் நிச்சயம் உருவாக்க மாட்டார் என்று நான் நம்புகிறேன். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலனை எண்ணி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தின்கீழ் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும் இந்த ‘நீட்’ விலக்கு சட்டமுன்வடிவினை காலம் தாழ்த்தாமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பார் என்று நான் நம்புகிறேன். காலம் காலமாக மறுக்கப்பட்ட கல்வி உரிமையைக் காக்க, தமிழ்நாட்டின் மாநில உரிமைகளைக் காக்க, பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஏழை, எளிய, விளிம்பு நிலை, கிராமப்புற மக்களின் நலனைக் காக்க, இந்தச் சட்டமுன்வடிவை அனைவரும் நிறைவேற்றித்தர வேண்டும் என்று உங்களை எல்லாம், மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

‘மாநிலங்கள் அதிகளவில் அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்’ என்ற பேரறிஞரின் அண்ணாவின் இலக்கை அடையவும், ‘மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி’ என்ற கலைஞரின் முழக்கத்தை வென்றெடுக்கவும், இந்த நாள் மிக முக்கியமான நாளாக அமைந்துள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவை முன்மொழிவதன் மூலமாக நானும், அதனை ஆதரித்து வாக்களிப்பதன் மூலமாக நீங்களும் செய்யும் செயல் என்பது, இந்தியாவின் ஜனநாயக நெறிமுறைகளைக் காப்பாற்றும். ஒற்றையாட்சித் தன்மை கொண்ட நாடாக இந்தியா மாற்றப்படாமல் தடுக்கும். இறையாண்மை என்பது மக்களாட்சியில் சட்டமன்றத்திற்கு உள்ள சட்டமியற்றும் அதிகாரம் என்பதை நிலைநாட்டும். இந்தியத் துணைக்கண்டமானது அனைத்துத் தேசிய இனங்களுக்குமான நாடு என்பதைப் பிரகடனப்படுத்தும். அத்தகைய அரசியல் சட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாக இந்த நாளை மாற்றியமைக்க வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்திய மாநிலங்களின் உரிமைகளைக் காக்கும் பெரும் பொறுப்பைச் செய்வதற்கான வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்ப்பெருமக்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

தமிழ்நாடு வாழ்க!

தமிழ்நாடு வாழ்க!

தமிழ்நாடு வாழ்க!

எட்டு மாதத்தில் ஏற்றமிகு சாதனைகள்!



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
காணொலிச்செய்தி (13.01.2022)

நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

கடந்த மே 7ஆம் நாள் உங்களது அன்பான உத்தரவுடன் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றுக் கொண்டேன்!

'வாக்களித்தவர்க்கு மட்டுமல்ல, வாக்களிக்கத் தவறியவர்களுக்கும் சேர்த்து நான் முதலமைச்சராக இருப்பேன்' என்று உறுதி எடுத்துக்கொண்டேன்.

பொறுப்பேற்றுக்கொண்ட உடனே ஐந்து முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்ற நான் கையெழுத்திட்டேன்.

- கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்ற மக்களோட துயரத்தைப் போக்குகின்ற வகையில், அரிசி குடும்ப அட்டை வைத்திருக்கின்ற குடும்பத்துக்குத் தலா ரூ.4,000 தரப்படும். அதில் முதல் கட்டமாக ரூ.2,000 இந்த மே மாதத்திலேயே வழங்கப்படும் என்கிற முதல் கையெழுத்திட்டேன்.
- ஆவின் பால் விலையை, லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 வீதம் குறைத்து விற்பனை செய்வதற்கான அரசாணையில் இரண்டாவது கையெழுத்து.
- அரசு கட்டுப்பாட்டில் இயங்குகின்ற நகரப் பேருந்துகளில், பெண்கள் கட்டணம் இல்லாமல் பயணம் செய்வதற்கான உத்தரவில் மூன்றாவது கையெழுத்து.
- தொகுதிகள்தோறும் நான் பெற்ற மனுக்கள் மேல்நடவடிக்கை எடுக்க, "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்கிற திட்டத்தின்கீழ், புதிய துறையை உருவாக்குவதற்கான உத்தரவில் நான்காவது கையெழுத்து.
- கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்பவர்களின் இன்னலைக் குறைக்கின்ற வகையில், அதற்கான கட்டணத்தைத் தமிழக அரசே காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கும் என்பதற்கான ஐந்தாவது கையெழுத்தைப் போட்டுள்ளேன்.

இப்படி ஒவ்வொரு நாளிலும் மக்களுக்காக நான் போட்டக் கையெழுத்துப் பட்டியலைச் சொல்லிக்கொண்டே போகலாம். கோடிக்கணக்கான மக்களின் தேவையை, இலட்சக்கணக்கான மக்களின் எதிர்ப்பார்ப்பை, ஒற்றைக் கையெழுத்தில் நிறைவேற்றிக் காட்டிய அரசுதான் இந்த அரசு.

- தேர்தலுக்கு முன்னால், தமிழ்நாடு முழுவதும் சுற்றி நான் பெற்ற மனுக்களில் இரண்டரை இலட்சம் மனுக்களை 100 நாட்களில் நிறைவேற்றிக் கொடுத்துள்ளேன்.
- கொரோனா நிவாரண நிதி, 2.15 கோடிக் குடும்பங்கள் ரூ.4,000 பெற்றுள்ளனர்.
- கொரோனா கால நிவாரணமாக 13 பொருட்களை 2.15 கோடிக் குடும்பங்கள் பெற்றுள்ளனர்.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் 50 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.
- இல்லம் தேடிக் கல்வி திட்டத்தில் 80,138 மையங்களைத் தொடங்கியிருக்கிறோம். பள்ளிக்கூடத்துக்கு வராமல் நின்ற குழந்தைகளில், 1,73,792 குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் திரும்பச் சேர்த்திருக்கிறோம்.
- 18.30 இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் பயன்பெறும் வகையில் அகவிலைப்படி அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 5 பவுனுக்குக் கீழே நகைக் கடன் பெற்ற 13.50 இலட்சம் குடும்பங்களுக்குக் கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது.
- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான ரூ.2,000 கோடி மதிப்பிலான கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.



- ➢ விபத்தில் சிக்குபவர்கள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த நாட்டுக்காரராக இருந்தாலும், முதல் 48 மணி நேர சிகிச்சையை அரசே ஏற்கும் என அறிவித்தோம். அதில் 4,482 பேர் சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.
- ➢ தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு 21 பொருட்கள் கொண்ட பொங்கல் பரிசை 2.15 கோடிக் குடும்பங்களுக்கு வழங்கி இருக்கிறோம்.
- ➢ இவை அனைத்துக்கும் மேலாகக் கோடிக்கணக்கான மகளிர் நித்தமும் பயன்பெறும் வகையில் அவர்களுக்குப் பேருந்துகளில் கட்டணம் இல்லை என்ற மாபெரும் உரிமையை வழங்கி உள்ளோம்.

மக்கள் கடலில் மாபெரும் மகிழ்ச்சி அலை எழும்புவதற்கு இதுதான் காரணம். ஒட்டு மொத்தமாக மாநிலம் முழுவதும் நலத்திட்டங்கள் போய்ச்சேரும் வகையில் செயல்பட்டுள்ளோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளை மட்டுமல்லாமல், சொல்லாத வாக்குறுதிகளையும் இந்த அரசு நிறைவேற்றும். ஆளுநர் உரையிலே 66 அறிவிப்புகள் வெளியிட்டு, 49 அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த 8 மாதத்தில், ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை, 110ஆவது விதி உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் 1,641 அறிவிப்புகள் வெளியிட்டுள்ளோம். அதில், 1,238 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு விட்டது. அதாவது வெளியிட்ட அறிவிப்புகளில், 75 விழுக்காடு நிறைவேற்றப்பட்டுள்ளது. மீதம் இருக்கிற அறிவிப்புகள், புதிய அறிவிப்புகள் நிறைவேற்றப்படுவது குறித்து என்னுடைய அடுத்த உரையில் தெரிவிப்பேன்.

ஒன்று மட்டும் நிச்சயம். கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் இந்த ஸ்டாலின் நிறைவேற்றுவேன். அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்! தேர்தல் அறிக்கையைப் புத்தகம் போட்டு நாட்டு மக்களுக்கு வெளிப்படையாகக் கொடுத்துள்ளோம். அதனால் அதை வைத்து யாரும் பார்த்துக்கொள்ளலாம். இந்த நேரத்தில் நாட்டு மக்களுக்கு நான் சொல்ல வேண்டிய முக்கியமான ஒரு செய்தி இருக்கிறது. தேர்தல் அறிக்கையில் சொல்லாத பல திட்டங்களை இந்த ஆட்சியில் செயல்படுத்தி இருக்கிறோம்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் விதி எண் 110இன்கீழ் நான் அறிவித்த பல்வேறு அறிவிப்புகளைத் தமிழ்நாடு அரசு சார்பில் புத்தகமாக வெளியிட்டு இருக்கிறோம்.

அதேபோல் சட்டமன்றத்தின் மானியக் கோரிக்கையின்போது அமைச்சர் பெருமக்கள் துறைவாரியாக அறிவித்த அறிவிப்புகளும் 500 பக்க புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. எனவே, எங்கள் செயல்பாடுகளுக்கான ஆதாரம் பொது வெளியில் இருக்கிறது. அந்த அளவிற்கு வெளிப்படையான நிருவாகம்தான் இந்த ஸ்டாலினின் விருப்பம். அதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் எங்களுக்குச் சொல்லித் தந்தது.

எதையும் சும்மா வாய்வார்த்தைக்குச் சொல்லி, மறந்து விடுபவர்கள் அல்ல நாங்கள். அதை கல்வெட்டுப் போல மனதில் பதிய வைத்துக்கொண்டு செயல்படுத்துவோம். செயல்படுத்தியும் வருகிறோம். கோப்புகள் எப்போதும் எந்தச் சூழலிலும் தேங்கக் கூடாது என்று நான் அமைச்சராக இருந்தபோது என்னிடம் அடிக்கடி தலைவர் கலைஞர் அவர்கள் சொல்வார்கள். அந்த அடிப்படையில் என்னிடம் வரும் அனைத்து மனுக்களையும் உடனுக்குடன் முடிவுகளை எடுத்து உத்தரவுகளைப் போட்டிருக்கிறேன் என்பதைப் பெருமையாக, கம்பீரமாக நான் சொல்லிக்கொள்கிறேன்.

மே மாதத்தில் வந்தவை 144 கோப்புகள், ஜூன் மாதத்தில் வந்தவை 220 கோப்புகள், ஜூலை மாதத்தில் வந்தவை 227 கோப்புகள், ஆகஸ்ட் மாதத்தில் வந்தவை 241 கோப்புகள், செப்டம்பர் மாதத்தில் வந்தவை 422 கோப்புகள், அக்டோபர் மாதத்தில் வந்தவை 450 கோப்புகள், நவம்பர் மாதத்தில் வந்தவை 559 கோப்புகள் இவை அனைத்தையும் உடனுக்குடன் பார்த்து முடிவுகள் எடுத்துவிட்டேன்.

டிசம்பர் மாதத்தில் என்னிடம் தரப்பட்ட 420 கோப்புகளில் 356 கோப்புகளில் கையெழுத்துப் போட்டுவிட்டேன். மீதம் 64 கோப்புகள், அதுவும் பல்வேறு கட்டங்களில் ஆலோசனையில் இருக்கிறது.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால் பதவி ஏற்றுக்கொண்ட மே மாதம் முதல் என்னிடம் வந்த 2,683 கோப்புகளில் 2,619 கோப்புகளைப் பார்வையிட்டு அனைத்திலும் முடிவுகள் எடுத்துக் கையெழுத்துப் போட்டுள்ளேன்.

கோப்புகள் துரிதமாக நகர்வதுதான் நல்லாட்சியின் முக்கியமான அடையாளம். அந்த அடையாளத்தின் நல்லரசாக இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

நான் மட்டுமல்ல, அமைச்சர்கள் அனைவரையும் அவர்களிடம் வரும் கோப்புகளை உடனுக்குடன் முடிவெடுத்து அறிவிப்புகளைச் செய்ய உத்தரவிட்டுள்ளேன் என்பது மட்டுமல்ல, அதனை கண்காணித்தும் வருபவன் நான்.

கோப்புகள் தேங்காத அரசாக இந்த அரசை நடத்திக்காட்டி வருகிறேன்.

கோட்டையில் உட்கார்ந்து உத்தரவுபோடும் முதலமைச்சர் அல்ல நான். மக்களோடு மக்களாக இருந்து அவர்கள் சிந்தனைகளை உணர்ந்து அறிந்து செயல்படுத்திக்காட்டும் முதலமைச்சராகச் செயல்பட்டு வருகிறேன்.

கொரோனா காலமா ? கொரோனா வார்டுக்குள் சென்று நோயாளிகளைக் கவனித்தேன்.

மழை வெள்ளமா ? இடுப்பளவு தண்ணீரிலும் போய் மக்களைச் சந்தித்தேன்.

காஞ்சிபுரத்திலும், கன்னியாகுமரியிலும் எனது கால்கள் பயணித்தது. திருவள்ளூரிலும், திருப்பூரிலும் நான் வலம் வந்தேன்.

தஞ்சையிலும், திருச்சியிலும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் கொடுத்துவிட்டு இரவில் சென்னைக்குத் திரும்பிய நான் கொட்டும் மழையில் சென்னை இருப்பதைக் கண்டு அன்றைய நாள் நள்ளிரவு முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பராமரிப்புப் பணிகளை முடுக்கி விட்டு நள்ளிரவு 2 மணிக்குத்தான் வீடு திரும்பினேன். மறுநாள் காலையில் மீண்டும் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிடச் சென்றேன்.

கொரோனா தடுப்பூசியா, மக்கள் தடுப்பூசி போடும் இடத்துக்கே நானும் போய் பார்க்கிறேன்.

ரேசன் கடையில் பொருள்கள் வாங்குவதில் பிரச்சினையா, நானே நேரில் போய் ஆய்வு செய்கிறேன். காவல் நிலையத்தில் மக்கள் குறை தீர்க்கப்படுகிறதா என நானே காவல் நிலையத்திற்குப்போய்ப் பார்வையிட்டுள்ளேன். என்னை இப்படித்தான் பழக்கி இருக்கிறார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். மக்களோடு வாழ் என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா. அப்படித்தான் வாழ்ந்து வருகிறேன். மக்களின் நேற்றைய தேவையை இன்று நிறைவேற்றித் தருபவனாக இருக்கிறேன். நாளைய கோரிக்கையை இன்று உணர்பவனாக இருக்கிறேன். ஏனென்றால் நான் மக்களோடு மக்களாக இருக்கிறேன். உங்களுக்காகவே உழைக்கிறேன். உழைத்துக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு உழைக்கவே காத்திருக்கிறேன்.

மொழிப்போர் தியாகிகளுக்கு மரியாதை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
25.01.2022 அன்று
மொழிப்போர் தியாகிகள் தினத்தையொட்டி,
சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் உள்ள
மொழிப்போர் தியாகிகளின் மணிமண்டபத்தில்,
தமிழ் மொழி காக்க இன்னுயிர் நீத்த தியாகிகளை
நினைவுகூரும் வகையில் அவர்களது
திருவுருவப் படங்களுக்கு மலர்தூவி
மரியாதை செலுத்தினார்.

உத்தமர் காந்தியடிகள் நினைவு நாள்

உத்தமர் காந்தியடிகளின்
75ஆவது நினைவு நாளை முன்னிட்டு,
சென்னை, மெரினா கடற்கரை,
காமராஜர் சாலையில் அமைந்துள்ள
உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலையின்கீழ்
வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு
30.01.2022 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்
திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள் மற்றும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆகியோர்
மலர் தூவி மரியாதை செலுத்தி,
சர்வோதயா சங்கத்தினர் நிகழ்த்திய நூற்பு வேள்வி
மற்றும் காந்திய இசைப் பாடல் நிகழ்ச்சிகளில்
கலந்துகொண்டனர்.

உத்தமர் காந்தியடிகள்

மக்களின் நலனே
தேசத்தின் நலன் என உழைத்த
உத்தமர் காந்தியடிகளின் நினைவு நாளில்,
அன்பும் சகோதரத்துவமும் கொண்டு
ஒற்றுமை பேணிட உறுதியேற்று,
கோட்சேவின் வாரிசுகளுக்கும்
அவர்களது தீய எண்ணங்களுக்கும்
நம் இந்திய மண்ணில் இடமில்லை
எனச் சூளுரைப்போம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

ஜனவரி 30: “தியாகிகள் தினம்”

தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் நினைவு நாளானது தேச அளவில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, உயிர்த் தியாகம் செய்த உத்தம வீரர்களின் நினைவாக, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரித் திங்கள் 30ஆம் நாள் “**தியாகிகள் தினம்**” ஆக அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில் சாதியப் பாகுபாடும், தீண்டாமையும் சமூக முன்னேற்றத்திற்கு எதிரானவை என்றுரைத்திட்ட அண்ணலின் நினைவாகத் தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழியும் ஏற்கப்பட்டு வருகிறது.

உத்தமர் காந்தியடிகளின் 75ஆவது நினைவு நாளையொட்டி 29.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அலுவலர்கள் தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

> “ வெற்றியாளர்கள் ஒருபோதும் இழப்பதில்லை!
> ஒன்று வெல்கிறார்கள் அல்லது கற்கிறார்கள்! ”
>
> – அண்ணல் காந்தியடிகள்

தைத்திங்கள் 2ஆம் நாள்

"திருவள்ளுவர் திருநாள்"

உலகப்பொதுமறை, பொய்யாமொழி, தெய்வ நூல் எனப் பல பெயர்களாலும் அழைக்கப்படும் உலகம் போற்றும் திருக்குறள் நூலை இயற்றிய அய்யன் திருவள்ளுவரைப் பெருமைப்படுத்தும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 1970ஆம் ஆண்டு முதல் தைத்திங்கள் இரண்டாம் நாள் "திருவள்ளுவர் திருநாள்" எனவும், அதனை விடுமுறை நாளாகவும் அறிவித்து அரசாணை வெளியிட்டார்.

தமிழ் வளர்ச்சித்துறையால் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்குத் தைத் திங்கள் இரண்டாம் நாளான அய்யன் திருவள்ளுவர் திருநாளன்று மாலை அணிவித்தும், மலர் தூவியும் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது. அய்யன் திருவள்ளுவருக்கான நினைவகமாக 1976ஆம் ஆண்டு சென்னையில் வள்ளுவர் கோட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

மேலும், 2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கன்னியாகுமரியில் 133 அடி உயரப் பிரம்மாண்ட திருவள்ளுவர் சிலையை நிறுவி, பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

திருக்குறளின் சிறப்பினை மாணவச் செல்வங்கள் அறிந்துகொள்ளும் வகையில், 1,330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் மாணவர்களைப் பாராட்டி குறள் பரிசுத் தொகை தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் தற்போது ரூ.10,000 குறள் பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சிறப்புமிக்க அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு 15.01.2022 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் "வள்ளுவர் கோட்டம்" மடிப்பேட்டினை வெளியிட மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

திருக்குறள் நாட்காட்டி வெளியீடு குறளோவியம் வெற்றியாளர்களுக்கு பரிசு

வான்புகழ் வள்ளுவன் இயற்றிய, முக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய, உலகப் பொதுமறையாம் திருக்குறள், இன்றைய தலைமுறையினரைச் சென்றடையும் வகையில் ''தீராக்காதல் திருக்குறள்'' என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு, தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் முதலாவதாக, 'குறளோவியம்' என்ற தலைப்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு, குறட்பாக்களின் செம்மாந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மாநில அளவில் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியில் சிறந்த 365 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தினசரி மேசை நாட்காட்டியாக அச்சிடப்பட்டும், அழகுற வரையப்பட்ட சிறந்த ஓவியங்களைத் தொகுத்துக் காலப்பேழை புத்தகமாகவும், நிகழும் திருவள்ளுவராண்டு 2053, தைத்திங்கள் 2ஆம் நாளான திருவள்ளுவர் தினத்தன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுப்பிய வள்ளுவர் கோட்டத்தில் வைத்து வெளியிட்டார்.

மேலும், இப்போட்டியில் பங்கேற்றுப் பள்ளி அளவிலான பிரிவில் முதல் பரிசுப் பெற்ற செல்வி கு.ஜெய்கீர்த்தன்ஹா (சிந்திமாடல் சீனியர் செகண்டரி பள்ளி, சென்னை), இரண்டாம் பரிசுப் பெற்ற செல்வன் பு.கீர்த்திவாசன் (வேலம்மாள் வித்யாலயா, ஆலப்பாக்கம், சென்னை) மற்றும் மூன்றாம் பரிசுப் பெற்ற செல்வி மோ.சு.பிருந்தா (ஸ்ரீ ராமகிருஷ்ணாமிஷன் வித்யாலயா, சுவாமி சிவானந்தா மேல்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர்) மற்றும் கல்லூரி அளவிலான பிரிவில் முதல் பரிசுப் பெற்ற திரு. வெ.ராஜேஷ், (அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்), இரண்டாம் பரிசுப் பெற்ற திரு. ஆ.பாலாஜி (அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்), மூன்றாம் பரிசுப் பெற்ற திரு. க.ராஜேஷ் (அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல் பரிசாக ரூ.50,000, இரண்டாம் பரிசாக ரூ.30,000, மூன்றாம் பரிசாக ரூ.20,000 மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ''வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோல்நோக்கி வாழும் குடி'' என்ற குறட்பாவினை மையமாக வைத்து வரையப்பட்ட ஓவியத்தினைச் சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர் திரு. மு.பாலாஜி பிரசாத் பரிசாக வழங்கினார்.

நூல் வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களின் பெயர்த்தி 8 வயது சிறுமி மகிழினி இளஞ்செழியன் எழுதிய "The Adventures of Shing and Shang in Mystery Island" என்ற ஆங்கில நூலின் முதல் பிரதியை வெளியிட, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

"நீடித்த நிலையான பருத்தி இயக்கம்"

தமிழ்நாட்டில் பருத்தி விவசாயிகளின் நலன் கருதி, ரூ.11 கோடி மதிப்பில் நீண்ட இழை பருத்தி சாகுபடி மற்றும் ஒருங்கிணைந்த உத்திகளை 25,000 எக்டர் பரப்பளவில் செயல்படுத்திட **நீடித்த நிலையான பருத்தி இயக்கம்** என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், ஐந்து விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் 'வெள்ளைத் தங்கம்' என்று அழைக்கப்படும் பருத்திப் பயிரானது, சராசரியாக 1.62 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, ஒரு எக்டருக்கு 411 கிலோ உற்பத்தித் திறனுடன் 3.92 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் சுமார் 2,000 நூற்பாலைகள் இயங்குவதால், நாட்டின் பருத்தி நூற்புத்திறனில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது.

உயர்தரப் பருத்தி உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கவும், பருத்தி நூற்பாலைகளின் பெருகிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் தமிழ்நாடு அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அவற்றில் மேலும் ஒரு சிறப்பம்சமாக, இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், நீண்ட, மிக நீண்ட இழை பருத்தி இரகங்களான எஸ்.வி.பி.ஆர்–5, எஸ்.வி.பி.ஆர்–6, கோ–14, சுரபி, சூரஜ் மற்றும் கோ–17 விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ஒரு கிலோ விதைக்கு ரூ.60 வீதமும், சான்று பெற்ற பருத்தி விதைகள் விநியோகத்தின்கீழ், கிலோவிற்கு ரூ.130 வீதம், எக்டருக்கு ரூ.1,300, பருத்தியில் ஊடுபயிர் சாகுபடி செய்திடப் பயறு விதைகள் ஒரு எக்டருக்கு ரூ.500, பருத்தி நுண்ணுரங்கள் மற்றும் திரவ உயிர் உரங்கள் ஒரு எக்டருக்கு ரூ.950, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைக்கான இடுபொருட்கள் ஒரு எக்டருக்கு ரூ.6,500, விசை களைக்கருவி ஒன்றிற்கு ரூ.47,000 மற்றும் தண்டு கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு இடுவதற்கு எக்டர் ஒன்றிற்கு ரூ.5,000 வீதம் மானியத்தில் பருத்தி விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தில் விருப்பமுள்ள சிறு, குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தினால் நடப்பாண்டில் தமிழ்நாட்டின் பருத்தி சாகுபடியினை 1.70 இலட்சம் எக்டர் ஆக உயர்த்தவும், பருத்தி மகசூலை ஒரு எக்டருக்கு 380 கிலோவிலிருந்து 430 கிலோ என்ற அளவிற்குப் பஞ்சு மகசூலை உயர்த்தி, உற்பத்தியினை 4.30 இலட்சம் பொதிகளாக உயர்த்தவும் வழிவகை செய்யப்படும்.

91,120 விவசாயிகளுக்கு கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகை

ஒன்றிய அரசு ஆண்டுதோறும் கரும்புக்கு நியாயமான மற்றும் ஆதாய விலையை நிர்ணயம் செய்து வருகிறது. கரும்பு விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு. ஒன்றிய அரசு நிர்ணயிக்கும் விலைக்குமேல் கூடுதலாகத் தமிழ்நாடு அரசு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை தனி நிதி நிலை அறிக்கை 2021–2022 அறிவிப்பின்படி, கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.42.50, சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.150 என மொத்தம் ரூ.192.50 தமிழ்நாடு அரசால், ஒன்றிய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ.2,707.50யைவிட டன் ஒன்றிற்குக் கூடுதலாக வழங்கப்படுகிறது. இதன்படி 2020–2021ஆம் அரவைப் பருவத்திற்குச் சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கிய பதிவுபெற்ற விவசாயிகளுக்கு டன் ஒன்றிற்கு ரூ.2,900 கிடைக்கப் பெறுகிறது.

அதன்படி, தமிழ்நாடு அரசால், 2020–2021 அரவைப் பருவத்தில் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், 15 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் 17 தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு 78,38,000 மெட்ரிக் டன் கரும்பு வழங்கிய தகுதியுடைய 91,120 விவசாயிகளுக்குக் கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகையாக, மொத்தம் ரூ.150.89 கோடி வழங்கும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், 5 கரும்பு விவசாயிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில் ரூ.209.76 கோடியில் அரசு நலத்திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 10.01.2022 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக ஈரோடு மாவட்டத்தில் ரூ.104.81 கோடி மதிப்பீட்டிலான 66 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.45.15 கோடி மதிப்பீட்டிலான 365 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 40,095 பயனாளிகளுக்கு ரூ.209.76 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

ஈரோடு மாவட்டத்தில் அரசின் சார்பில், நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்குத் தலைமை பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்களே! முன்னிலை ஏற்றுள்ள மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களே! நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி அவர்களே! நாடாளுமன்ற மேலவையின் உறுப்பினர் திரு. அந்தியூர் செல்வராஜ் அவர்களே! ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கணேசமூர்த்தி அவர்களே! சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி சி.கே.சரஸ்வதி அவர்களே! திரு. ஏ.ஜி.வெங்கடாசலம் அவர்களே! திரு. திருமகன் அவர்களே! தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப. அவர்களே! துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று அமர்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்களே! நிறைவாக நன்றி நல்கவிருக்கக் கூடிய கூடுதல் ஆட்சியர் திரு. மதுபாலன், இ.ஆ.ப., அவர்களே! அரசு அதிகாரிகளே! பல்வேறு இடங்களில் இந்தக் கொரோனா கால இடைவெளியின் காரணமாகக் காணொலியின் மூலமாகத் தொடர்பு கொண்டு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கும் பயனாளிகளே! ஊடகவியலாளர்களே! என் உயிரோடு கலந்துள்ள தலைவர் கலைஞருடைய உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்! ஈரோடு மாவட்டத்தில் முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தும், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய நிகழ்ச்சியையும் இணைத்து இந்தக் காணொலிக் காட்சி மூலமாக நடந்து கொண்டு இருக்கிறது.

இதற்கான முழு ஏற்பாட்டை ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்திருக்கக் கூடிய மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் சிறப்பாக இந்தப் பணியை நிறைவேற்றியிருக்கிறார். எதையும் எதிர்பார்ப்பதை விடச் சிறப்பாகச் செய்யக்கூடிய பெயரைப் பெற்றவர் திரு. சு.முத்துசாமி அவர்கள். பல்வேறு வகைகளிலும் அனுபவம் வாய்ந்தவராக இருந்தாலும், இளைஞர்களோடு போட்டிப் போடும் அளவுக்குச் சுறுசுறுப்பாகத் தனது பணியைச் செய்து முடிப்பவர் திரு. சு.முத்துசாமி அவர்கள்.

கொரோனா கட்டுப்பாடுகள் இல்லாமல் இருந்தால், ஈரோட்டில் மாபெரும் விழாவை, விழா என்று சொல்ல முடியாது, ஒரு பெரிய மாநாட்டையே நடத்தியிருப்பார். நானும் நேரடியாக வந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் பெற்றிருப்பேன். ஆனால், கொரோனா என்ற அந்தத் தொற்று நோய் அந்த நிகழ்ச்சிக்குத் தடைபோடக்கூடிய வகையில் அமைந்துவிட்டது.

இருந்தாலும், விழாக்களை விட, மக்கள் உயிர்தான் நமக்கு முக்கியம் என்பதை அருமைச் சகோதரர் திரு. சு.முத்துசாமி அவர்கள் நன்றாக அறிவார்கள், நானும் நன்றாக அறிந்திருக்கிறேன், மற்றவர்களும் அறிந்திருக்கிறார்கள். இதைப்பற்றி அதிகமாக விளக்கம் சொல்லவேண்டிய அவசியமில்லை. அதே நேரத்தில், இன்னொன்று சொல்ல விரும்புவது, இன்னும் சில வாரங்களில் இந்த நோய்த் தொற்றுக் குறையும் நேரத்தில், அதைக் கட்டுப்படுத்துகிற சூழல் அமைந்த பிறகு, நிச்சயமாக நான் ஈரோட்டுக்கு வருவேன், ஈரோட்டு மக்களை நான் நேரடியாக வந்து சந்திப்பேன்.

ஈரோடு என்பது திராவிட இயக்கத்தின் தாய் வீடு. தந்தை பெரியார் பிறந்த ஊர். பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த ஊர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குருகுலம் என்பதும் ஈரோடுதான்.

அதனால், எங்கள் மனதில் குடியிருக்கும் ஊராகத்தான் ஈரோட்டை நாங்கள் எப்போதும் மதித்துக் கொண்டிருக்கிறோம். அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஈரோட்டில், கழக ஆட்சி அமைந்ததற்குப் பிறகு நடக்கின்ற முதல் விழாவில் இந்த காணொலிக் காட்சியின் மூலமாகக் கலந்துகொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

மொத்தம் 66 பணிகள் ஈரோடு மாவட்டத்தில் முடிவுற்று, திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இவை மொத்தம் ரூ.104 கோடி மதிப்பிலானவை ஆகும்.

அதேபோல ரூ.45 கோடி மதிப்பிலான 365 பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தப்பட்டிருக்கிறது.

❖ இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், மலைவாழ் மக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையான அந்தியூர் வட்டாரம் பர்கூர் ஊராட்சியில் கத்திரிப்பட்டி வன எல்லை முதல் ஈசலங்காடு வரையிலான சாலையைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

❖ தாளவாடி வட்டாரம் பையணாபுரம் ஊராட்சியில் ரூ.1.29 கோடி மதிப்பீட்டில் 5 தடுப்பணைகள் கட்டும் பணிக்கும் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

❖ பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில், 40,095 பயனாளிகளுக்கு ரூ.20,976.71 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறோம்.

கொரோனா காலம் என்பதால்தான், எல்லோரையும் ஒரே இடத்தில் அழைத்துவந்து இந்த நிகழ்ச்சியை நாம் நடத்த முடியவில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பயனாளிகள் இருந்து, இந்த நலத்திட்ட உதவிகளை அவர்கள் அந்தந்த பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மூலமாகப் பெற இருக்கிறார்கள்.

அனைவருக்கும் முறையாக, சரியாக அந்த உதவிகள் சென்றடைந்ததா என்று அதிகாரிகள் கடைசி வரை இருந்து கண்காணிக்க வேண்டும், அதில் அலட்சியமாக இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

❖ பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ஏற்கெனவே 550 எண்ணிக்கையில் படுக்கைகள் இருந்தன. இதனை அதிகரிக்க எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாக, ரோட்டரி சங்கத்தின் மூலம் 401 படுக்கைகளும், 'ஒளிரும் ஈரோடு' தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்போடு 180 படுக்கைகளும், Fiscal மூலம் 80 படுக்கைகளும், ஏற்கெனவே உள்ள கட்டடத்தில் கூடுதலாக 100 படுக்கைகளும் உருவாக்கப்பட்டு, தற்பொழுது 1,311 எண்ணிக்கையில் பிரம்மாண்டமான இந்த மருத்துவமனை அமைந்துள்ளது என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல், பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கோவிட் மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. 401 படுக்கைகளுடன் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 45 நாட்களில் இது உருவாக்கப்பட்டு இருக்கிறது. இதற்குத் துணை நின்ற ஈரோடு மாவட்ட ரோட்டரி சங்கங்கள் அனைத்தையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

ரோட்டரி அறக்கட்டளையின் நிருவாக இயக்குநர், டாக்டர் இ.கே.சகாதேவன், தலைவர் திரு. எஸ்.செங்குட்டுவன் ரோட்டரி மாவட்ட ஆளுநர் சண்முகசுந்தரம் மற்றும் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் அனைவரையும் அரசின் சார்பில் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன், வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

கொரோனா நோயாளிகளுக்கு என்று ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன் ஏராளமான நிதி உதவியைச் செய்திருக்கிறார்கள். அவர்களோடு அமைதிப்பூங்கா அறக்கட்டளை, கொங்கு கல்வி அறக்கட்டளை உள்ளிட்ட தொழில் நிறுவனங்களும் உதவி செய்திருக்கிறது. மருத்துவமனை வளாகம், மருந்துகள் சேமிப்பு வளாகம், மருத்துவ ஆக்சிஜன் தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை அனைத்தும் உருவாக்கித் தந்துள்ள பெருந்தன்மையை அரசின் சார்பில் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈரோடு மாநகராட்சி 2008 முதல் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 2011 முதல் விரிவடைந்த மாநகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. 109.52 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. இம்மாநகராட்சி மக்களுடைய வசதிக்காக மாபெரும் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை இக்கூட்டத்தின் வாயிலாகத் தெரிவிக்க நான் பெருமை அடைகிறேன்.

இந்தத் திட்ட அறிக்கையில், பெருந்துறையில் ஒரு பேருந்து நிலையமும், ஈரோடு புறநகர்ப் பகுதிகளில் இரண்டு பேருந்து நிலையங்கள் என்று மூன்று பேருந்து நிலையங்கள் அமைக்கப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

சோலார் பகுதியில் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கையில் இருக்கிறது. இந்தப் பேருந்து நிலையத்திலிருந்து மதுரை, திருச்சி, கரூர், பழனி, வெள்ளக்கோவில் வழியாகச் செல்லக்கூடிய பேருந்துகள் இயக்கப்பட இருக்கிறது.

சத்தி சாலையில் மற்றொரு பேருந்து நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பேருந்து நிலையத்திலிருந்து சத்தி, கோவை, திருப்பூர், ஊட்டி மார்க்கம் மற்றும் கருநாடக மாநிலங்களுக்குச் செல்லும் பேருந்துகள் இயக்கப்பட இருக்கிறது.

அடுத்து இன்னொரு முக்கியமான அறிவிப்பையும் இந்த நிகழ்ச்சியில் வெளியிட நான் விரும்புகிறேன்.

சிக்கய்ய நாயக்கர் கல்லூரியானது 1954இல் தந்தை பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்டது. இக்கல்லூரியில் இளநிலைப் பட்ட வகுப்பு பதினொன்றும், முதுநிலைப் பட்ட வகுப்பு மூன்றும் இருக்கிறது. 1,400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் இந்தக் கல்லூரியில் படித்து வருகிறார்கள்.

இந்தக் கல்லூரியானது, அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் 1998ஆம் ஆண்டு முதல் கோவை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களைப் பாதுகாவலராகக் கொண்டு, இப்போது செயல்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக அறிவிக்கக் கோரி ஏறக்குறைய கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. அதை நிறைவேற்றக்கூடிய வகையில், இந்தக் கல்லூரியை, அரசுக் கல்லூரியாக இந்த நிகழ்ச்சியின் மூலம் நான் அறிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

இப்படி தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல், புதிய திட்டங்களைத் தொடங்கிவைத்தல்,முடிந்த திட்டங்களை மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருதல் ஆகிய விழாக்களைத் தொடர்ந்து இந்த அரசு நடத்திக் கொண்டு வருகிறது.

இதுவரை நான் நேரடியாகக் கலந்துகொண்டு, ரூ.714 கோடி மதிப்பிலான 185 அரசுத் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்திருப்பது மட்டுமில்லாமல், ரூ.339.86 கோடி மதிப்பிலான 190 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். மேலும், பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 8,18,835 பயனாளிகளுக்கு ரூ.3,642 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறேன்.

இன்று ஈரோட்டில் இந்த விழா நடக்கிறது. வரிசையாக எல்லா மாவட்டங்களிலும் இந்த விழாக்கள் நடக்க இருக்கிறது. இவற்றை அரசு விழாக்கள் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதைவிட நான் பெருமையாகச் சொல்வது, மக்கள் விழா, அதுதான் முக்கியம். உங்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு உங்களுக்கான பல்வேறு பணிகளைச் செய்வது மட்டுமல்ல, கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. மக்களுக்காகவே என்னை நான் அர்ப்பணித்திருக்கிறேன்.

கடந்த 5ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்தில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையாற்றினார்கள். அவர் உரையாற்றும்போது, தமிழக அரசின் செயல்பாடுகளை, நாம் ஒவ்வொரு துறை வாயிலாகக் கொண்டு வரும் திட்டங்களை மனம் திறந்து ஆளுநர் அவர்கள் பாராட்டிப் பேசியிருக்கிறார். பொறுப்பேற்ற நொடியிலிருந்து நான் மக்கள் பணியாற்றி வருவதாக ஆளுநர் அவர்கள் பாராட்டினார்கள். அப்படித்தான் தலைவர் கலைஞர் அவர்கள் எங்களையெல்லாம் பழக்கி வைத்திருக்கிறார். தன்னை, பெரியார் எப்படிப் பழக்கினார் என்றும் தலைவர் கலைஞர் அவர்கள் எங்களிடத்தில் அடிக்கடி சொல்வார். யானை தன்னுடைய குட்டியை எப்படிப் பழக்குமோ, அப்படி பெரியார் எங்களை மக்கள் தொண்டாற்றப் பழக்கினார் என்று கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்.

அதைப் போலத்தான் கலைஞர் அவர்களும் எங்களைப் பழக்கினார். மக்களுக்கு ஒரு துன்பம், துயரம் என்றால் துடிக்கும் உள்ளம் கொண்டவர்களாக எங்களை வடிவமைத்திருக்கிறார். அந்த அடிப்படையில்தான் மக்கள் பணியை நாங்கள் ஆற்றிக்கொண்டு இருக்கிறோம். இந்த நிலையில், தமிழகத்துக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே சமூகநீதியை, உருவாக்கிக் கொடுக்கும் பெரும் பணியை நாம் செய்து வருகிறோம்.

இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக்காக நாம் எடுத்த சட்டரீதியான முயற்சிகள்தான், அகில இந்தியா முழுமைக்குமான பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு இந்தச் செய்தி இனிப்புச் செய்தியாக அமைந்திருக்கிறது.

தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டில், அரசு விழாவில் பங்கெடுக்கின்ற இந்த நேரத்தில், உச்சநீதிமன்றம் வழங்கி இருக்கக்கூடிய தீர்ப்பு என்பது பெரியாருக்குக் கிடைத்த காணிக்கையாக நான் நினைக்கிறேன். அவர் உருவாக்கிக் கொடுத்த சமூகநீதித் தத்துவத்தை இன்றைய தினம் உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் காலமானது உருவாகி இருக்கிறது. இதைவிடப் பெரியாருக்கு உண்மையான தொண்டு நிச்சயமாக அமையாது. அனைத்து வளமும் நலமும் கொண்ட தமிழ்நாட்டை உருவாக்குவதும், அகில இந்தியா முழுமைக்கும் மாநில சுயாட்சி, சமூகநீதிக் கொள்கையை மலரச் செய்வதையும் நான் என்னுடைய வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டுள்ளேன்.

இந்த இலட்சியப் பயணம் தொடரும் என்பதைச் சொல்லி இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்களையும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய, குறிப்பாகப் பயனாளிப் பெருமக்களுக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துகளையும், பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

அய்யன் திருவள்ளுவர் விருது, பெருந்தலைவர் காமராசர் விருது





தமிழ்நாடு அரசால் ஒவ்வொரு ஆண்டும், திருக்குறள் நெறி பரப்பி, தொண்டு புரிந்துவருபவர்களுக்கு அய்யன் திருவள்ளுவர் விருது வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், பெங்களூர் தமிழ்ச்சங்கத்தின் மேனாள் தலைவரும், 2009ஆம் ஆண்டு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் பெங்களூரில் திருவள்ளுவர் சிலையைத் திறப்பதற்குக் காரணமானவர்களில் முதன்மையானவர்களுள் ஒருவரும், பெங்களூர் இந்தியன் தொலைபேசி தொழிலகத்தில் முதுநிலைப் பொறியாளராகப் பணியாற்றி ஒய்வுபெற்றவரும் பெங்களூரில் வசிக்கும் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த திரு. மு.மீனாட்சி சுந்தரம் (வயது 78) அவர்களுக்கு 2022ஆம் ஆண்டிற்கான அய்யன் திருவள்ளுவர் விருது வழங்கப்படுகிறது.

அதேபோன்று, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய தமிழ்நாட்டின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், நாடாளுமன்றத்தில் தமிழில் கேள்விகளைக் கேட்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்தவரும், தமிழ் இலக்கியங்களில் புலமையும் பேச்சாற்றலும் மிக்கவராகவும், தமிழ் இலக்கியவாதியாகவும் சிறந்த நூல்களைப் படைத்தவரும் பன்முகத்திறன்கொண்ட சொல்லின் செல்வர் முனைவர் குமரிஅனந்தன் (வயது 88) அவர்களுக்கு 2021ஆம் ஆண்டிற்கான பெருந்தலைவர் காமராசர் விருது வழங்கப்படுகிறது.

விருதுபெறும் விருதாளர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களால், விருதுத்தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரை மற்றும் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப் பெறுவார்கள் (15.01.2022).

சென்னையில் இஸ்பாகான் 2022

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 10.01.2022 அன்று சென்னை, பழவந்தாங்கலில் நடைபெற்ற இஸ்பாகான் அமைப்பின் 14ஆவது மாநாட்டைத் தொடங்கிவைத்துத் தமிழ்நாட்டிற்கான தொழில் காப்பகங்கள் மேம்பாட்டுக்கான செயல்திட்ட அறிக்கையினை வெளியிட்டார்.

மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

இஸ்பாகான் அமைப்பின் விழாவில் எனக்கு முன்னால் உரையாற்றி அமர்ந்திருக்கும் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களே! குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு.அருண்ராய் அவர்களே! தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன் அவர்களே! இஸ்பாகான் அமைப்பின் தலைவர் டாக்டர் கே. சுரேஷ்குமார் அவர்களே! ஒன்றிய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் புத்தொழில் ஆரம்ப நிலை நிதிக்குழுத் தலைவர் டாக்டர் எச்.கே.மிட்டல் அவர்களே! நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய டாக்டர் ஏ. பாலசந்திரன் அவர்களே! அரசு உயர் அதிகாரிகளே! தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து பங்கேற்க வந்துள்ள தொழில் காப்பகத்தின் நிருவாகிகளே! தொழிலதிபர்களே! தொழில்முனைவோர்களே! பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களைச் சார்ந்த செய்தியாளர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

இந்திய அளவிலான புதுயுக தொழில் முனைவுக் காப்பகங்களின் கூட்டமைப்பின் பொறுப்பாளர்களுக்கு முதலில் நான் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இஸ்பாகான் 2022 (ISBACON – 2022) ஆண்டு விழா, இந்த ஆண்டு தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் நடப்பது உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழகம் வந்துள்ள உங்கள் அனைவரையும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் வருக, வருக என்று நான் வரவேற்கிறேன்.

ஆண்டு விழாவைத் தொடங்கி வைக்க என்னை அழைத்திருக்கும் பொறுப்பாளர்களுக்கு முதலில் என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில், உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களையும் இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்பு, என் மனதில் பட்ட ஓர் உணர்வை உங்களிடத்தில் வெளிப்படுத்த நான் விரும்புகிறேன். நிச்சயமாக, எந்த எண்ணத்தோடு இந்த மாநாட்டை நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்களோ, அந்த எண்ணம் நிச்சயமாக நிறைவேற்றப்படும், நிறைவேறும், அதில் எனக்கு எந்தச் சந்தேகமும் ஏற்படவில்லை. அதற்கு ஒரு உதாரணத்தை நான் சொல்ல வேண்டுமென்றால், எப்போதும் ஒரு அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும், ஒரு பொது நிகழ்ச்சியாக இருந்தாலும், கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும், ஒரு நேரத்தை குறிப்பிடுவார்கள். ஒன்று, இரண்டுக்கு விதிவிலக்கு, ஆனால், பெரும்பாலும் ஒரு அரை மணி நேரம், ஒரு மணி நேரம் தாமதமாகத்தான் தொடங்கும். ஆனால், இந்த நிகழ்ச்சி 10 மணிக்குத் தொடங்கும் என்று நிகழ்ச்சி நிரலில் போடப்பட்டிருக்கிறது. ஆனால் 10 நிமிடத்திற்கு முன்பே இந்த நிகழ்ச்சி தொடங்கி விட்டது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், நீங்கள் நிறைவேற்ற இருக்கக்கூடிய, வெற்றிப்பெற இருக்கக்கூடிய நிலையைப் பொறுத்தவரை, முன்கூட்டியே அது கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் கீழ்க்கண்ட மூன்று செயல்திட்டப் பரிந்துரை அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கிறது:

★ தமிழ்நாட்டிற்கான தொழில் காப்பகங்கள் மேம்பாட்டுக்கான செயல்திட்டங்கள்.

★ சவால் மிகுந்த புதிய சூழலில் தொழில் காப்பகங்களுக்கான பரவலாக்கப்பட்ட செயலாக்க மாதிரிகள்.

★ பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்புக் கொள்கைகளில் புத்தொழில் உருவாக்கம் மற்றும் தொழில் காப்பகங்களை இணைத்தல்.

இவை வெறும் அறிக்கைகளாக மட்டும் இருந்துவிடாமல் குறிப்பிடத்தக்கப் பலன்களை நடைமுறையில் உருவாக்க வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

மேலும், இந்திய அளவில் தொழில் காப்பகங்களின் வெற்றிக்கு நீண்டகாலமாகப் பெரும் பங்காற்றி வருவதற்காக இங்கே கௌரவிக்கப்பட்ட திரு.H.K.மிட்டல் அவர்கள், திரு.R.M.P.ஜவஹர் அவர்கள் மற்றும் திரு.K.சுரேஷ்குமார் அவர்களுக்குத் துணை நிற்கும் அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களது ஆண்டுவிழாவில் பங்கேற்பதன் மூலமாகத் தமிழ்நாடு அரசின் எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்கு இது நல்லதொரு வாய்ப்பாக நான் கருதிக் கொண்டிருக்கிறேன். தமிழ்நாடு என்பது கல்வியிலும், பொருளாதாரத்திலும், தொழில் வளர்ச்சியிலும், பண்பாட்டிலும், மேன்மை அடைந்த ஒரு மாநிலம்! இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது இளைஞர்களின் அறிவு சக்தி ஆகும். தமிழ்நாட்டில் அறிவு சக்தி நிரம்பிய ஏராளமான இளைஞர்கள் இருக்கிறார்கள். அத்தகைய இளைய அறிவு சக்தியை உருவாக்கக் கூடிய அறிவுசார் கல்வி நிறுவனங்களும் இங்குதான் அதிகம்.

★ இந்தியாவில் இருக்கும் மிகமுக்கியமான 100 கல்வி நிறுவனங்களில் 30க்கும் மேற்பட்டவை தமிழ்நாட்டைச் சார்ந்தவை என்று அண்மைக்கால புள்ளிவிவரங்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

★ தமிழ்நாடு தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்முனைவின் அடிப்படைகளில் தேவையான தகுதிகளுடன் முன்னிலையில் உள்ள மாநிலம்.

★ இந்த வரிசையில் புத்தாக்க மற்றும் புத்தொழில் முயற்சிகளிலும் கடந்த சில ஆண்டுகளாக நிலவிய தொய்வு நிலையை மாற்றி, மிக விரைவில் தமிழ்நாட்டினை உலகின் முன்னணி புத்தொழில் தளமாக மாற்றும் பணிகளை முடுக்கி விடும் நோக்கில் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

★ TANSIM எனப்படும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மூலமாகப் பல்வேறு ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இயக்கம் மூலமாக இதுவரை 29 புத்தொழில் நிறுவனங்களுக்கு ஊக்க உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை பன்மடங்காக உயர்த்தப்படும் என்ற உறுதியினை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உங்களைப் போன்ற புத்தொழில் காப்பகங்கள் மூலமாகவே இத்தகைய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் இயங்கும் புத்தொழில் காப்பகங்களை உலகத்தரத்துக்கு மேம்படுத்தவும் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தேவையான அளவுக்கு இத்தகைய புத்தொழில் காப்பகங்கள் மற்றும் புத்தொழில் பூங்காக்களையும் உருவாக்குவதற்குமான செயல்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

* தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் மட்டுமே ஏறத்தாழ 1.8 பில்லியன் அமெரிக்க டாலர்கள் 60 நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

* அதேபோல் விண்வெளித்துறை, மின் வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த நிறுவனங்களையும் இங்கு உருவாக்கி உங்கள் கவனத்தை ஈர்க்கவும் திட்டமிட்டுள்ளோம்.

* உயர் வருவாய் உள்ள தனிநபர் முதலீட்டாளர்கள் சென்னையில் மட்டுமல்லாது, மாநிலத்தின் இரண்டாம் மூன்றாம் கட்ட நகரங்களிலும் தன்னார்வ அமைப்பாக உருவாகிச் சிறு நிறுவனங்களில் முதலீடு செய்வதிலும் நாம் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக இருந்து கொண்டிருக்கிறோம்.

* வரும் நாட்களில் தமிழ்நாடு புத்தொழில் முதலீட்டாளர்களின் பணத்தோட்டமாக உருவெடுக்கும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய எண்ணங்கள், சிந்தனைகள், நோக்கங்கள், திட்டமிடுதல்கள் இப்போது இருப்பதைவிட மேலும் மேலும் விரிவடைய வேண்டும் என்பதே என்னுடைய ஆசை. கடந்த காலப் பெருமைகள், நிகழ்கால வளர்ச்சிகளை மட்டுமே சொல்லி நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது. எதிர்காலத்தை நோக்கிய உலக நாடுகளின் பயணம் எப்படி அமைந்துள்ளது என்பதை இப்போதே அறிந்தும் புரிந்தும் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வழக்கமான, குறிப்பிட்ட சில தொழில்களிலேயே நமது வளர்ச்சி அடங்கி இருக்கிறது. அதனை நான் குறை சொல்லவில்லை. அதே நேரத்தில் புதிய தொழில்களை நோக்கியும் நமது எண்ணங்கள் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகெங்கும் நான்காம் தொழிற்புரட்சி தொடங்கிவிட்டது. செயற்கை நுண்ணறிவும் (Artificial Intelligence); வேறு பல புதிய உற்பத்தி முறைகளும் எல்லாத்துறைகளிலும் மாற்றங்களை நிகழ்த்தி வருகின்றன.

தானியங்கி வாகனங்கள், தொலைவழி மருத்துவம், முப்பரிமாண அச்சு, மரபணுப் புரட்சி, மெய்நிகர் நுட்பங்கள் என தொழில்நுட்பவியல் விரிந்து பரவி விட்டது.

பெருந்தொற்றுச் சூழலில், தொழில் நிறுவனங்கள் இயங்கும் முறையே மாறிப்போயிருக்கிறது. இத்தகைய சூழலில், தொழில், தொழில் நிறுவனங்கள், பொதுமக்களுக்கான சேவை ஆகியவற்றின் தன்மை மாறுகிறது. அந்த வகையில் தொழிலதிபர்கள் தங்களது சிந்தனைகளையும் கூர்மைப்படுத்தியாக வேண்டும்.

தொழில்நுட்பம்தான் உலகின் போக்கைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான சக்தியாக இருக்கிறது என்பதை ‘21ஆம் நூற்றாண்டுக்கான 21 பாடங்கள்’ என்ற புத்தகத்தில் யுவால் நோவா ஹராரி சொல்லி இருக்கிறார். நாம் உருவாக்கி வைத்துள்ள உலகத்தை நாம் புரிந்து வைத்திருக்கிறோமா என்பதுதான் அவர் எழுப்பும் கேள்வி. இது ஏதோ தத்துவ, அரசியல் கேள்வி மட்டுமல்ல. அனைத்துத் தரப்பினரும் சிந்தித்துச் செயல்பட வேண்டிய கேள்வியாக அமைந்திருக்கிறது.

இத்தகைய புதிய சூழலில் இயங்க உங்களை நீங்கள் தகவமைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய மாற்றுச்சிந்தனை நிரம்பிய அரசாகத் தமிழ்நாடு அரசு செயல்படுகிறது.

பெரிய நிறுவனங்களை வரவேற்கிறோம். அதேநேரத்தில் சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கும் கூடுதல் முக்கியத்துவம் தந்து கொண்டிருக்கிறோம். தொழில் வளர்ச்சியை நிதி அளவுகோளாக மட்டுமில்லாமல், நீதியின் அளவுகோலாக, சமூகநீதியின் அளவுகோலாக நாங்கள் பார்க்கிறோம்.

புதிய புத்தாக்கத் தொழில்களில் இறங்கிப் பார்க்கும் தைரியமும், தன்னம்பிக்கையும் கொண்டதாக இந்த அரசு இருக்கிறது.

புதுயுக சிந்தனைகளுடன் சுதந்திரமாக இயங்கும் புத்தொழில்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இப்படித்தான் கணினித்துறையில் தைரியமாக 1996ஆம் ஆண்டே திராவிட முன்னேற்றக் கழக அரசு இறங்கியது. தமிழ்நாட்டில் கம்ப்யூட்டர் புரட்சியையே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் உருவாக்கினார்கள். இன்றைக்கு இருக்கும் டைடல் பார்க் கட்டடத்துக்கு 25 வயது. கால் நூற்றாண்டுக்கு முன்பே கம்ப்யூட்டர்தான் இளைய சமூகத்துக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் அற்புதமான தொழில் என்பதை உணர்ந்து, இந்தக் கட்டடத்தை கலைஞர் அவர்கள்தான் முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கித் தந்தார்கள்.

நமக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் மென்பொருள் உருவாக்கித் தந்த காலம் முடிந்துவிட்டது. வெளிநாட்டு நிறுவனங்கள் நம்மிடம் இருக்கும் பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதனை சாஸ் புரட்சி என்கிறார்கள். இதுதான் தி.மு.க.வின் புரட்சி.

சேவைவழி மென்பொருள் துறையில் இன்று சென்னை உலகளாவிய மையமாகவே மாறியிருக்கிறது. அண்மையில் சென்னையில் உருவான இத்துறை சார்ந்த ஒரு நிறுவனம் அமெரிக்காவின் பங்குச்சந்தையில் சாதனை படைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. பின்டெக் (Fintech), எஜுடெக் (Edutech), மீடியா டெக் (Mediatech), ஹெல்த்டெக் (Healthtech) எனப் பல களங்களில் நமது இளைஞர்கள் உலகத்தையே திரும்பிப்பார்க்க வைக்கும் தொழில்நுட்பங்கள் மூலமாக உருவாக்கத் தொடங்கி விட்டார்கள். இந்தச் சாதனையோடு நாம் அமைதியாகி விடக்கூடாது. அடுத்த சாதனைக்குத் தயாராக வேண்டும் என உங்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு 2030க்குள், அதன் மாநில மொத்த உள் உற்பத்தி மதிப்பை ஒரு டிரில்லியன் டாலர் என்ற அளவுக்கு உயர்த்தவேண்டும் என்று நான் உறுதி ஏற்றிருக்கிறேன். இது சாத்தியமாக வேண்டும் என்றால் ஆயிரக்கணக்கான புத்தொழில் நிறுவனங்கள் உருவாக வேண்டும். அவை உள்ளூர் சந்தையிலும் உலகச் சந்தையிலும் வெற்றிபெற வேண்டும். பல இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தாக வேண்டும். இதுதான் நாம் காண வேண்டிய வளர்ச்சி!

இம்மாநிலத்தின் அனைத்துப் பகுதிகள் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களை உள்ளடக்கிய வளர்ச்சியாக, சுற்றுச்சூழலைச் சீர்குலைக்காத வளர்ச்சியாக, அறிவை மையப்படுத்திய வளர்ச்சியாக இருக்க வேண்டும். அப்போதுதான் வளர்ச்சி என்பதன் பொருள் முழுமை பெறும். இந்தப் புதிய விதமான வளர்ச்சியைப் பெற புதிய சூழல்களை நாம் உருவாக்க வேண்டும்.

புதிய தொழில் திறனாளர்கள் உருவாக வேண்டும். புதிய தொழில் முனைவோர் உருவாகி அவர்கள் பல்வேறு வெற்றிகளைப் பெற்றாக வேண்டும். இவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து நிலைகளிலிருந்தும் வரவேண்டும்.

வளர்ச்சிக்கு அடையாளமான, அதே வளர்ச்சிக்கு அடிப்படையான முதன்மை முதலீடு மனிதவள முதலீடே. தொழில் முனைவோர்களும் தொழில் திறனாளர்களுமே இந்தச் சூழலை உருவாக்குகிறார்கள். எண்ணங்களே ஏற்றத்தை உருவாக்குகின்றன, மனிதர்களே மாற்றத்தை உருவாக்குகிறார்கள்.

இதனை அறிந்து தொழில் திறனாளர்களையும் தொழில்முனைவோர்களையும் கண்டறிந்து அவர்களை ஆதரித்து அவர்களை ஊக்கப்படுத்துவதிலே டான்சிம் என்ற எங்கள் புத்தாக்க மற்றும் புத்தொழில் இயக்கத்தின் கடமையாக இருக்கிறது.

புதிய நூற்றாண்டின் புதிய சவால்களை எதிர்கொள்ளவும், புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், புத்தாக்கத்தின் வழியாகப் புதிய தொழில்கள் உருவாக்கவும், இந்த அரசு நிச்சயமாகத் துணை நிற்கும். இந்த நல்ல வேளையிலே இஸ்பாகான் (ISBACON) 14 ஆண்டு மாநாட்டினை முறைப்படி தொடங்கி வைக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உலகப் புத்தாண்டுக்கும், தை முதல் நாளாம் தமிழர் திருநாளுக்கும் சேர்த்து உங்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைச் சொல்லி விடைபெறுகிறேன்.

கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் தொன்மையும், இலக்கிய வளமும் நிறைந்த தமிழ் மொழியானது 2004ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. செம்மொழித் தமிழுக்கெனத் தனித்தன்மையுடன் கூடிய ஒரு ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவினை நிறைவேற்ற, ஒன்றிய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டதன் அடிப்படையில் 2006ஆம் ஆண்டு இந்திய மொழிகளுக்கான நடுவண் நிறுவனத்தின் ஒரு அங்கமாகச் செம்மொழிக்கான நிறுவனமொன்று அமைக்கப்பட்டது. பின்னர் 2008ஆம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் எனத் தன்னாட்சி பெற்ற நிறுவனமாகச் சென்னையில் அமையப்பெற்றது.

சென்னை, பெரும்பாக்கத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒதுக்கப்பட்ட 16.586 ஏக்கர் நிலத்தில், ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன கட்டடத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் 12.01.2022 அன்று காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முக்கியத்துவம் கருதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 24.07.2008 அன்று தம் சொந்த நிதி ஒரு கோடி ரூபாயை வைப்புத் தொகையாக அளித்து ‘கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை’யை நிறுவினார்.

இந்த அறக்கட்டளையின் மூலமாக ஆண்டுதோறும் ‘கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது’ வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது இந்தியாவிலேயே மிக உயரிய வகையில் ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும், வெண்கலத்தாலான கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவச்சிலையும் அடங்கியதாகும்.

தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் ஆகிய துறைகளில் செம்மொழித் தமிழாய்வுக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ள ஆய்வாளருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

அறக்கட்டளை துவங்கப்பட்ட பின் 2009ஆம் ஆண்டிற்கான முதல் விருது பின்லாந்து நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா அவர்களுக்கு 2010, ஜூன் 23 அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அன்றைய மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது 2010 முதல் 2019 வரையிலான பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது.

தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் நிறுவனத்தின் 8ஆவது ஆட்சிக்குழுக் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 30.08.2021 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2010ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளுக்குரிய கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளுக்கான விருதாளர்கள் பட்டியல் மீது ஒப்புதல் பெறப்பட்டது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.01.2022 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள் வழங்கும் விழாவில்,

- 2011ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் பொன். கோதண்டராமன் அவர்களுக்கும் (மேனாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்)
- 2012ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் (மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்)
- 2013ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்களுக்கும் (மேனாள் இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், மேனாள் பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம்)
- 2014ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் கு.மோகனராசு அவர்களுக்கும் (மேனாள் பேராசிரியர், தலைவர், திருக்குறள் ஆய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)
- 2015ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் மறைமலை இலக்குவனார் அவர்களுக்கும் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை)
- 2016ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் கா.ராஜன் அவர்களுக்கும் (மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம்)
- 2018ஆம் ஆண்டிற்கான விருதினைக் கவிஞர் ஈரோடு தமிழன்பன் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், புதுக்கல்லூரி, சென்னை)
- 2019ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் கு.சிவமணி (மேனாள் முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் & திருவள்ளுவர் கல்லூரி, நெல்லை)

ஆகிய விருதாளர்களுக்கு விருதுடன் ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும், வெண்கலத்தாலான கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவச்சிலையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

2010ஆம் ஆண்டிற்கான விருதிற்குத் தெரிவு செய்யப்பட்ட முனைவர் வீ.எஸ்.ராஜம் (Senior Lecturer, Department of South Asia Regional Studies, University of Pennsylvania, USA) மற்றும் 2017ஆம் ஆண்டிற்கான விருதிற்குத் தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ் (Professor and Head of the Institute of Indology and Tamil Studies, Cologne University, Germany) ஆகியோர் இவ்விழாவிற்கு வர இயலாததால் அவர்களுக்குப் பிறிதொரு நாளில் விருது வழங்கப்படும்.

விழாவில் மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பெருமை சேர்த்திருக்கக்கூடிய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களே! மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களே!

இந்த விழாவைச் சிறப்போடு ஏற்பாடு செய்து அதில் வெற்றி கண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே! மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி

அவர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே! தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்களே! செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்களே! செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா.சந்திரசேகரன் அவர்களே! விருதுகளைத் தேர்வு செய்திருக்கக்கூடிய நடுவர் பெருமக்களே! தமிழறிஞர்களே!

அரசு உயர் அலுவலர்களே! பத்திரிகை, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"தமிழுக்கும் அமுதென்றுபேர் – அந்தத் தமிழ்
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!"

என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை நெஞ்சில் ஏந்தி, இந்த விழாவின் மேடையில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன்.

தமிழுக்குச் செம்மொழித் தகுதி ஏற்பட வேண்டும் என்பது தமிழறிஞர்களின் நூற்றாண்டுக் கனவு. அந்தக் கனவை நிறைவேற்றிய தலைவர்தான் நம்முடைய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

அத்தகைய தலைவர் கலைஞரின் பெயரால் அமைந்திருக்கக்கூடிய செம்மொழித் தமிழாய்வு விருதுகள், அதை விழாவாக, அதிலும் குறிப்பாக, பேரறிஞர் அண்ணா பெயரில் அமைந்திருக்கக்கூடிய இந்த நூலகத்தின் அரங்கத்தில் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அண்ணனாகவும், தம்பியாகவும் இருந்து தமிழுக்குத் தொண்டாற்றிய இரண்டு பெருமக்களின் நினைவை ஏந்தி இந்த விழா மேடையில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன்.

தமிழ் தொன்மையான மொழி என்பதைத் தமிழர்கள் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை. உலகம் முழுவதும் இருக்கும் மொழியியல் அறிஞர்கள், இனவியல் அறிஞர்கள் அதைத்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாபெரும் உண்மை இது.

தமிழ், குறிப்பிட்ட நாட்டு மக்கள் பேசும் மொழியாக மட்டுமல்ல, ஒரு பண்பாட்டின் அடையாளமாக இருக்கிறது நம்முடைய தமிழ் மொழியானது. நிலத்துக்கு, மண்ணுக்கு, இயற்கைக்கு, மக்களுக்கு, பண்பாட்டுக்கு இலக்கணத்தை வகுத்திருக்கக்கூடிய மொழி!

தமிழைப் பேசும்போது இனிமையாக இருக்கிறது. தமிழைக் கேட்கும்போது இனிமையாக இருக்கிறது. ஏன், 'தமிழ்' என்று சொல்லும்போதே இனிமையாக இருக்கிறது.

தமிழ் என்றாலே இனிமை என்றுதான் பொருள்! 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்' என்று பிங்கலநிகண்டும் கூறுகிறது!

தமிழ், உலகின் மூத்த மொழிகளில் ஒன்று! தமிழ், எந்த மொழியிலிருந்தும் கடன் வாங்கி உருவான கிளை மொழி அல்ல. தமிழிலிருந்துதான் ஏராளமான மொழிகள் உருவாகியுள்ளன.

இப்படிப் பல மொழிகளை உருவாக்கும் திறன்கொண்ட மொழிதான், நமது தாய்மொழியான தமிழ். தமிழ், தமிழரசி, தமிழரசன் என்று மொழியின் பெயரையே பெயராக வைத்துக்கொள்ளும் அளவுக்குப் பற்று நம் இனத்தில் இருக்கிறது. மொழிக்காக உயிரைத் தந்த தியாகிகளைப் பெற்ற மொழியும் நம் தமிழ்மொழி ஆகும்.

இலக்கியச் செழுமையும் இலக்கண அறிவும் கொண்ட மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் அறிஞர்கள் இடையே பல ஆண்டுகளுக்கு முன்பே எழுந்தது. அந்தக் கனவை நிறைவேற்றி வைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

2004ஆம் ஆண்டு அக்டோபர் 14ஆம் நாள், ஒன்றிய அரசால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், அன்றைய ஒன்றிய அரசால் 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது.

தொடக்கத்தில் இந்த நிறுவனம், மைசூரில், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திலிருந்து செயல்பட்டது. 2008ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் நாள் முதல் சென்னைக்கு இந்த நிறுவனம் மாற்றப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அப்போதுதான் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என்று பெயர் சூட்டப்பட்டது. இதற்கும் காரணமாக இருந்தவர் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள பாலாறு இல்லத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத்தை 2008ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் நாள் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

செம்மொழி நிறுவனத்துக்கு எனத் தனியாக ஒரு கட்டடம் அமைய வேண்டும் என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆசைப்பட்டார்கள். அதற்காக 2007ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் நாள் சென்னை பெரும்பாக்கத்தில் 16 ஏக்கர் நிலத்தை வழங்கினார்கள். சுமார் ரூ.1.45 கோடி மதிப்பில் அந்த இடத்தை சமப்படுத்தி வழங்கினோம்.

அந்த இடத்தில் ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அரசு மாபெரும் கட்டடம் அமைத்துத் தந்துள்ளது. கடந்த 12ஆம் தேதி அந்தக் கட்டடத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள்.

காணொலி வாயிலாக நடந்த அந்த விழாவுக்கு நான் முன்னிலை வகித்துப் பேசும்போது, "மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார்கள். அதற்காகத் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், அரசின் சார்பிலும், தனிப்பட்ட என் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுச் சொன்னேன்.

"தலைவர் கலைஞர் அவர்கள் இன்று இருந்திருந்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின்போது தமிழுக்கு இத்தகைய சிறப்புச் செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது" என்று குறிப்பிட்டுக் காட்டியிருப்பார்கள்.

அதன் பிறகு நானும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும் பெரும்பாக்கம் சென்று தமிழாய்வு நிறுவனத்தைப் பார்வையிட்டோம். உண்மையில் மிகச் சிறப்பாக அந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தொடக்கம் முதல் இன்று வரை இதன் வளர்ச்சிக்குப் பாடுபட்ட அனைவருக்கும் தமிழக அரசின் சார்பில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்கி வருகிறது.
- தொல் பழங்காலம் முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டுவரையிலான காலப்பகுதிக்குள் தோன்றிய இலக்கிய, இலக்கணம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நிறுவனம், தமிழ்மொழி ஆய்விலும் அதன் மேம்பாட்டிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.
- செம்மொழித் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந்நிறுவனம் கருதிக் கொண்டிருக்கிறது.

இந்த வரிசையில் செம்மொழித் தமிழாய்வில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்புச் செய்தவர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்துக்கு, 2008ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் நாள், தனது சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் அறக்கட்டளை' என்ற பெயரால் ஓர் அறக்கட்டளையை நிறுவினார்கள். இந்த அறக்கட்டளை சார்பில் தகுதிசால் தமிழறிஞர்களுக்கு விருது வழங்க வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விரும்பினார்கள்.

இந்தியாவிலேயே மிக உயரிய விருதாக, பத்து

இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை கொண்டது இந்த விருது. பாராட்டு இதழும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவம் பொறித்த நினைவுப்பரிசும் வழங்கப்படும்.

முதல் விருது 2010, ஜூன் 23 அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், அன்றைய குடியரசுத் தலைவர் அவர்களால் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த 'பேராசிரியர் அஸ்கோபார்ப்போலா' அவர்களுக்கு வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக ஆண்டுதோறும் இந்த விருதைத் தொடர்புடைய அரசுகள் வழங்கி இருக்க வேண்டும். அதை இந்த மேடையில் பேசி நான் அரசியலாக்க விரும்பவில்லை.

தமிழுக்கு, தமிழறிஞர்களுக்குச் செய்ய வேண்டிய பாராட்டுகள், மரியாதையில் கூட அரசியல் புகுந்ததன் காரணமாக, 2011ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை இந்த விருதுகள் வழங்கப்படவில்லை. கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

வேறு எதற்காக இல்லாவிட்டாலும், தமிழறிஞர்களுக்கு விருது கொடுப்பதற்காகவாவது, தமிழ்நாட்டில் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மலர்ந்ததை நினைத்து இன்றைய நாளில் நான் பெருமைப்படுகிறேன்.

எப்போதும் தமிழுக்காகவே உழைத்திடும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதெல்லாம், தமிழின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால்,

- நமது மாநிலத்துக்கு மொழியின் பெயரால் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி!
- தமிழ்த்தாய் வாழ்த்தை நிறுவி, அதனை மாநிலப் பாடல் ஆக்கியது, கழக ஆட்சி!
- உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளைப் பேரறிஞர் அண்ணா தலைமையில் தொடங்கி, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வரை நடத்தி, தமிழை உலகளவில் கொண்டு சென்றது.
- அய்யன் வள்ளுவர், அவ்வையார் முதலான பழங்காலத் தமிழ்ப் புலவர்கள் தொடங்கி, கால்டுவெல், ஜி.யு.போப் போன்ற அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் வரை, திருவுருவச்சிலை நிறுவியதும் கழக ஆட்சியில்தான்.
- தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குச் சமூகநீதி வழியில் உயர்கல்வியில் இட ஒதுக்கீடு தந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான்!
- வள்ளுவருக்குச் சென்னையில் கோட்டமும், குமரியில் 133 அடியில் வானுயர்ந்த சிலையும் நிறுவி உலகமே அண்ணாந்து பார்க்க வைத்த ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி!
- சுவடிகளிலிருந்து புத்தகங்களுக்குத் தமிழ் மாறியது போல், தமிழை இணையத்துக்குக் கொண்டு செல்ல 1999லேயே தமிழ் இணைய மாநாடு நடத்தியதும், தமிழ் இணையக் கல்விக் கழகத்தை நிறுவி, இன்று உலகில் எங்கிருந்தாலும், தமிழ் இலக்கண, இலக்கியங்களை அனைவரும் படிக்கும் அளவிற்குத் தமிழை இணையப்படுத்தியதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான்.

இப்படி என்னால், ஒரு நீண்ட பட்டியலைச் சொல்லிக் கொண்டிருக்க முடியும்!

இப்படித் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழுக்கு ஆற்றிய பணிகளின் தொடர்ச்சியாகத்தான் இந்த விழாவில் சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகம் அமைந்துள்ள மேடவாக்கம், சோழிங்கநல்லூர் இணைப்புச்சாலை இனி "செம்மொழிச்சாலை" எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.
- செம்மொழிச் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாகத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள 5 பல்கலைக்கழகங்களில் 'செம்மொழித் தமிழ் இருக்கைகள்' அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல திட்டங்களைச் செம்மொழி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. செம்மொழி நிறுவனம் முன்வைத்துள்ள இலக்குகளை அடைய, தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும்.

விருது பெற்ற தமிழறிஞர்கள் அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். உங்களுக்கு விருது வழங்கியதன் மூலமாகச் செம்மொழி நிறுவனம் பெருமை அடைகிறது, ஏன், நானும் பெருமை அடைகிறேன், தமிழ்நாடு அரசும் பெருமை அடைகிறது.

இந்த விருதின் மூலமாகத் தமிழ்மொழி மேலும் சிறப்படையப் பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளை நீங்கள் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பழமைக்குப் பழமையாய், புதுமைக்கு என்றும் புதுமையாய் இருக்கக்கூடிய மொழி நம்முடைய தமிழ் மொழி!

இந்த மொழி குறித்த ஆய்வுகள் தமிழ்நாட்டோடு, இந்திய எல்லையோடு முடிந்துவிடாமல் உலகளாவியதாக அமைய வேண்டும். உலக மொழியியல் கோட்பாடுகளை உள்ளடக்கியதாக நமது ஆய்வுகள் அமைய வேண்டும்.

மொழியை ஒரு பண்பாடாகச் சொல்வது உலக மரபாகவே உள்ளது. ‘நோம்சாம்ஸ்கி’ போன்ற உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள், மொழியை மூளையின் ஓர் உறுப்பு என்று சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். “குழந்தையின் மூளைக்குள் ஒரு மொழியறிவு இருக்கிறது, இது மனித இனத்துக்கே உரியது” என்று அவர் சொல்கிறார்.

‘தமிழ் எங்கள் இளமைக்குப் பால்’ என்று எப்போதோ சொல்லிவிட்டார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

உங்களது ஆய்வுகள் அறிவுப்பூர்வமானதாக மட்டுமில்லாமல் உணர்வுப்பூர்வமானதாகவும் அமைய வேண்டும். அப்படி அமைந்தால் உலக மொழியியல் அறிஞர்கள் அனைவரும் தேடி வரக்கூடிய இடமாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நிச்சயமாக மாறும். அப்படி உயர்ந்து நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

‘எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!’ என்று பேரறிஞர் அண்ணா காட்டிய பாதையில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு நடைபோடும் நமது அரசு, தமிழை ஆட்சிமொழியாகவும் வழக்காடு மொழியாகவும் மேலும் உயர்த்திடத் தொடர்ந்து குரல் கொடுக்கும் என்பதைக் கூறி, தமிழ் வாழ்க! செம்மொழித் தமிழ் வாழ்க! என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.



2021ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் மற்றும் டாக்டர் அம்பேத்கர் விருது

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும், சமூக நீதிக்காகப் பாடுபடுபவர்களைச் சிறப்பு செய்யும் வகையில், “சமூகநீதிக்கான தந்தை பெரியார் விருதினை” வழங்கி கௌரவித்து வருகிறது. அந்தவகையில், 2021ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான “தந்தை பெரியார் விருது” திராவிட இயக்க ஆய்வாளரும், எழுத்தாளருமான திரு.க.திருநாவுக்கரசு அவர்களுக்கு வழங்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

அதே போன்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டுவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் “டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது” வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், 2021ஆம் ஆண்டிற்கான “டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது” மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு.கே.சந்துரு அவர்களுக்கு வழங்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், இவ்விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக தற்போது வழங்கப்பட்டு வரும் ஒரு இலட்சம் ரூபாய் என்பதை இவ்வாண்டு முதல் ரூபாய் ஐந்து இலட்சமாக உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவ்விருதுகள், விருதுத் தொகையுடன், தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரையுடன் வழங்கப்படும்.

சமூக நீதிக்கான “தந்தை பெரியார் விருது” பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள திரு.க.திருநாவுக்கரசு அவர்கள் “திராவிட இயக்கத்தின் நடமாடும் கலைக்களஞ்சியம்” எனத் தமிழ்ச் சமூகத்தால் போற்றப்படுபவர். திராவிட இயக்க வரலாறான “நீதிக்கட்சி வரலாறு” என்னும் நூலை அது 1916இல் தொடங்கப்பட்டது முதல் 1944இல் “திராவிடர் கழகம்” எனப் பெயர் மாற்றம் பெற்றது வரை இரண்டு தொகுதிகளாகப் படைத்துள்ளார். மேலும், திராவிட இயக்க வேர்கள், திராவிட இயக்கத் தூண்கள் போன்ற பல்வேறு வரலாற்று நூல்களையும் எழுதி தமிழ்ச்சான்றோர்களின் பாராட்டுகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது எழுத்துப்பணியைப் போற்றிப் பாராட்டும் வகையில், கடந்த 2006ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசின் திரு.வி.க. விருது, அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் இவருக்கு வழங்கப்பட்டது நினைவு கூரத்தக்கது.

“டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது” பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு. கே.சந்துரு அவர்கள், தன்னுடைய பணிக் காலத்தில் 96,000 வழக்குகளுக்குத் தீர்வு கண்டு சாதனை படைத்தவர். இவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகளை வழக்காடும் வழக்கறிஞராகப் பணியாற்றி, ஏழை, எளிய மக்கள் மற்றும் தொழிலாளர்களின் குரலாய் உயர்நீதிமன்றத்தில் ஒலித்து, மாபெரும் சாதனை படைத்தவர். ஜூலை 31, 2006 அன்று மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்ட இவர், 2009ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9ஆம் நாளன்று நிரந்தர நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார்.

இவர் அளித்த பல்வேறு தீர்ப்புகள் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன் காப்பதாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும், சாதிய வேறுபாடுகள், ஒடுக்கப்பட்டோர், பட்டியலின மக்கள் மற்றும் பழங்குடியினர் உரிமை மறுப்பு ஆகியவற்றிற்கு எதிரான இவரது தீர்ப்புகளால் மக்களிடையே மிகுந்த நன்மதிப்பைப் பெற்றார். ‘அம்பேத்கர் ஒளியில் எனது தீர்ப்புகள்’, என் வழக்கை கவனி! ‘தமிழ்நாட்டில் ஒரு பெண் நீதிமன்றத்தை அணுகும்போது’ ஆகிய நூல்களை எழுதியுள்ள இவர், தமிழகம் முழுவதும் பயணம் செய்து, விளிம்பு நிலை மக்களுடன் வாழ்ந்து, தமிழ்ச் சமூகம் மற்றும் அதன் பண்பாட்டின் பன்முகத்தன்மையைப் புரிந்துகொண்டு, செயல்பட்டது குறிப்பிடத்தக்கது (13.01.2022).

தமிழ்நாட்டில் ரூ.4,080 கோடியில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் புதுடில்லியிலிருந்து 12.01.2022 அன்று காணொலிக் காட்சி வாயிலாக, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மற்றும் மாண்புமிகு ஒன்றிய மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் முனைவர் மன்சுக் மாண்டவியா ஆகியோர் முன்னிலையில் ரூ.4,080 கோடி செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு மருத்துவக் கல்லூரிகளையும், சென்னை பெரும்பாக்கத்தில் ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கான குறியீடுகளில் ஒன்றாக, மக்கள் நல்வாழ்வு விளங்கி வருகிறது. மக்கள் நல்வாழ்வு என்பது, மாநிலத்தில் உள்ள மருத்துவக் கட்டமைப்புகள், மனிதவளம் மட்டுமல்லாமல், மாநிலத்தில் வாழும் மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் சார்ந்தது. தமிழ்நாட்டில், பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவக் கட்டமைப்புகள் மாநிலத்தில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும் கிடைக்கும் வகையில், கண்ணொளித் திட்டம், 108 ஆம்புலன்ஸ் சேவைத் திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் அரசு மருத்துவமனையுடன் கூடிய மருத்துவக் கல்லூரிகள் போன்ற பல்வேறு திட்டங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் செயல்படுத்தப்பட்டது.

அதேபோன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர்க் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம் போன்ற மக்கள் நல்வாழ்விற்கான பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருவதோடு, தமிழகத்தில் மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தி வருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட மக்களுக்கும் தரமான மருத்துவச் சிகிச்சை அளித்திடும் வகையில், எல்லா மாவட்டங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரி அமைத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அந்த வகையில், அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களான விருதுநகர், கள்ளக்குறிச்சி, நீலகிரி, இராமநாதபுரம், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், அரியலூர், நாகப்பட்டினம் ஆகிய 11 மாவட்டங்களில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புது டெல்லியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

புதியதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் 1,450 எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான இடங்கள் கூடுதலாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் 11,200 மருத்துவ வல்லுநர்கள் மற்றும் பணியாளர் பணியிடங்கள் புதியதாக உருவாக்கப்படுகின்றன. இதன்மூலம், இம்மாவட்டங்கள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் சுமார் ஒன்றரைக் கோடி மக்களுக்குத் தரமான உயர் மருத்துவச் சிகிச்சைகள் கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட பெரும் முயற்சியால், உலகின் மூத்த மொழியாம், சொல் வளமும், இலக்கிய வளமும் கொண்ட தமிழ் மொழியை 14.10.2004 அன்று ஒன்றிய அரசு செம்மொழியாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 18.08.2007 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தொடங்கி வைக்கப்பட்டது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்கி வருகிறது. தொல் பழங்காலம் முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதிக்குள் தோன்றிய இலக்கிய, இலக்கணம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் தமிழ் மொழி ஆய்விலும், அதன் மேம்பாட்டிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. செம்மொழித் தமிழின் தொன்மையையும், தனித் தன்மையையும், அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந்நிறுவனம் கொண்டுள்ளது.

கொண்டு இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்குத் தங்களின் நேரத்தை ஒதுக்கித் தந்தமைக்காக, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி அமைய வேண்டும் என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கனவாகும்.

2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைத் தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்கள். அதில் கல்வி என்ற துணைத் தலைப்பில் ஒரு குறிக்கோளை அறிவித்தார்கள்.

“மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற குறிக்கோளை நடைமுறைப்படுத்துவோம்” என்று அறிவிக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பின்தங்கிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகளை அமைக்கத் திட்டமிடுதல்களைச் செய்திருக்கிறோம். ‘அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள்’ என்ற முத்தமிழறிஞர் கலைஞரின் கனவுதான் இன்றைய நாள் நிறைவேறி இருக்கிறது.

இன்று நமது நாட்டிலேயே அரசு மருத்துவக் கல்லூரிகளில் மிக அதிக எம்.பி.பி.எஸ். இடங்களையும், மருத்துவ மேற்படிப்பு இடங்களையும் கொண்டு, மருத்துவத் துறையில் நமது நாட்டிற்கே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கான அனுமதியையும், ஒத்துழைப்பையும், நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கி வரும் ஒன்றிய அரசுக்கும், குறிப்பாக, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் இத்தகைய முயற்சிகளுக்கு ஒன்றிய அரசு அளித்துள்ள ஆதரவிற்கு நன்றி கூறக்கூடிய அதேநேரத்தில், புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு மாநில அரசிற்குத் தங்களது அரசு தொடர்ந்து உதவி அளிக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் மட்டுமின்றி, மக்களுக்குப் பயன்தரும் மருத்துவத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், தமிழ்நாடு அரசு, குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு, நாட்டிற்கே முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பதவியிலிருந்தபோது 2007ஆம் ஆண்டு சென்னை, பெரும்பாக்கத்தில் 16.586 ஏக்கர் நிலத்தைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வழங்கினார். அந்நிலத்தில் ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கட்டடத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கான கட்டடம் தரை மற்றும் மூன்று தளங்களுடன் சுமார் 70,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் நூலகம் மற்றும் கருத்தரங்கக் கூடங்களும், முதல் தளத்தில் அலுவலக அறைகளும், மின் நூலகமும், இரண்டாம், மூன்றாம் தளங்களில் கல்விசார் அலுவலர்களுக்கான அறைகளும், பன்னோக்கு ஒலி–ஒளிக் காட்சிக் கூடமும் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு மருத்துவக் கல்லூரிகள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கான புதிய கட்டடம் ஆகியவை காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை – 12.01.2022

மாண்புமிகு பிரதமர் அவர்களே!

மாண்புமிகு ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களே! ஒன்றிய துணை அமைச்சர் பெருமக்களே! தமிழகத்தின் ஆளுநர் அவர்களே! தமிழ்நாடு அரசின் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! ஒன்றிய, மாநில அரசுகளின் உயர் அதிகாரிகளே! அலுவலர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர்களே! மருத்துவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கம்!

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்த பிறகு மாண்புமிகு பிரதமர் அவர்கள் கலந்துகொள்ளக்கூடிய முதல் அரசு விழா என்பதால் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் வாழ்த்துக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தனது பல்வேறு பணிகளுக்கிடையே தமிழ்நாட்டு மக்களின், குறிப்பாக, மாணவர்களின் நலனை மனதில்

★ கண்ணொளித் திட்டம்,

★ முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்,

★ மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்,

★ வருமுன் காப்போம் திட்டம்,

★ மக்களைத் தேடி மருத்துவம்,

★ நம்மைக் காக்கும் 48

எனத் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் பலவற்றை என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இவ்வாறு புதுமையான திட்டங்களைத் தீட்டி, சிறப்புறச் செயல்படுத்தும் தமிழ்நாடு அரசின் மருத்துவத்துறைக்கு ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீடுகள் மேலும் உயர்த்தப்பட வேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பல மாநிலங்களில் மருத்துவர்களின் பற்றாக்குறை நிலவி வரும் இச்சூழலில், தமிழ்நாட்டில் மருத்துவம் பயிலும் மாணவர்கள் கிராமப்புறங்களிலும் அரசுத் துறையிலும் சிறப்பாகச் சேவை செய்வதற்குத் தமிழ்நாடு அரசின் மாணவர் சேர்க்கைக் கொள்கையே அடிப்படையாகும்.

எங்களது கொள்கை, இந்த வாய்ப்புகளைத் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்வதே!

தமிழ்நாட்டின் மருத்துவத்துறையின் வெற்றியும் இந்தக் கொள்கையின் விளைவே!

இந்த அடிப்படைக் கொள்கை பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்!

எனவே மனிதவள ஆற்றலின் அடித்தளமாக அமைந்துள்ள மாணவர் சேர்க்கைமுறை தொடர்பான தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஒன்றிய அரசு நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Honourable Prime Minister, the admission policy of Tamil Nadu plays a very important role in our health infrastructure. It is to protect this, we have been continuously demanding NEET exemption for Tamil Nadu. I appeal Union Government to consider our request favourably.

இந்த நாளில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைக்க இருக்கிறார்கள். அதற்காகத் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், அரசின் சார்பிலும், தனிப்பட்ட என் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இன்று இருந்திருந்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். தமிழர்களின் நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியை 2004ஆம் ஆண்டு பெற்றுத்தந்தவர் கலைஞர் அவர்கள். அவரது முயற்சியால் உருவாக்கப்பட்ட நிறுவனம்தான் இந்தச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம். அந்த நிறுவனத்துக்கு ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் அமைத்துத் தந்த ஒன்றிய அரசுக்கும், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின்போது தமிழுக்கு இத்தகைய சிறப்புச் செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது.

தமிழுக்குச் சிறப்புச் செய்யும் செம்மொழி நிறுவனத்தின் கட்டடத்தையும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கும் மருத்துவக் கல்லூரிகளையும் திறந்து வைக்கக்கூடிய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துகளை மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், அனைவருக்கும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

திருவள்ளுவரை வாழ்த்திப் பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குரல் பதிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 13.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் மற்றும் இயக்குநர் திரு. ஸ்ரீராம் சர்மா அவர்கள் சந்தித்து, திருவள்ளுவர் திருவுருவம் அரங்கேற்றப்பட்ட 1959ஆம் ஆண்டு ஓவியப் பெருந்தகை கே.ஆர்.வேணுகோபால் சர்மா அவர்களின் இல்லத்துக்கு நேரில் சென்று திருவள்ளுவரை வாழ்த்திப் பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பதிவு செய்யப்பட்ட குரல் தொகுப்பினை வழங்கினார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் ஆய்வு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட பெரும் முயற்சியால், உலகின் மூத்த மொழியாம், சொல் வளமும், இலக்கிய வளமும் கொண்ட தமிழ் மொழி 2004ஆம் ஆண்டு, அக்டோபர் 12ஆம் நாள் ஒன்றிய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. செம்மொழித் தமிழுக்கெனத் தனித்தன்மையுடன் கூடிய ஒரு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவினை நிறைவேற்ற, ஒன்றிய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில் 2006ஆம் ஆண்டு இந்திய மொழிகளுக்கான நடுவண் நிறுவனத்தின் ஒரு அங்கமாக செம்மொழிக்கான நிறுவனமொன்று அமைக்கப்பட்டது. பின்னர் 2008ஆம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என தன்னாட்சி பெற்ற நிறுவனமாக சென்னையில் அமையப்பெற்றது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்கி வருகிறது. தொல்பழங்காலம் முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதிக்குள் தோன்றிய இலக்கிய, இலக்கணம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட இந்நிறுவனம், தமிழ் மொழி ஆய்விலும், அதன் மேம்பாட்டிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. செம்மொழித் தமிழின் தொன்மையையும், தனித் தன்மையையும், அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந்நிறுவனம் கொண்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2007ஆம் ஆண்டு சென்னைக்கு அருகில் உள்ள பெரும்பாக்கத்தில் 16.86 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசின் சார்பில் செம்மொழி நிறுவனத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்நிலத்தில் ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கட்டடம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆட்சிக்குழு தலைவரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு பிரதமர் அவர்களால் 12.01.2022 அன்று காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டது.

இக்கட்டடம் தரைத்தளத்துடன் மொத்தம் நான்கு தளங்களைக் கொண்டுள்ளது. தரைத்தளத்தில் 45,000க்கும் மேற்பட்ட தொன்மையான நூல்களைக் கொண்ட நூலகமும், திருவள்ளுவர் அரங்கம் மற்றும் தொல்காப்பியர் அரங்கம் என இரண்டு கருத்தரங்க அறைகளும் உள்ளன. முதல் தளத்தில் கல்விசார் பணியாளர்களுக்கான அறைகள், அலுவலகம், இயக்குநர், பதிவாளர் மற்றும் நிதி அலுவலர் ஆகியோருக்கான அறைகள் உள்ளன. இரண்டாம் தளத்தில் மின்நூலகம், காட்சிவழிக் கற்பித்தல் அரங்கு, வலையொலி அரங்கு முதலானவையும் உள்ளன. மூன்றாம் தளத்தில் வருகைதரும் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் தங்கி ஆய்வு செய்யும் விதமாக அமைக்கப்பட உள்ளது.

இத்தகைய சிறப்பான கட்டமைப்புகளை உள்ளடக்கியுள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் செயல்பாடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்வதற்காக 17.01.2022 அன்று பெரும்பாக்கத்தில் அமைந்துள்ள புதிய வளாகத்திற்கு வருகை புரிந்து, அங்குள்ள நூலகத்தைப் பார்வையிட்டார். நூலகத்திலுள்ள பழமையான நூல்கள் குறித்தும், செவ்வியல் நூல்களின் மின்படியாக்கம் குறித்தும் ஆவலோடு கேட்டறிந்தார்.

மேலும், திருவள்ளுவர் அரங்கம் மற்றும் தொல்காப்பியர் அரங்கம், கல்விசார் பணியாளர்கள், நிருவாகப் பிரிவு அலுவலகங்களைப் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, செம்மொழி நிறுவன ஆய்வுசார் பணிகள் குறித்துக் கேட்டறிந்தார். அப்போது நிறுவன

இயக்குநர் காட்சிவழி மூலம் நிறுவனத்தின் செயற்பாடுகளை விளக்கினார். அதில் இந்நிறுவனத்தில் செய்து முடிக்கப்பட்ட பணிகள், தற்போது செய்து கொண்டிருக்கும் பணிகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் போன்றவற்றை விளக்கமாக எடுத்துரைத்தார். பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிறுவனம் மேலும் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும், எதிர்காலத் திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டிய ஆய்வுகள் குறித்தும் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், செம்மொழி நிறுவனத்தின் தொல்காப்பிய ஆய்வு, தெய்வச்சிலையார் உரைநெறி, ஐங்குறுநூறு குறிஞ்சி, ஐங்குறுநூறு பாலை, வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம், புதிய நோக்கில் களப்பிரர் வரலாறு, திராவிட ஒப்பீட்டு இலக்கணம்–II, தமிழின் வரலாற்று இலக்கணம், (Dravidian Comparative Grammar-II, A Historical Grammar of Tamil) ஆகிய எட்டு புதிய நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு தொழில், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட ஆலோசனைகளை வழங்கினார். தமிழாராய்ச்சி மற்றும் பதிப்புகள் தவிர இந்தக் கழகத்தின் பணிகளில் மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்களை அடையும் வகையில் செயல்பாடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், செம்மொழியின் பெருமைகளை வெகுமக்கள் அறியச் செய்ய தக்க ஊடக வழிகள் மற்றும் கருத்தரங்கங்கள் ஆகியவற்றை நடத்த முயற்சி செய்ய வேண்டும் என்றும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களும் இம்மையத்தின் பணிகளை அறியச் செய்ய பள்ளிக்கல்வித்துறை மற்றும் உயர்கல்வித்துறையுடன் ஆலோசனை மேற்கொண்டு செயல்பட வேண்டும் என்றும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ் விர்சுவல் அகாடமி போன்ற மாநில அரசின் தமிழ்ப் பிரிவுகளுடன் இயன்றவரை ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும், 2010 முதல் 2019 வரை கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விருதாளர்களுக்கு 22.01.2022 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறவுள்ள விழாவில் விருதுகள் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாடு அரசின் விருதுகள்



தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்கள் மற்றும் தன்னலமற்ற தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தி வழங்கி வருகிறது. அவ்வகையில் தமிழ்நாடு அரசின் விருதுகளுக்கான விருதாளர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.01.2022 அன்று அறிவித்துள்ளார். 2021ஆம் ஆண்டிற்கு,

பேரறிஞர் அண்ணா விருது திரு. நாஞ்சில் சம்பத், அவர்களுக்கும்,
மகாகவி பாரதியார் விருது திரு. பாரதி கிருஷ்ணகுமார் அவர்களுக்கும்,
பாவேந்தர் பாரதிதாசன் விருது புலவர் செந்தலை கவுதமன் அவர்களுக்கும்,
சொல்லின் செல்வர் விருது திரு. சூர்யா சேவியர் அவர்களுக்கும்,
சிங்காரவேலர் விருது கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம் அவர்களுக்கும்,
தமிழ்த்தாய் விருது மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கும்,
அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது முனைவர் இரா. சஞ்சீவிராயர் அவர்களுக்கும்,
சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது உயிர்மை திங்களிதழுக்கும்,
தேவநேயப்பாவாணர் விருது முனைவர் கு. அரசேந்திரன் அவர்களுக்கும்,
உமறுப்புலவர் விருது திரு.நா. மம்மது அவர்களுக்கும்,
கி.ஆ.பெ. விருது முனைவர் ம.இராசேந்திரன் அவர்களுக்கும்,
கம்பர் விருது திருமதி பாரதி பாஸ்கர் அவர்களுக்கும்,
ஜி.யு.போப் விருது திரு.ஏ.எஸ்.பன்னீர்செல்வம் அவர்களுக்கும்,
மறைமலையடிகள் விருது திரு.சுகி.சிவம் அவர்களுக்கும்,
இளங்கோவடிகள் விருது திரு.நெல்லைக் கண்ணன் அவர்களுக்கும்,
அயோத்திதாசப் பண்டிதர் விருது திரு.ஞான.அலாய்சியஸ் அவர்களுக்கும் வழங்கிட அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு முதல் விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக ரூ.2 இலட்சம், 1 சவரன் தங்கப் பதக்கம், விருதுக்கான தகுதியுரை ஆகியன வழங்கிப் பொன்னாடை அணிவித்து சிறப்பிக்கப் பெறுவர்.

ஜனவரி 12: அயலகத் தமிழர் நாள்

“தமிழால் இணைவோம்”

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் 12.01.2022 அன்று அயலகத் தமிழர் நாள் விழா சென்னையில் நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரை:

உலகமெங்கும் வாழும் தமிழ் உடன்பிறப்புக்கள் அனைவருக்கும் தமிழ் வணக்கம்.

தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் சார்பில் நடைபெறும் அயலகத் தமிழர் நாள் விழாவில் பங்கெடுத்து உரையாற்றுவதில் நான் பெருமை அடைகிறேன்.

‘‘தமிழால் இணைவோம்’’ என்ற அடிப்படையில் நாம் ஒன்று சேர்ந்துள்ளோம்.

தமிழுக்குத்தான் அந்த வலிமை இருக்கிறது. மத மாயங்களையும், சாதிச் சழக்குகளையும் வீழ்த்தும் வல்லமை மொழிக்குத்தான் உள்ளது. அதனால்தான் தமிழால் இணைவோம் என்பதை நமது முழக்கமாகக் கொண்டுள்ளோம்.

ஒரு தமிழன், இன்னொரு தமிழனைச் சந்திக்கும்போது தமிழைச் சொல்லி வாழ்த்துத் தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் மற்ற வேறுபாடுகள் எதற்கும் முக்கியத்துவம் தரக் கூடாது என்ற எண்ணம் தோன்றும் என்றார் இலக்கிய மேதை மு.வரதராசனார் அவர்கள்.

அத்தகைய தமிழ் வாழ்த்தை உங்களுக்கு முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழால் இணைந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் அதேவேளையில், அயலகத் தமிழர் நாள் வாழ்த்துக்களையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும், பல்லாயிரம் மைல் கடந்தும் இன்று நாம் ஒன்றாகக் கூடி இருக்கிறோம் என்றால், தமிழன் என்ற உணர்வோடு நாம் கூடி இருக்கிறோம். நம்மை நாடுகள் பிரிக்கின்றன. நிலங்கள் பிரிக்கின்றன. ஆனாலும் மொழி இணைக்கிறது. அந்த வல்லமை தமிழ்மொழிக்கு உண்டு.

‘வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்’ என்பதைத் தமிழ் மண்ணில் விதைத்து மொழிப்பற்றும், ‘தமிழா! இன உணர்வு கொள்’ என்று முழங்கி இனமான உணர்வும் ஊட்டிய இயக்கம்தான் திராவிட இயக்கம்! மொழிக்காகப் போராடிய, வாதாடிய இயக்கம் மட்டுமல்ல, மொழிகாக்கத் தனது தேகத்தைத் தீக்குத் தின்னத் தந்த தீரர்களின் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

கழக ஆட்சி அமையும் போதெல்லாம் அது, இங்குள்ள தமிழர்களின் ஆட்சியாக மட்டுமில்லாமல், உலகம் முழுவதும் பரந்து விரிந்து வாழும் அனைத்து மக்களின் அரசாகக் கழக அரசு செயல்பட்டு வருகிறது.

உங்களில் பலருக்கும் தமிழ்நாட்டில் வாக்களிக்கும் உரிமை இல்லாமல் இருக்கலாம். ஆனால், தமிழ்நாடு அரசும் நமது அரசு என்று சொல்லிக்கொள்ளும் உரிமை உங்களுக்கு எப்போதும் உண்டு. அதனால்தான் கழக அரசு அமைந்ததும் கடந்த செப்டம்பர் மாதம் அயலகம் வாழ் தமிழர்கள் நலன் காக்கக்கூடிய ஏராளமான அறிவிப்புகளை வெளியிட்டேன்.

நம்முடைய இனம் ஒரு நிலத்தில், ஒரு நாட்டில் மட்டுமே வாழ்ந்த இனம் அல்ல. உலகளாவிய இனம் ஒன்று உண்டென்றால் அது தமிழினம் தான். 30க்கும் மேற்பட்ட நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், 60க்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இது குறித்துத் தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே விரிவாக நான் பேசி இருக்கிறேன். வணிகம் செய்வதற்காகச் சென்றார்கள். வாழ்வதற்காகச் சென்றார்கள். வேலைகளைத் தேடிச் சென்றார்கள். கடற்கோள்களில் இருந்து தப்புவதற்காகச் சென்றார்கள். புதிய இடங்களை அறிவதற்காகச் சென்றார்கள்.

இப்படிப் பலருக்கும் பல நோக்கங்கள் இருந்திருக்கும். இத்தகைய இடப்பெயர்வுகள் காலம்காலமாக நடந்து வருகின்றன. எங்கே தமிழர்கள் வாழ்ந்தாலும், அவர்களுக்குத் தமிழ்நாடுதான் தாய் வீடு. இன்றைக்கு நவீனத் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து நான் பேசுவதைக் கேட்கிறீர்கள். நீங்கள் பேசுவதைப் பார்த்தபடி நானும் கேட்கிறேன்.

இவை எதுவும் இல்லாத காலத்தில் தன்னம்பிக்கையும் தணியாத தாகமும் கொண்ட தமிழர்கள் எல்லா நாடுகளுக்கும் சென்றார்கள். பழம்பெருமை மட்டுமே பேசிக் கொண்டு உள்ளூரிலேயே இருந்துவிடாமல், தனது திறமையை உலகம் மதிக்கும் என்ற நம்பிக்கையோடு சென்றார்கள். அத்தகைய தமிழர்கள் அனைவருக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும், குழந்தைகளுக்கும் எனது இதயப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களை அயலகத்துக்கு வாழப் போனவர்களாக நான் நினைக்கவில்லை. தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தூதர்களாக அயல்நாடுகளில் இருப்பவர்களாக நினைத்துப் போற்றக் கடமைப்பட்டுள்ளேன். இத்தகைய அயலகத் தமிழர் மேன்மைக்காகத் தன்னுடைய வாழ்வை ஒப்படைத்தவர்தான் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்!

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம், 2011ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் கழக அரசால் இயற்றப்பட்டுள்ளது. “வெளிநாடு வாழ் தமிழர் நலவாரியம்” ஒன்றை உருவாக்கி அவர்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவோம் என்று அறிவித்தோம்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக நம்மால் அமைக்க முடியவில்லை. அடுத்து வந்த ஆட்சியாளர்களும் இதனை அமைக்கவில்லை. நமது அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது ‘வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்’ அமைக்கப்படும் என்பதை ஐந்தே மாதத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன்.

அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் பிரதிநிதிகள் பதிமூன்று பேரைக் கொண்டு இந்த வாரியம் அமைக்கப்படும். ரூ.5 கோடி வெளிநாடு வாழ் தமிழர் நலநிதி என மாநில அரசின் முன்பணத்தைக் கொண்டு உருவாக்கப்படும். மூலதனச் செலவினமாக ரூ.1.40 கோடி மற்றும் தொடர் செலவினமாக, நலத்திட்டங்கள் மற்றும் நிருவாகச் செலவினங்களுக்காக ரூ.3 கோடி ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் என்று அறிவித்தேன்.

வெளிநாடு வாழ் தமிழர் குறித்த தரவுத் தளம் (Database) ஏற்படுத்தப்படும். தமிழர்கள் பணியின் போது இறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை வழங்கப்படும். தமிழர்கள் புலம்பெயரும்போது, பயணப் புத்தாக்கப்பயிற்சி பல்வேறு ஊர்களில் நடத்தப்படும்.

ஆலோசனை பெற வசதியாகக் கட்டணமில்லா தொலைப்பேசி வசதி மற்றும் வலைத்தளம், கைப்பேசி செயலி (Mobile application) அமைத்துத் தரப்படும். சட்ட உதவி மையம் அமைக்கப்படும். தமிழ்நாடு திரும்பியவர்களுக்குக் குறு தொழில்கள் செய்திட, அதிகபட்சமாக இரண்டரை இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படும். இதற்கென ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

வெளிநாடு வாழ் தமிழர்களின் முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்.

தமிழர்கள், ‘எனது கிராமம்’ திட்டத்தின் மூலம் தங்களது சொந்த ஊருக்கு நன்மைகள் செய்து தரலாம். தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் கற்றுக்கொள்ள வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும் என்று பல்வேறு அறிவிப்புகளைச் செய்தேன். இவை அனைத்துக்கும் சேர்த்து ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரிசையில்தான், வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் உலகத்தமிழர் புலம்பெயர்ந்தோர் நாளாகக் கொண்டாடப்படும். இலங்கையிலிருந்து தமிழ்நாட்டை நோக்கி வந்த தமிழர்களுக்கு ரூ.317 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலமாக இல்லாமல் இருந்திருந்தால், இந்த விழாவை மிகப்பெரிய விழாவாக முன்னெடுத்திருப்போம். கொரோனா என்பதால் அது இயலவில்லை. ஆனால் பரந்த உள்ளம் கொண்ட நாம், காணொலியில் பெரிய அளவில் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.பல நாடுகளைச் சேர்ந்த, பல்வேறு பெருமக்கள், பல்வேறு தலைப்புகளில் பேச இருக்கிறீர்கள். உங்கள் அனைவரது உரைகளும் தமிழை, தமிழினத்தை, தமிழர்களை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். நம்மைப் பிளவுபடுத்தும் எண்ணங்களைப் பின்னுக்குத் தள்ளி, நம்மை இணைக்கும் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையாக உங்களது உரைகள் அமைய வேண்டும்.

தமிழ்நாட்டில் இருக்கும் பிளவுகளுக்கு வெளிநாடுகள் சென்ற பிறகும் முக்கியத்துவம் தராதீர்கள். ஒரு தாய் மக்களாக வாழுங்கள். கல்வியிலும் வேலைவாய்ப்பிலும், தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் காணுங்கள். எவ்வளவு உயரமாக மரம் வளர்ந்தாலும் அது தன்னுடைய வேரை விட்டுவிடுவதில்லை என்பதைப் போல தமிழை, தமிழ்நாட்டை விட்டு விடாதீர்கள். அரவணைத்து வாழுங்கள். தமிழகத்துக்கு வாருங்கள். உங்களது பிள்ளைகளுக்குத் தமிழ்நாட்டைக் காட்டுங்கள்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பண்பாட்டிலும் செழிப்பிலும் மேம்பட்ட இனம் நாம் என்பதை அவர்களை அழைத்து வந்து கீழடியை, ஆதிச்சநல்லூரைக் காட்டுங்கள்.

இங்குள்ள தமிழர்களுக்கு எல்லாமுமாய் இந்த அரசு இருப்பதைப் போலவே அயலகத் தமிழ் மக்களுக்கும் எல்லாமுமாக இந்த அரசு இருக்கும். தமிழர் பண்பாட்டை இன்றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்ய, தமிழ் கற்பிக்க, ஒன்றாக இணைந்து ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க அனைத்தையும் தமிழ்நாடு அரசு நிச்சயம் செய்யும்.

இவ்விழாவில் இணைய வழியாகக் கலந்து கொண்ட டாக்டர் தனபால் ராமசாமி, முனைவர் ராஜா நடராஜன், மொரிஷியஸ் முன்னாள் அதிபர் திரு. பார்லென் வையாபுரி, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு எம்.ஏ.சுமந்திரன், மலேசிய முன்னாள் அமைச்சர் தத்தோ பி.கமலநாதன், பப்புவா நியூ கினியா நாட்டைச் சேர்ந்த மாகாண ஆளுநர் திரு.சசிந்தரன் முத்துவேல் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழால் இணைவோம்.

தமிழை வளர்ப்போம்.

தமிழரை வளர்ப்போம்.

அனைவருக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

அய்யன் திருவள்ளுவர் திருநாள்

அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் 15.01.2022 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை காமராஜர் சாலை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

‘பாரத ரத்னா’ டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாள் விழா

பாரத ரத்னா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 105ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் 17.01.2022 அன்று, தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இங்கிலாந்து நாட்டில் கேம்பர்ளி நகரில் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு சிலை

தென் தமிழகத்தின் உயிர்நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையைப் பல இடையூறுகளுக்கு இடையில் தனது சொந்த பணத்தைச் செலவு செய்து அமைத்த, “கர்னல் ஜான் பென்னிகுயிக்” அவர்களின் புதிய சிலையை, அவர்கள் சொந்த ஊரான இங்கிலாந்து நாட்டின் கேம்பர்ளி நகர மையப் பூங்காவில் தமிழக அரசு சார்பில் நிறுவப்படுவது குறித்து அவருடைய பிறந்த நாளான ஜனவரி 15 அன்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் புதிய சிலையை அவரின் சொந்த ஊரான இலண்டன்–கேம்பர்ளி நகர மையப் பூங்காவில் நிறுவ அனைத்து இலண்டன் வாழ் தமிழர்களால் முயற்சிகள் எடுக்கப்பட்டு, சிலை நிறுவ இங்கிலாந்து சட்டப்படி, செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தின் ஒப்புதலைப் பெற்றுள்ளார்கள்.

ஆங்கிலேயப் பொறியாளரான கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்கள், தமிழக மக்களுக்காகக் கடின தியாகமான உழைப்பினாலும், தொழில்நுட்ப நிபுணத்துவத்தினாலும் பெரியாற்றின் குறுக்கே, பெரியாறு அணையை 1895ஆம் ஆண்டு கட்டி முடித்து, தமிழகத்திற்குக் குறிப்பாகத் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களின் விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகை செய்தார். அம்மாவட்ட மக்களின் வாழ்வாதாரமே முற்றிலும் செழுமையடைந்து மாற்றங்கள் பெற்றுள்ளன. இம்மாவட்டங்களில் தற்பொழுது சுமார் 2,19,840.81 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன.

ஆங்கிலேய அரசு இத்திட்டத்திற்குத் தொடர்ந்து நிதியுதவி செய்ய இயலாத சூழ்நிலையில், கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்கள் இங்கிலாந்து சென்று தனது குடும்பச் சொத்துக்களை விற்று அதன் மூலம் கிடைத்தப் பணத்தைக் கொண்டு எத்தகைய தடைகள் வந்தாலும், இந்த அணையை எப்படியாவது கட்டி முடிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கையுடனும், மன உறுதியுடனும், விடா முயற்சியுடனும், துணிவுடன் செயல்பட்டு முல்லைப் பெரியாறு அணையைக் கட்டி முடித்துள்ளார்.

அவருடைய பிறந்த நாளான ஜனவரி 15ஆம் நாளைத் தமிழர்கள் விமர்சையாகக் கொண்டாடுகின்றனர். தேனி மாவட்ட மக்கள் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் தியாகப் பணிகளை நினைவுகூரும் வகையில் அவருடைய பிறந்த தினத்தில் பொங்கல் வைத்து வழிபாடு செய்கிறார்கள். மேலும், அம்மாவட்ட மக்கள் தொடர்ந்து தங்களுடைய குழந்தைகளுக்கு அவருடைய பெயரை வைத்து நன்றித் தெரிவித்து மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

கர்னல் ஜான் பென்னிகுயிக் நினைவைப் போற்றும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மதுரை, தல்லாக்குளம் பொதுப்பணித்துறை வளாகத்தில் 15.06.2000 அன்று அன்னாருடைய திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசு, தேனி மாவட்டம், கூடலூர் லோயர் கேம்ப் பகுதியில் வெண்கலத்திலான பென்னிகுயிக் உருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் ஒன்றை அமைத்தும், தேனி மாநகரப் பேருந்து நிலையத்திற்குப் பென்னிகுயிக் அவர்களின் பெயர் சூட்டியுள்ளது.

தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காமல் தொடர்ந்து உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும், ஒன்றிய அரசின், நீர் ஆணையம் மற்றும் உயர் அமைப்புகளிடம் சட்டரீதியாக நுணுக்கமான கருத்துக்களைத் தெரிவித்து, வாதாடி முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடி உயர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

தென் மாவட்ட மக்களின் நீண்டகாலத் தண்ணீர் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு பெரும் போராட்டத்தில் பல்வேறு இன்னல்களைக் கடந்து கட்டப்பட்ட முல்லைப் பெரியாற்றின் மீதான தமிழ்நாட்டின் உரிமையை எந்நாளும் விட்டுக் கொடுக்காமல் காப்பதற்கு நமது அரசு தொடர் முயற்சி மேற்கொள்ளும் என்பதனையும் தியாகத் திருவுருவமான கர்னல் திரு. ஜான் பென்னிகுயிக் அவர்கள் பிறந்த நாளில் உறுதி எடுத்துக்கொள்வோம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

கர்னல் ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள்

திரு. கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் 181ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 15.01.2022 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் தேனி மாவட்டம், லோயர் கேம்பில் அமைந்துள்ள மணிமண்டபத்தில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள், மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தொழில் முதலீடுகளுக்கு மிகச் சிறந்த மாநிலம் தமிழ்நாடு

2021 ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலும் 304 திட்டங்களின் மூலமாக ரூ.1,43,902 கோடி முதலீடுகளைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது.

2022 நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அதிகமான தொழில் முதலீடுகளைப் பெற்றுள்ள மிகச் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகியுள்ளது.

2021 ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலும் தொழில் முதலீடுகளை அதிகமாகப் பெற்றுள்ள மாநிலம் தமிழகமாகும். 304 திட்டங்களின் மூலம் ரூ.1,43,902 கோடியைத் தமிழகம் மூலதனமாகப் பெற்றுள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் தமிழ்நாடு ரூ.36,292 கோடியை மட்டுமே தொழில் மூலதனமாகப் பெற்றிருந்தது. தமிழ்நாட்டிற்கு இந்த நிதியாண்டில் கிடைத்திருக்கும் ஒட்டு மொத்த முதலீட்டு ஆதாயம் ரூ.1,07,610 கோடியாகும்.

ரூ.77,892 கோடி தொழில் மூலதனத்துடன் குஜராத் மாநிலம் இரண்டாவது இடத்திலும், ரூ.65,288 கோடி தொழில் மூலதனத்துடன் தெலுங்கானா மாநிலம் மூன்றாவது இடத்திலும் இருக்கின்றன என புராஜெக்ட் டுடே நிறுவன ஆய்வு தெரிவிக்கிறது.

தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்ய உறுதி பூண்டுள்ள சில நிறுவனங்களில் டாடா குழுமம், JSW Renew, ஹிந்துஸ்தான் யுனிலீவர், டி.வி.எஸ். மோட்டார், அதானி குழுமம், லார்சன் அண்ட் டூப்ரோ ஆகியவை அடங்கும்.

சிறப்பான கொள்கையே காரணம்

தமிழ்நாடு அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்திருப்பதற்கு அதன் சிறப்பான கொள்கைகளும், பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைக்கும் அணுகுமுறையுமே காரணங்களாகும். “எங்களது பிரச்சினைகளைப் பற்றிக் கேட்பதற்கும், அவற்றைத் தீர்த்து வைப்பதற்குமான விருப்பம் தமிழ்நாட்டில் இருக்கிறது” என்பதே நிறுவனங்களிடமிருந்து எங்களுக்குக் கிடைத்திருக்கும் கருத்தாகும் என்கிறார் தொழில்துறையின் செயலாளர் எஸ்.கிருஷ்ணன். முடிவுகள் விரைவாக எடுக்கப்படுகின்றன. ஊக்கத் தொகுப்புகள் உடனடியாகக் கிடைக்கின்றன. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் இவை முக்கியமான தேவைகளாக இருக்கின்றன. பொருளாதாரப் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு விரைந்து முடிவெடுப்பது மிக முக்கியமானதாக இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மே மாதம் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு பின்டெக், குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள், தரவு மையங்கள் உட்படப் பலவற்றிற்கான கொள்கைகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்துள்ளது.

“தொழில் செய்வதற்கான தனது போட்டி வலிமையை, பெருந்தொற்றுக் காலத்திலும் தமிழ்நாடு வலுப்படுத்திக் கொண்டுள்ளது” என்று இந்தியத் தொழில் குழுமங்களின் கூட்டமைப்பு (CII) தலைவரும், காவேரி மருத்துவமனையின் நிறுவனத் தலைவருமான எஸ்.சந்திரகுமார் கூறுகிறார்.

புதிய தொழில்கள், உயிரித் தொழில்நுட்பம், மருத்துவ உபகரண உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற உருவாகி வரும் தொழில்களிலும் மாநில அரசாங்கம் எளிதாகத் தொழில் செய்வதற்கான தனது முன் முயற்சிகளைத் தொடர வேண்டும்.

உலக அளவில் நம்பிக்கையைப் பெற்றுள்ள மாநிலம்

அந்நிய நேரடி முதலீட்டில் காணப்படும் உயர்வு, உலக முதலீட்டாளர்களும், தொழில்களில் முன்னணியில் இருப்போரும் தற்போதைய அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையைத் தெளிவாகக் காட்டுகிறது. தமிழ்நாட்டின் அரசியல் தலைமையும், அதிகாரத் துறையினரும் வலிமையாகவும், தொழில் முதலீடுகளை எப்போது ஈர்க்கும் விருப்புறுதியுடனும் இருக்கின்றனர் என்று கெவின்கேர் நிறுவனத்தின் தலைவரும், நிருவாக இயக்குநருமான சி.கே.ரெங்கநாதன் தெரிவிக்கிறார்.

இந்தியா முழுவதிலும் நடப்பு நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 7,764 தொழில் திட்டங்கள் வந்துள்ளன. இவற்றின் மொத்த முதலீட்டு மதிப்பு ரூ.12,76,679 கோடியாகும்.

நன்றி: தி இந்து பிசினஸ் லைன்
(The Hindu Business Line-16.01.2022)

காலிங்கராயன் வாய்க்காலை வெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்த நாள்

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்கள், ஆகியோர் 18.01.2022 அன்று ஈரோடு, மேட்டுநாசுவம்பாளையம் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள காலிங்கராயன் மணிமண்டபத்தில் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்களின் பிறந்த நாள் விழா

மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்களின் 439ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மதுரை திருமலை நாயக்கர் மகாலில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள் ஆகியோர் 18.01.2022 அன்று மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள்.

தியாகி சங்கரலிங்கனார் சிலைக்கு மலர் தூவி மரியாதை

தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் 127ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி இ.ஆ.ப., அவர்கள் விருதுநகரில் உள்ள தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபத்தில் 26.01.2022 அன்று தமிழ்நாடு அரசு சார்பில் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஆவினின் ஐந்து புதிய பொருட்கள் விற்பனைக்கு அறிமுகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 19.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், ஆவின் நிறுவனத்தால் புதியதாகத் தயாரிக்கப்பட்ட பிரீமியம் மில்க் கேக், யோகர்ட் பானம் (மாம்பழம் மற்றும் ஸ்ட்ராபெரி சுவையில்), பாயாசம் மிக்ஸ், பால் புரத நூடுல்ஸ் மற்றும் டெய்ரி ஒய்ட்னர் ஆகிய ஐந்து புதிய பொருட்களை விற்பனைக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

ஆவின் நிறுவனம் தரம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு 4.20 இலட்சம் பால் உற்பத்தியாளர்களிடம் நேரடியாகக் கொள்முதல் செய்து பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் வழங்கி, கடந்த 40 ஆண்டுகளுக்கும்மேல் பால் விற்பனையில் தமிழகத்தில் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. சென்னைப் பெருநகர நுகர்வோர்களுக்குத் தேவையான பாலைப் பதப்படுத்தவும், சிப்பங்கட்டாகவும், விநியோகிக்கவும், சென்னை பெருநகரத்தில் மாதவரம், அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் பால் பண்ணைகள் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் (ஆவின்) கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வருகின்றன. இந்தப் பால் பண்ணைகள் தவிர அம்பத்தூரில் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, திருவண்ணாமலையில் பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, உதகமண்டலத்தில் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை, ஈரோட்டில் எருமை உறை விந்து நிலையம் மற்றும் பால் கறவையின மேம்பாட்டுத் திட்ட அலுவலகம் ஆகியவையும் இணையத்தின் சொந்த அலகுகளாகச் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன், ஆவின் உற்பத்தி பொருட்கள் இலாபம் ஈட்ட வழிவகைகளை ஆராய வலியுறுத்தியதன் அடிப்படையில், ஆவின் நிறுவனம் பல்வேறு புதிய உப பொருட்களை ஆவின் நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக அறிமுகப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் ஆவின் நிறுவனத்தின் சார்பில், கீழ்க்காணும் ஐந்து புதிய பொருட்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

பிரீமியம் மில்க் கேக்

ஆவின் நிறுவனம் தற்போது பால்கோவா, மைசூர்பா, ரசகுல்லா, குலாப்ஜாமுன் போன்ற இனிப்புப் பொருட்களை நுகர்வோர்களுக்கு ஏற்ற வகையில் தயாரித்து விற்பனை செய்து வருகிறது. தற்போது இனிப்புப் பிரியர்களின் விருப்பத்திற்கு ஏற்பப் பிரீமியம் மில்க் கேக் தயாரித்து 250 கிராம் ரூ.100 என்ற விலையில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த இனிப்பு வகைத் தரம் மிகுந்த பால் பவுடர் மற்றும் ஆவின் அக்மார்க் நெய் உபயோகித்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

யோகர்ட் பானம் (மாம்பழம் மற்றும் ஸ்ட்ராபெரி சுவையில்)

இளைஞர்களைக் கவரும் வகையில் யோகர்ட் பானம் மாம்பழம் மற்றும் ஸ்ட்ராபெரி சுவையில் தயாரிக்கப்பட்டு 200 மி.லி. அளவு கொண்ட பாட்டில் ரூ.25 என்ற விலையில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்தப் பானம் உடலுக்குப் புத்துணர்ச்சி மற்றும் ஜீரண சக்தி மேம்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பாயாசம் மிக்ஸ்

ஆவின் நுகர்வோர் தேவையை அறிந்து பண்டிகை மற்றும் விசேஷ நாட்களில் எளிமையாகப் பாயாசம் தயாரிக்கும் வகையில் பாயாசம் மிக்ஸ் 100 கிராம் ரூ.50 மற்றும் 200 கிராம் ரூ.100 என்ற அளவில் தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்தப் புதிய பாயாசம் மிக்ஸ் குழந்தைகளைக் கவரும் வகையில் மிகுந்த சுவையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பாயசம் மிக்ஸ் உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான பாதாம், முந்திரி, திராட்சை, பால்பவுடர் ஆகிய பொருட்களைக் கொண்டு சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பால் புரத நூடுல்ஸ்

நுகர்வோர்களின் குறிப்பாக வேலைக்குச் செல்லும் இல்லத்தரசிகளின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையிலும் குழந்தைகள் விரும்பி சுவைக்கக்கூடிய பால் புரதச்சத்து மிகுந்த நூடுல்ஸ் 70 கிராம் ரூ.10 என்ற விலையில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

டெய்ரி ஒய்ட்னர்

அவசரப் பால் தேவைக்கு உடனடியாகத் தயாரிக்கும் வகையிலும், உணவகங்கள், தேநீர்க் கடைகள், விடுதிகள் மற்றும் பெரிய நிறுவனங்களின் தேவையினைக் கருத்தில் கொண்டும் பயணங்களின் போது எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய டெய்ரி ஒய்ட்னர் புத்தம் புது வடிவில், 20 கிராம் ரூ.10, 200 கிராம் ரூ.80 மற்றும் 500 கிராம் ரூ.200 என்ற விலையில் ஆவின் டெய்ரி ஒய்ட்னர் அறிமுகப்படுத்தப்படுகிறது.

திருக்கோயில்கள் வளர்ச்சிப் பணியில் ஆலோசனைக் குழு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 20.01.2022 அன்று, சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிகளை மேம்படுத்துவது, பராமரிப்பது, செம்மைப்படுத்துவது தொடர்பாக ஆலோசனைக்குழு உறுப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

முன்னதாகத் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய திருக்கோயில்களின் அன்றாட நிகழ்வுகளைக் கண்காணித்திட இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில், திருக்கோயில்களின் கண்காணிப்புக் கேமராக்கள் மூலம் கண்காணிக்கும் வகையில் கட்டுப்பாட்டு அறையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.01.2022 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கக்கூடிய அனைவரையும் வரவேற்புரை ஆற்றி மகிழ்ந்திருக்கக்கூடிய முதன்மைச் செயலாளர் திரு.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களே!

இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்தக் குழுவின் துணைத் தலைவர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களே!

இந்தக் குழுவில் உறுப்பினர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டு இந்தத் துறைக்கும், அரசுக்கும் பல்வேறு சிறப்புகளைத் தேடித் தருவதற்காக உறுதி எடுத்திருக்கக்கூடிய தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களே!

மதிப்பிற்குரிய திரு.சுகி சிவம் அவர்களே! திரு.தரணிபதி இராஜ்குமார் அவர்களே! திருமதி தேச மங்கையர்க்கரசி அவர்களே! ஸ்ரீமத் வராக மகாதேசிகன் அவர்களே! ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களே! முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களே! நீதியரசர் திரு.டி.மதிவாணன் அவர்களே! திரு.கருமுத்து தி.கண்ணன் அவர்களே! முனைவர் சக்திவேல் முருகனார் அவர்களே! திரு.ந.சுப்பிரமணி அவர்களே! திருமதி ஸ்ரீமதி சிவசங்கர் அவர்களே! நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து முதலமைச்சர் என்கின்ற முறையில், அரசினுடைய துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள் கூட்டத்தில்தான் நான் தொடர்ந்து பங்கேற்று வந்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படி பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் இன்று உங்களைச் சந்திக்கக்கூடிய, உங்கள் கருத்துக்களைக் கேட்கக்கூடிய, உங்களுடன் கலந்தாய்வு நடத்தக்கூடிய சிறப்பான வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

குறிப்பாக, திருக்கோயில்களின் வளர்ச்சிக்காக – தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தின்படி மாநில அளவில் ஒரு ஆலோசனைக்குழு இந்தத் துறைக்கு அமைக்கப்பட வேண்டும். ஆனால், இந்தக் குழு 2015க்குப் பிறகு அமைக்கப்படவில்லை

என்ற தகவல். இந்தத் தகவல் என் கவனத்திற்கு நம்முடைய துறையின் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த நேரத்தில், உடனடியாக அதற்கான பணிகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று நான் அவரிடத்தில் வலியுறுத்தி, வற்புறுத்திச் சொன்னேன். அந்த அடிப்படையில்தான் கடந்த 21.06.2021 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், சட்டமன்றத்தில் அவர் தாக்கல் செய்த கவர்னர் உரையில், இப்படி ஒரு குழு அமைக்கப்படும் என்று அவருடைய அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில், 6 ஆண்டு காலமாக நியமிக்கப்படாத இந்தக் குழு – 13 அலுவல் சாரா உறுப்பினர்களுடன் அமைக்கப்பட்டு அதற்குப் பின்னால் இந்தக் கூட்டம் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நீங்கள் எல்லாம் அரசியல் தொடர்பில்லாத – ஆன்மீகத்தில் நாட்டமுள்ளவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும், ஏன் பொதுநலனில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் நீங்கள். உங்களை எல்லாம் இக்குழுவில் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமித்துள்ளதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மகிழ்ச்சியடைகிற நேரத்தில் நீங்கள் இந்தக் குழுவில் இடம்பெற வேண்டும் என்று உங்களிடத்தில் கேட்ட நேரத்தில் நீங்களும் மனமுவந்து ஒப்புக்கொண்டு இந்தக் குழுவிற்குப் பெருமை சேர்த்துத் தந்திருக்கிறீர்கள், இந்த அரசுக்கும் பெருமை சேர்த்துத் தந்திருக்கிறீர்கள். அதற்காக நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அனைவரும் மகிழ்ச்சிகரமாக இருக்கின்ற இந்த வேளையில், கழக அரசு இத்துறையில் கடந்த 8 மாதத்தில் செய்திருக்கக்கூடிய சாதனைகளை ஆன்மீகத்தில் நாட்டம் உள்ள நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஆனாலும் ஆட்சிக்குத் தலைவர் என்ற முறையில், அவற்றை எல்லாம் உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது, அப்படிப் பகிர்ந்து கொள்வதை என்னுடைய கடமையாகவும் நான் கருதுகிறேன்.

725 திருக்கோயில்களுக்குத் திருப்பணி வழங்க அனுமதி. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தில் 58 அர்ச்சகர்கள் நியமனம். அன்னைத் தமிழில் அர்ச்சனை. ஒருகால பூசைத் திட்டத்திற்கு ரூ.1 இலட்சமாக இருந்த நிதி ரூ.2 இலட்சமாக உயர்வு. அத்திட்டத்தில் உள்ள அர்ச்சகர்களுக்கு முதல் முறையாக, ஊக்கத் தொகையாக ரூ.1,000 வழங்குதல்.

10 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள். திருத்தணி, சமயபுரம், திருச்செந்தூர் கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம். ரூ.1,689 கோடி மதிப்புள்ள திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு. 10 ஆண்டுகளுக்கும்மேல் ஓடாமல் இருந்த சமயபுரம், திருத்தணி கோயில் தங்கரதங்கள் உலா வர நடவடிக்கை.

திருக்கோயில்களில் உள்ள 65 தங்கத் தேர், 49 வெள்ளித் தேர்களை முறையாகப் பராமரித்து உலா வருவதற்கான நடவடிக்கை. 100 திருக்கோயில்களில் உள்ள நந்தவனங்கள் மேம்படுத்துதல், திருத்தேர் திருப்பணி, திருக்குளப் பராமரிப்பு. கொரோனா பேரிடர் காலத்தில் திருக்கோயில் அர்ச்சகர்கள், ஒருகால பூசை திட்டத்தில் உள்ள அர்ச்சகர்களுக்கு 15 வகையான உணவுப் பொருட்கள் மற்றும் ரூ.4,000 நிதியுதவி.

திருக்கோயில்களில் பணியாற்றி, ஓய்வு பெற்ற அர்ச்சகர், ஓதுவார், இசைக் கலைஞர் ஆகியோருக்கு ரூ.1,000ஆக இருந்த ஓய்வூதியம் 3,000ஆக உயர்வு.

கிராமக் கோயிலில் பணியாற்றி ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு மாத ஓய்வூதியம் ரூ.3,000த்திலிருந்து 4,000ஆக உயர்வு. அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல் அகவிலைப்படி உயர்வு, ரூ.2,000 பொங்கல் கருணைத் தொகை. திருக்கோயில் அர்ச்சகர்களுக்குப் புத்தாடை, பணியாளர்களுக்குச் சீருடை.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான 03.06.2021 அன்று இந்த ஆணையர் அலுவலகத்தில் தல மரக்கன்று நடும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, இதுவரை திருக்கோயில்களில் 68 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்புச் செலவுக்கு ஒதுக்கிய நிதி ரூ.3 கோடியை ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கியது, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 225 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்புச் செலவிற்கு ரூ.1 கோடி என்பதை ரூ.3 கோடியாக உயர்த்தி வழங்கியது, 10 கல்லூரிகள் துவங்குவதாக அறிவிக்கப்பட்டு, 4 கல்லூரிகள் ஏற்கெனவே தொடங்கியது. இதனால் 500 மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும்

ரூ.1இலட்சம் நிதி ரூ.2 இலட்சமாக உயர்வு. கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்காக ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டு வந்த நிதி ரூ.2 இலட்சமாக உயர்வு. அன்னதானத் திட்டத்தின் மூலம் கொரோனா காலத்தில், இதுவரை 44 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் சொல்வதற்குப் பல சாதனைகள் இருக்கின்றன. ஆனால் குறிப்பிட்ட சிலவற்றை மட்டும்தான் உங்களிடம் நான் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். திருக்கோயில்களின் பணிகளை மேலும் செம்மையாக எடுத்துச் செல்வதற்கு உங்களின் ஆலோசனைகளை எல்லாம் நிச்சயம் இந்த அரசுக்கு வேண்டும் என்ற அந்த நோக்கத்தில்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டது, அந்தக் குழுவின் சார்பில்தான் இந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

திருக்கோயில்கள் வளர்ச்சிப் பணியில் ஆலோசனைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்குமான பொருண்மைகள் குறித்து இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

- ★ திருக்கோயில்களின் தல வரலாறு மற்றும் தல புராணத்தைத் தவிர திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களால் வெளியிடப்பட்ட அரிய வகை புத்தகங்களை மறு பதிப்பாக்கம் செய்தல், மின்னணுமயமாக்குதல் மற்றும் அப்புத்தகங்களைத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்கள் வாயிலாகப் பக்தர்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்தல்.
  - ➢ தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
  - ➢ ஸ்ரீமத் வராக மகாதேசிகன்
- ★ திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களால் வெளியிடப்பட்ட அரிய புத்தகங்களை மறுபதிப்பாக்கம் செய்தல், மின்னனுமயமாக்குதல் மற்றும் அப்புத்தகங்களைத் திருக்கோயில்கள்/ திருமடங்கள் வாயிலாகப் பக்தர்களுக்கு விற்பனை செய்தல்
  - ➢ ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
- ★ திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படும் ஓதுவார்கள் பயிற்சிப் பள்ளிகள், அர்ச்சகர்கள் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் இசைப் பள்ளிகளின் தரம் மற்றும் பாடத்திட்டத்தினை மேம்படுத்துதல், மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் அவர்களுக்கான வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்துதல்.
  - ➢ முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்.
  - ➢ திரு. கருமுத்து தி.கண்ணன்
- ★ தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறநிலையக் கொடைகள் சட்டம் 1959இல் உள்ள பிரிவுகளைத் தற்போதைய நடைமுறைக்கு ஏற்றவாறு திருத்தி அமைத்தல்
  - ➢ நீதியரசர் டி.மதிவாணன் (ஓய்வு)
- ★ திருக்கோயில்களின் ஆகமங்களைப் பக்தர்கள் அறிந்து பயன்பெறும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுதல்,
  - ➢ முது முனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார்
  - ➢ திரு. சுகி.சிவம்
- ★ திருக்கோயில்களில் ஆன்மீகச் சொற்பொழிவு, ஆன்மீக வகுப்புகள் மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிகள் நடத்துதல்.
  - ➢ திருமதி தேச மங்கையர்க்கரசி
  - ➢ திரு. ந.இராமசுப்பிரமணியன்
- ★ திருக்கோயில்களின் சார்பில் பக்தர்களுக்கு அளிக்கப்படும் அனைத்துச் சேவைகளையும் கணினிமயமாக்குதல்.
  - ➢ திருமதி ஸ்ரீமதி சிவசங்கர்
  - ➢ திரு. தரணிபதி இராஜ்குமார்
- ★ திருக்கோயில்களின் நிதி மேலாண்மையினை மேம்படுத்துதல் மற்றும் கணினிமயமாக்குதல்
  - ➢ திரு. மல்லிகார்ஜுன் சந்தானகிருஷ்ணன்

உங்களுடைய ஆலோசனையைப் பெற்று அதற்கேற்ற வகையில் அரசின் சார்பில், இந்தத் துறையின் சார்பில் செய்ய வேண்டிய பணிகளை எல்லாம் நம்முடைய தவத்திரு அடிகளார் அவர்களும், திரு.சு.கி.சிவம் அவர்களும், திரு.தரணிபதி இராஜ்குமார் அவர்களும், திருமதி தேச மங்கையர்க்கரசி அவர்களும் இங்குப் பேசும்போது பல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக, இந்தத் துறையின் அமைச்சர் திரு.சேகர்பாபு அவர்கள் சொன்னது போல, அவைகள் எல்லாம் நிச்சயமாக, படிப்படியாக, உறுதியாக நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, கடந்த 8 மாதங்களில் அனைவரும் போற்றத்தக்க வகையில், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டில் இருக்கின்ற அந்தப் புகழ்ச்சியைவிட மற்ற மாநிலங்கள், தமிழ்நாட்டின் அரசைப் பாராட்டக்கூடிய அளவிற்கு, பல வெளிநாடுகள் பாராட்டக்கூடிய அளவிற்கு ஊடகங்களில் செய்தி வந்து கொண்டிருக்கின்றன, நீங்களும் பார்த்திருப்பீர்கள். அது உள்ளபடியே பெருமைதான். நான் இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறேன், இந்தியாவில் இருக்கக்கூடிய நான்கைந்து முதலமைச்சர்களை ஒரு கணிப்பு நடத்தி ஒரு ரிசல்ட் வெளியிட்டார்கள். அதில் எனக்கு முதலிடம் கிடைத்தது. அது எனக்குப் பெருமைதான்.

இந்தியாவில் நம்பர் 1 முதலமைச்சர் என்று சொல்வதை விட, நம்பர் 1 தமிழ்நாடு என்று சொல்வது தான் எனக்குப் பெருமை. அதை நோக்கித்தான் நாம் போய்க் கொண்டிருக்கிறோம். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கப் போகிறது.

இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கும் நீங்கள் சொல்லியிருக்கும் யோசனைகள், ஆலோசனைகள், அதனால் இந்தத் துறையின் செயல்பாடு நிச்சயமாக மிளிரப் போகிறது. இந்தக் குழுவின் நோக்கம் சமய நிறுவனங்களில் பொதுமக்களுக்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவது, அது மட்டுமன்றி, மலைக் கோயில்களுக்குச் செல்லும் பக்தர்களுக்குக் கம்பிவட ஊர்தி ஏற்பாடு செய்தல், நந்தவனங்களை மேம்படுத்துதல், திருக்குளம் பராமரிப்பு, திருத்தேர் பராமரிப்பு உள்ளிட்டவை குறித்துத் தங்கள் கருத்துக்களைத் தயக்கமின்றி, சுதந்திரமாக இந்தத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நீங்கள் சொல்லலாம், அலுவலர்களிடத்தில் சொல்லலாம். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், என்னையும் நேரடியாகச் சந்தித்துச் சொல்லலாம், அதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. எந்த நேரத்திலும் என்னைச் சந்திப்பதற்கான வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

நீங்கள் அனைவரும் இடம்பெற்றிருக்கும் இந்தக் குழுவின் செயல்பாடு இந்து சமய அறநிலையத்துறையை மேலும் மிளிர வைக்கும், திருக்கோயில்கள் சிறப்படையும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக வந்துவிட்டது, உங்களைப் பார்த்தவுடனேயே வந்துவிட்டது. பொதுமக்கள், அதற்குமுன் இல்லாத அளவிற்கு அனைத்து வசதிகளையும் திருக்கோயில்கள் மூலமாகப் பெற வேண்டும் என்று இந்தத் துறையின் மூலமாகப் பெறுவார்கள் என்று நம்புகிறேன். மீண்டும் நான் இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கக்கூடிய உங்களுக்கு, அரசின் சார்பிலும், இந்தத் துறையின் சார்பிலும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

பழனி திருக்கோயிலில் நாதமணி மண்டபம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ரூ.23.82 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்புக் குடிநீர்த் திட்டம், அன்னதானக் கூடம், மின்தூக்கி மற்றும் நாதமணி மண்டபம் ஆகியவற்றைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் முதன்மைத் திருக்கோயில் மற்றும் முருகனின் அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சுவாமி தரிசனம் செய்ய வருகை புரியும் பக்தர்களின் அடிப்படை வசதியினை முழுமையாகப் பூர்த்திசெய்யும் பொருட்டுப் பழனி, பாலசமுத்திரம் கிராமம் அருகில் உள்ள பாலாற்றில் தடுப்பணை கட்டி அதிலிருந்து மலைக்கோயில், தங்கும் விடுதிகள் மற்றும் சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு நாள் ஒன்றுக்கு 2.31 MLD தண்ணீர் வழங்கும் வகையில் ரூ.22.72 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் முடிக்கப்பட்டுத் தற்போது பக்தர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

திருக்கோயிலுக்குச் சுவாமி தரிசனம் செய்ய வருகைபுரியும் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காக மின்கல மகிழுந்து (Battery Car) பயன்பாட்டில் உள்ளது. அதனைத் தொடர்ந்து கம்பிவட ஊர்தி மேல்நிலையத்திலிருந்து மலைக்கோயில் வெளிப்பிரகாரத்திற்குச் சிரமமின்றிச் சென்றுவர ஏதுவாக 13 நபர்கள் செல்லும் வகையில் ரூ.23.98 இலட்சம் மதிப்பீட்டில் மின்தூக்கி (Lift) உபயதாரர் மூலம் அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மலைக்கோயிலில் நடைபெறும் ஆறுகால பூஜையின்போது மணி ஓசை எழுப்பும் வகையில் புதியதாக நாதமணி மண்டபம் ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நாள்முழுவதும் அன்னதானத் திட்டத்தின்கீழ் நாள்தோறும் சுமார் 5,000 பக்தர்கள் உணவருந்தி வருகிறார்கள். இதன் உபகோயிலான அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தின் மூலம் நாள்தோறும் 100 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி அன்னதானத் திட்டத்தில் உணவருந்த வரும் பக்தர்கள் வசதிக்காக ரூ.58.30 இலட்சம் மதிப்பீட்டில் 108 இருக்கைகளுடன் கூடிய புதிய அன்னதானக் கூடம் அமைக்கப்பட்டு, பக்தர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஏழு இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 20.01.2022

தமிழ் நிலமானது மிகத்தொன்மை வாய்ந்தது. தமிழின் தொன்மையையும், தமிழரின் பண்பாட்டையும் அறிவியல்பூர்வமாக நிறுவ வேண்டுமானால் முறையான அகழாய்வுகள் அவசியமாகும்.

அண்மைக்காலமாக, கீழடி, அழகன்குளம், கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் தமிழகத்தின் தொன்மையைப் புதிய காலக்கணிப்பு மூலம் பல நூற்றாண்டுக் காலத்திற்கு முன்னோக்கி எடுத்துச் சென்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

கீழடி அகழாய்வு மற்ற அகழாய்வுகளுக்கு முன்னோடி அகழாய்வாகத் திகழ்கிறது. இதுவரை கங்கைச் சமவெளியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்த ‘‘நகரமயமாக்கம்’’ தமிழ்நாட்டில் இல்லையென்றும், பிராமி எழுத்து மௌரியர் தோற்றுவித்தது என்றும் கருதுகோள்கள் இருந்தன. அத்தகைய கருதுகோள்களுக்கு அறிவியல்பூர்வமாக விடையளித்துள்ளது கீழடி அகழாய்வு. தமிழ்நாட்டில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது என்பது மட்டுமல்லாமல், படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதை கீழடி அகழாய்வு நிலைநிறுத்தியுள்ளது.

சிவகளை முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகளின் காலம் கி.மு. ஆயிரத்து நூற்று ஐம்பத்தைந்து எனக் கண்டறியப்பட்டுள்ளது. ‘‘தண் பொருநை’’ என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல்பூர்வ ஆய்வுகளின் அடிப்படையில் உறுதி செய்ய முடிகிறது என்பதைக் கடந்த 09.09.2021 அன்று சட்டப்பேரவையில் நான் அறிவித்தேன்.

இதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் வரலாற்றுக்காலம் வரையிலான தொல்லியல் இடங்களில் அகழாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் தொன்மை, பண்பாடு மற்றும் விழுமியங்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தற்போது 2022ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஏழு இடங்களில் அகழாய்வுகள் செய்யப்படவுள்ளன.

★ **கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்கள் (கொந்தகை, அகரம், மணலூர்), சிவகங்கை மாவட்டம் – எட்டாம் கட்டம்**

★ **சிவகளை, தூத்துக்குடி மாவட்டம் – மூன்றாம் கட்டம்**

★ **கங்கைகொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டம்– இரண்டாம் கட்டம்**

★ **மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம் – இரண்டாம் கட்டம்**

★ **வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் – முதல் கட்டம்**

★ **துலுக்கர்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – முதல் கட்டம்**

★ **பெரும்பாலை, தருமபுரி மாவட்டம் – முதல் கட்டம்**

மேலும், ‘‘திரைகடலோடியும் திரவியம் தேடல்’’ என்ற முதுமொழிக்கேற்ப, பண்டையத் தமிழ்ச் சமூகம் நாட்டின் பிறபகுதிகளோடும், வெளிநாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்த சங்ககாலத் துறைமுகங்களான பூம்புகார், கொற்கை, அழகன்குளம், வசவசமுத்திரம் ஆகியவை முக்கிய பங்காற்றின.

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, தன்பொருநை (தாமிரபரணி) ஆற்றின் முகத்துவாரத்திற்கு எதிரில் கடற்கரையோர முன்கள புலஆய்வு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. முதற் கட்டமாக, சங்ககாலக் கொற்கைத் துறைமுகத்தின் தொல்லியல் வளத்தினைக் கண்டறியக் கடலோரங்களில் ஆய்வினை மேற்கொள்ள இந்தியக் கடலாய்வுப் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து கடல் ஆய்வு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அகழாய்வுப் பணிகள் வரும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தொடங்கி செப்டம்பர் மாதம் இறுதி வரை நடைபெறவுள்ளது. மேலும், இதற்காக வரவு–செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.5 கோடி நிதியில் அகழாய்வுகள், கள ஆய்வுகள் மற்றும் சங்க காலக் கொற்கைத் துறைமுகத்தினை அடையாளம் காண முன்களப் புல ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனித் தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் அறிவியல்பூர்வமாக நிறுவுவதற்கு மேற்காணும் அகழாய்வுகளும், முன்கள புலஆய்வுப் பணிகளின் முடிவுகளும் உறுதி செய்யும்.

துலுக்கர்பட்டி

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரிலிருந்து தென்கிழக்கே 6 கி.மீ. தொலைவில் நம்பி ஆற்றின் இடது கரையில் துலுக்கர்பட்டி என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூரிலிருந்து கண்ணநல்லூர் செல்லும் சாலையில் 2.5. கி.மீ. தொலைவில் வாழ்வியல் மேடு (8°25’41.29”N 77°40’31.79”E) காணப்படுகிறது. இந்தப் பகுதி விளாங்காடு என்றழைக்கப்படுகிறது. இரும்பு மற்றும் தொடக்க வரலாற்றுக் காலத்தைச் சார்ந்த வாழ்வியல் மேடானது 2.5 மீ. உயரத்தில் 12 ஹெக்டேர் பரப்பளவில் விரிந்து காணப்படுகிறது. இங்குச் செவ்வண்ணம், கருப்பு–சிவப்பு வண்ணம், கருப்பு வண்ணம், வெண்புள்ளி இட்ட கருப்பு–சிவப்பு வண்ண ஆகிய மட்கல ஓடுகளும் குறியீடுகள் கொண்ட மட்கல ஓடுகளும், ஈமத்தாழிகளும் கிடைக்கின்றன. இந்தப் பண்பாட்டு மேட்டில் கிடைக்கப்பெற்றுள்ள அரிய தொல்பொருட்களைக் கருத்தில் கொண்டு தன்னுள் மறைத்துள்ள பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறிய இப்பண்பாட்டு மேடு காத்திருக்கிறது. இந்த அகழாய்வின் குறிக்கோள் செறிவுமிக்க இத்தொல்லியல் தளத்தின் உருவாக்கம், குடியேற்ற முறை மற்றும் தொல்பொருட்களின் தன்மை ஆகியவற்றைக் கண்டறிவதாகும். நம்பி ஆற்றின் கரையில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதே இவ்வகழாய்வின் நோக்கமாகும். இத்தொல்லியல் தளமானது சிவகளை, ஆதிச்சநல்லூருக்குச் சமகாலக்கட்டமாகும்.

வெம்பக்கோட்டை

விருதுநகர் மாவட்டம், சிவகாசியிலிருந்து தெற்கே 15 கி.மீ. தொலைவில் வைப்பாறு ஆற்றின் இடது கரையில் வெம்பக்கோட்டை என்ற ஊர் அமைந்துள்ளது. மேட்டுக்காடு என்றும் உச்சிமேடு என்றும் அழைக்கப்படுகின்ற 25 ஏக்கர் பரப்பளவில் பரந்து கிடக்கின்ற தொல்லியல் மேட்டில் நுண்கற்காலம் முதல் இடைக்காலம் வரை தொடர்ந்து வாழ்ந்ததற்கான அடையாளங்களை வெளிப்படுத்துகின்றது. இத்தொல்லியல் மேடு தற்போதைய நிலப்பரப்பிலிருந்து 2 மீ. உயரம் கொண்டது. இங்கு இரும்புக் கால மட்கல ஓடுகள் மிகுதியாகச் சிதறிக் கிடக்கின்றன. இம்மேட்டில் நுண்கற்கருவிகள், பல்வேறு வகையான மணிகள், அலங்கரிக்கப்பட்ட சங்கு வளையல்கள், காதணிகள், சுடுமண்ணால் ஆன வட்டுகள், இரும்புக் கசடுகள் ஆகியவையும் கிடைத்துள்ளன.

தற்போது மேற்கொள்ளப்படவுள்ள அகழாய்வின் நோக்கமானது காலவாரியாகத் தொடர்ந்து நிலவியல் உருவாக்கத்தின் பின்னணியில் அதிக எண்ணிக்கையிலான நுண்கற்கருவிகளைச் சேகரிப்பதாகும்.

பெரும்பாலை

தருமபுரி மாவட்டம் பென்னாகரம், மேலச்சேரி சாலையில் பென்னாகரம் இருந்து 25 கி.மீ. தொலைவில் பாலாறு ஆற்றின் இடது கரையில் பெரும்பாலை என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் அமைந்துள்ளது. இவ்வூர் கொங்கு நாட்டின் வடவெல்லையாகத் தொன்றுதொட்டுக் கருதப்படுகிறது. இங்குள்ள வாழ்விட மேடானது தற்போதைய நிலவியல் அமைப்பிலிருந்து 3 முதல் 4 மீட்டர் உயரத்தில் 75 ஏக்கர் நிலப் பரப்பளவில் விரிந்து காணப்படுகிறது. இம்மேட்டில் கருப்பு–சிவப்பு நிற மட்கல ஓடுகள், கருப்பு நிற மட்கல ஓடுகள், சிவப்பு பூச்சுப்பெற்ற மட்கல ஓடுகள், சிவப்பு நிற மட்கல ஓடுகள் கிடைக்கின்றன. செம்மனூர் சிவன் கோயில் எதிரே ஈமக்காடுப் பகுதி காணப்படுகிறது. அண்மையில் ஈமக்காட்டுப் பகுதியின் நடுவே கால்வாய் வெட்டியபோது உயரமான வயல்வெளியில் 50க்கும் மேற்பட்ட கல்வட்டங்கள் கண்டறியப்பட்டன. கிடைக்கப்பெற்றுள்ள தொல்பொருட்கள் மூலம் தொடக்க வரலாற்றுக் காலத்தைப் பற்றிய சிறந்த நுண்ணறிவைப் பெரும்பாலைத் தொல்லியல் தளம் நாட்டிற்கு வழங்கிடும். அகழ்வாராய்ச்சியின் குறிக்கோளானது இத்தகைய தொல்லியல் திறன் வாய்ந்த தளத்தின் தள உருவாக்கம், குடியேற்றம், தொல்பொருட்களின் தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்துவதாகும். காவிரியின் கிளை ஆறான பாலாற்றின் ஆற்றங்கரைகளில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவது இந்த அகழாய்வின் நோக்கமாகும்.

தருமபுரி மாவட்டத்தில் 13,587 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி வாயிலாகத் தருமபுரி மாவட்டத்தில் ரூ.56.20 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 46 திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ.35.43 கோடி மதிப்பீட்டில் 591 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 13,587 பயனாளிகளுக்கு ரூ.157.42 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

தருமபுரி மாவட்டத்தில் அரசின் சார்பில் நடைபெறக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பு ஏற்று உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செந்தில்குமார் அவர்களே! பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய மதிப்பிற்குரிய திரு.ஜி.கே.மணி அவர்களே! தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் அருமை சகோதரர் திரு. வெங்கடேஸ்வரன் அவர்களே! தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்களே! மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அரசு அதிகாரிகளே! பத்திரிகை, ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே! சகோதரர்களே! மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்திருக்கக் கூடிய அன்பிற்கினிய தாய்மார்களே! சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழக அரசின் சார்பில் நடைபெறக்கூடிய பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் திட்டப் பணிகளைத் தொடங்கி வைக்கக்கூடிய அந்த நிகழ்வு, பல்வேறு அடிக்கல் நாட்டு விழாக்களையும் நடத்தக்கூடிய அந்த நிகழ்ச்சி, இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பழங்காலத்தில் தகடூர் என்று அழைக்கப்பட்ட தருமபுரியில், கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் வாழ்ந்த தருமபுரியில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும், காணொலி வழியாக இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நான் தருமபுரிக்கு நேரடியாக வந்து எனது கரங்களால் உங்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்று எதிர்பார்ப்போடு நீங்கள் எப்படிக் காத்திருந்தீர்களோ நானும் அப்படித்தான் காத்திருந்தேன். ஆனால் கொரோனா காலக் கட்டுப்பாடுகள் அதைக் கொஞ்சம் தடுத்திருக்கிறது.

தருமபுரி மாவட்டத்துக்கு என்று அரசுத் துறைகளைக் கவனிப்பதற்காக, அதை முறைப்படுத்துவதற்காக, தொடர்ந்து ஆய்வு செய்வதற்காக அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கக்கூடிய சகோதரர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களை நான் அரசின் சார்பில் நியமித்திருக்கிறேன் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். எங்களால்

வேங்கையின் மைந்தன் என்று அழைக்கப்படுபவர். ஆள் பார்க்க அமைதியாகத் தெரிவார். ஆனால் காரியத்தைக் கொடுத்துவிட்டால் வேங்கையைப்போல விறுவிறுப்பாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்படக் கூடியவர்தான் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள். இந்த விழாவை அவர் எப்படி எல்லாம் நடத்தத் திட்டமிட்டார் என்பது உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். அதனை அரசு விழாவாக மட்டுமில்லாமல், பல்வேறு கிராமங்களை உள்ளடக்கிய கிராமத் திருவிழாவாக நடத்த வேண்டும் என்று அவர் பல மாதங்களாக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். ஆனால், கொரோனாவால் அதனை நாம் பார்க்க முடியாமல் போய்விட்டது. அதனால் சில கட்டுப்பாடுகளை அரசின் சார்பாக விதித்திருப்பதன் காரணத்தால், அந்த நிகழ்ச்சியை நம்மால் நடத்த முடியாமல் போய்விட்டது. ஆனாலும் இன்னும் சில வாரங்களில் மற்றொரு வாய்ப்பு கிடைக்கும். அப்போது நிச்சயமாக தருமபுரிக்கு வருவேன் என்ற உறுதியை முதலில் நான் உங்களிடத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தருமபுரி மாவட்டம் என்றாலே இரண்டு விஷயங்களை நாம் மறக்க முடியாது. ஒன்று தலைவர் கலைஞரால் உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் தருமபுரியில்தான் முதல் முதலாகத் தொடங்கப்பட்டது. இன்னொன்று என்னவென்றால், என்னுடைய மேற்பார்வையில் நடந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

சமூகத்தின் சரி பாதியான மகளிர் இனம், தனது சொந்தக் காலில் நிற்க வேண்டும், பொருளாதாரத் தன்னிறைவு பெற்றவர்களாக மகளிர் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களை தருமபுரி மாவட்டத்தில் முதன்முதலாகத் தொடங்கி வைத்தார்கள். அந்தத் திட்டத்தின் தொடக்கவிழா நடந்தது முதன்முதலில் தருமபுரியில்தான். இங்கு நடந்த விழாவிற்கு கலைஞர் அவர்களே நேரடியாக வந்து மகளிருக்குக் கடன் வழங்கும் அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

உள்ளாட்சித்துறையின் அமைச்சராக இருந்த நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து அரசு விழாக்கள் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்களை அன்றைக்கு நாம் வார்த்தெடுத்தோம்.

இன்றைய தினம் எந்த ஊருக்குச் சென்றாலும், நாங்கள் மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும், உங்களால் கடன் பெற்று இன்று தலைநிமிர்ந்து வாழ்கிறோம் என்று மகளிர் பலர் பேசும்போது, என்னையும் அறியாமல் மனம் மகிழ்ச்சி அடையக்கூடிய அளவிற்கு என்னுடைய உணர்வு வந்துவிடுகிறது. அதனால், என்னால் தருமபுரி மாவட்டத்தை ஒருக்காலும் மறக்க முடியாது.

அதேபோல், என்னுடைய வாழ்க்கையில் நீ எதையாவது சாதித்திருக்கிறாயா என்று கேட்டால், பட்டியல் போடும்போது நிச்சயம் இடம்பெறும் மகத்தான திட்டம்தான் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தருமபுரி மாவட்ட மக்கள் மட்டுமல்ல, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களும் குடிநீருக்காகப் பல கிலோமீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலை இருந்தது. அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய குடிதண்ணீரில் ப்ளோரைடு அதிகமாகக் கலந்து இருந்தது. குறிப்பாக பென்னாகரம், பாலக்கோடு, தருமபுரி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களும் பற்களில் காரை படிவதும் நீண்ட நாட்களாக இருந்து வந்தது. இதிலிருந்து இந்த இரண்டு மாவட்ட மக்களைக் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த திட்டம் அந்தத் திட்டம். அன்றைக்கு நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நான் எந்த அளவிற்கு முனைப்பாக இருந்தேன் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு என்னை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி வைத்தார். இதற்கான திட்டமிடுதல்கள், நிதி வசதிகள் ஏற்பாடு செய்தல் ஆகியவற்றை முடுக்கி விடச் சொன்னார்கள். நான் ஜப்பான் சென்று இதற்கான பணிகளைச் செய்தேன். அப்படி உருவாக்கப்பட்டதுதான் இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். அந்தச் சீரிய திட்டத்தைக் கடந்த 2008ஆம் ஆண்டு தருமபுரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே நேரடியாக வந்து துவக்கி வைத்தார்.

பலமுறை கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரிக்கு நான் நேரடியாக ஆய்வு செய்து அந்தப் பணிகளை முடுக்கி விட்டேன். சுமார் 80 சதவிகித பணிகள் நிறைவுற்ற நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அடுத்து வந்த ஆட்சி, அந்தத் திட்டத்தை முடக்கி வைத்தது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக நானே தருமபுரி மாவட்டத்திற்குச் சென்று அங்கிருக்கக்கூடிய மக்களை எல்லாம் ஒன்று திரட்டிப் போராட்டம் நடத்தினேன். அதன்பிறகு தான் வேறு வழியில்லாமல் அந்தத் திட்டத்தைக் கடந்த கால அரசு நிறைவேற்றியது.

எனவேதான் தருமபுரியை நினைத்தால் என்னுடைய நினைவிற்கு வருவது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், அதை மறக்கவே முடியாது.

இப்போது இந்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள 3 நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 7,639 ஊரக குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் குடிநீரின் அளவை மேலும் உயர்த்தும் வகையில், இத்திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகளை ரூ.4,600 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் துவக்கப்படும் என்பதை இந்த நிகழ்ச்சியின் மூலமாக உங்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னும் சில அறிவிப்புகளை நான் இங்குக் கூற இருக்கிறேன்.

★ சேலம், தருமபுரி மாவட்டங்களுக்கு இடையேயான போக்குவரத்தை மேலும் எளிதாக்கக் கூடிய வகையில், சேலம் மாவட்டத்தில் உள்ள கோட்டையூருக்கும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒட்டனூருக்கும் இடையே புதிய மேம்பாலம் ஒன்று அமைக்கப்பட்டு, ரூ.250 கோடி மதிப்பீட்டில் புதிய சாலை இணைப்பு உருவாக்கப்படும்.

★ அதிக அளவில் பால் உற்பத்தி செய்யும் தருமபுரி மாவட்ட விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றுத் தருமபுரியில் புதிய பால் பதனிடும் நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

★ புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு ஏதுவாகத் தருமபுரியில் புதிய சிப்காட் தொழில் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

★ தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில், ரூ.40 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய கூடுதல் அலுவலகக் கட்டிடம் ஒன்று அமைக்கப்படும்.

ஆகிய அறிவிப்புகளை இந்நிகழ்ச்சியின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம்

★ ரூ.56.20 கோடி மதிப்பீட்டில் 46 அரசுக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

★ 591 புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இதன் மொத்த மதிப்பு ரூ.35.42 கோடி ஆகும்.

இந்தக் கட்டடங்கள் தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, நல்லம்பள்ளி, அரூர், கடத்தூர், பென்னாகரம், மொரப்பூர், பாப்பிரெட்டிபட்டி, எரியூர், காரிமங்கலம் ஆகிய பல்வேறு இடங்களில் அமைய இருக்கிறது. இவை விரைந்து கட்டப்படும். விரைவில் திறப்பு விழாவும் நடைபெறும்.

இன்றைய தினம் 13,587 பேருக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்யப்பட இருக்கின்றன.

வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள், கைம்பெண் உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, உழவர் அட்டைகள், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம், கருணை அடிப்படையிலான பணிகள், இருளர் மக்களுக்கு வீடுகள், இலவச சலவைப் பெட்டி, உலமாக்களுக்கு உதவி, கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு இழப்பீடு, புதிய விவசாய மின் இணைப்புகள், சூரிய மின் சக்தி, நுண்ணுயிர்ப் பாசனத் திட்டம், நகரும் காய்கறி வண்டி என்று பல்வேறு வகையில் இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. நான் சிலவற்றைத்தான் இங்குக் குறிப்பிட்டிருக்கிறேன். இன்னும் பல்வேறு உதவிகள் வழங்கப்படவிருக்கிறது.

13,587 பேருக்குச் சுமார் ரூ.157.42 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் செய்யப்படுகின்றன.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால்,

இன்றைய தினம் மட்டும் ரூ.249.05 கோடி மதிப்பீட்டில் நலத்திட்டங்கள் மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன. இதையெல்லாம் நான் செய்து வழங்கியுள்ளேன் என்று சொல்வதைவிட, உங்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு, உங்களுக்கு வழங்கியிருக்கிறது என்று சொன்னால்தான் அது சரியாக இருக்கும், பொருத்தமாக இருக்கும்.

எங்கள் மீது நம்பிக்கை வைத்து நீங்கள் ஆட்சியை வழங்கினீர்கள். உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நாங்கள் காப்பாற்றி வருகிறோம் என்பதன் அடையாளம்தான் இந்த விழா. இது போன்ற விழாக்கள் இனிமேல் அடிக்கடி நடக்கும். இங்கு மட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களிலும் நடக்கும்.

கழக அரசு என்பது எப்போதும் இதே சுறுசுறுப்புடன்தான் செயல்படும்.

சில நாட்களுக்கு முன்னால் பிசினஸ் லைன் என்கிற ஆங்கில நாளேடு வெளியிட்ட சிறப்புக் கட்டுரையில், ‘தொழில் முதலீடுகளுக்கு மிகச் சிறந்த மாநிலம் தமிழ்நாடு தான்’ என்று எழுதி இருக்கிறது.

மே மாதம் இந்த அரசு பொறுப்பேற்றது. இந்த ஆறு மாத காலத்தில் 304 திட்டங்களுக்காக ரூ.1,34,902 கோடி முதலீடுகளைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்று சொன்னால், அதுதான் தமிழ்நாட்டில் நடப்பது நல்லாட்சி என்பதற்கான உதாரணம்.

ஒரு மாநிலத்தில் ஏராளமான முதலீடுகள் பல்வேறு நிறுவனங்களால் செய்யப்படுகிறது என்றால் அந்த மாநிலத்தில் நல்லாட்சி நடக்கிறது என்று பொருள். அந்த மாநிலத்தில் அமைதி நிலவுகிறது என்று பொருள். அந்த மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீராக இருக்கிறது என்று பொருள். அந்த மாநிலம் வளர்ச்சிக்குரிய மாநிலமாக இருக்கிறது என்று பொருள். அந்த மாநிலத்தில் புதிய நிறுவனத்தைத் தொடங்கினால் அந்த நிறுவனம் வளரும் என்று பொருள்.

அத்தகைய மரியாதையை, பெருமையை இன்றைய அரசு பெற்றிருக்கக்கூடிய காரணத்தால்தான், இத்தனை நிறுவனங்கள், இவ்வளவுப் பெரிய தொகையைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ளார்கள்.

முதலீடு என்பது வெறும் தொழில் சார்ந்தது மட்டுமல்ல, அது வளர்ச்சியைச் சார்ந்தது. அது நல்லாட்சியின் அடையாளம் ஆகும். அத்தகைய பெயரை ஆட்சிக்கு வந்த ஆறுமாத காலத்தில் பெற்றிருக்கிறோம், அதுதான் முக்கியமானது. இரண்டு ஆண்டுகள் கழித்தோ, நான்கு ஆண்டுகள் கழித்தோ பெயர் வாங்குவதைவிட ஆறுமாத காலத்தில் பெயர் வாங்குவதுதான் மிகமிக முக்கியமானது.

இதை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது எனக்கு மிகப்பெரிய நம்பிக்கை பிறக்கிறது.

நமது தாய்த் தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக நிச்சயமாக நாம் ஆக்குவோம், ஆக்க முடியும், அதுவும் விரைவில் ஆக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குப் பிறக்கிறது. அந்த நம்பிக்கையோடு உங்கள் அனைவருக்கும் நான் மீண்டும் ஒரு முறை நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

மறைந்த கலைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்பப் பராமரிப்பு உதவித்தொகை

தமிழக பாரம்பரிய கலைகளைப் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு, 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க் கலைகளை அங்கீகரிக்கும் வகையில் 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இம்மன்றத்தின் வாயிலாக மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், மாநில அளவில் கலைமாமணி விருது வழங்குதல், கலை விழாக்களை நடத்துதல், தொன்மை வாய்ந்த அரிய கலை வடிவங்களை ஆவணமாக்குதல், மூத்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் மறைந்த கலைஞர்களின் வாரிசுதாரர்களுக்குக் குடும்பப் பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 15 வாரிசுதாரர்களுக்கு ரூ.25,000 உதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

314 திருக்கோயில்களுக்கு BHOG தரச்சான்றிதழ்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 24.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிலுள்ள 314 திருக்கோயில்கள், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்ட BHOG தரச்சான்றிதழ்கள் பெற்றமைக்காக, திருக்கோயில்களின் செயல் அலுவலர்களைப் பாராட்டும் விதமாக, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்; திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்; திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில்; சென்னை தங்கச்சாலை அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்; திருமுல்லைவாயில் அருள்மிகு மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில்; திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயில்; மகாபலிபுரம் அருள்மிகு ஸ்தல சயன பெருமாள் திருக்கோயில்; சென்னை அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில்; சென்னை அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் இணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர்களைப் பாராட்டி, தரச்சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்தினார்.

இந்திய அரசின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம், நாடு முழுவதும் உணவு தயாரித்து வழங்கிடும் நிறுவனங்களில் தயாரிக்கப்படும் உணவு வகைகளைப் பரிசோதித்துத் தரச்சான்றிதழ் வழங்கும் பணியினைச் செய்து வருகிறது. இந்நிறுவனம் மத வழிபாட்டுத் தலங்களில் தயாரிக்கப்பட்டு இறைவனுக்குப் படைக்கப்படும் பிரசாத வகைகளைப் பரிசோதித்து கடவுளுக்குச் சுத்தமான சுகாதாரமான பிரசாதம் படைத்தல் (BHOG-Blissful Hygienic Offering to God) சான்றிதழ்களை வழங்கி வருகிறது.

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் திட்டம் தற்போது 754 திருக்கோயில்களில் ஆண்டுக்கு ரூ.76 கோடி செலவில் நாள் ஒன்றுக்கு 70,000 பக்தர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

திருக்கோயில்களில் தயாரிக்கப்படும் பிரசாதம் மற்றும் அன்னதான உணவு வகைகள் சுத்தமாகவும் சுகாதாரத்துடனும் தயாரிக்கப்படுவதைப் பரிசோதனைக்குட்படுத்தி இந்திய அரசின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் தரச்சான்றிதழ்கள் 6 திருக்கோயில்களுக்கு மட்டுமே பெறப்பட்ட நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், அரசின் சீரிய முயற்சியால் 308 திருக்கோயில்களுக்குத் தரச்சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது. மேலும், 440 திருக்கோயில்களுக்குச் சான்றிதழ்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தியா முழுவதும் 394 மத வழிபாட்டுத் தலங்களுக்கு மட்டுமே இச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு அரசால் 314 திருக்கோயில்களுக்கு இச்சான்றிதழ் பெறப்பட்டுத் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

மதுரையில் 67,831 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.01.2022 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, மதுரை மாவட்டத்தில் ரூ.51.77 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றத் திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.49.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 67,831 பயனாளிகளுக்கு ரூ.219 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

மதுரை மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டு விழா, திட்டப் பணிகளின் தொடக்கம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்குத் தலைமை பொறுப்பையேற்றுள்ள மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராசன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே! சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.தளபதி அவர்களே! திரு.வெங்கடேசன் அவர்களே! திரு.பூமிநாதன் அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய திரு.வெங்கடேசன் அவர்களே!

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களே! மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அனீஷ் சேகர், இ.ஆ.ப., அவர்களே! மதுரை மாநகராட்சி ஆணையாளர் திரு.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களே! மதுரை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி சூரியகலா கலாநிதி அவர்களே! மற்றும் அரசு அதிகாரிகளே! அரசு அலுவலர்களே! நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கும் பயனாளி பெருமக்களே! மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதரிகளே! தொலைக்காட்சி, பத்திரிகை ஊடக நண்பர்களே! அன்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்!

இந்த நிகழ்ச்சி மிகச் சிறப்போடு நடைபெற வேண்டும் என்ற உணர்வோடு நம்முடைய மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்த நேரத்தில் அவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டுக் காய்ச்சல் அதிகமாகி, அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் காரணத்தால், இந்த நிகழ்ச்சியில் அவரால் கலந்துகொள்ள முடியவில்லை. காலையில் கூட, அவரோடு நான் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு அவர் எப்படியாவது நான் வந்து விடுகிறேன் என்று என்னிடத்தில் சொன்னபோது, வேண்டாம், கட்டாயம் வரக்கூடாது, முதலில் உடல்நலத்தை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள், அதற்குப் பிறகு பார்க்கலாம் என்று சமாதானம் செய்து, அவர் மருத்துவமனையில் இருக்கிறார் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, மருத்துவமனையில் இருந்தாலும் தொலைக்காட்சி மூலமாக இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருப்பார் என்பதும் நமக்குத் தெரியும். ஆகவே, இந்த நிகழ்ச்சி சிறப்போடு அமைவதற்கான எல்லாப் பணியிலும் ஈடுபட்ட அவருக்கும் நான் இந்த நேரத்தில் நன்றியைச் சொல்லி, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நீதிகேட்டுக் கண்ணகி முழங்கிய இந்த மதுரை மண்ணில், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இந்த மண்ணில், தமிழினத் தலைவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நீதிகேட்டு நெடும்பயணம் தொடங்கிய இந்த மண்ணில், எனக்கு அரசியல் பயிற்சிக் களமாக அமைந்த இளைஞர் அணி தொடங்கப்பட்ட இந்த மண்ணில், இன்று நடக்கும் அரசு விழாவில் காணொலி வாயிலாகப் பங்கெடுப்பதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன்.

முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கியும், நடக்கின்ற இந்த விழா, கொரோனா காலமாக இல்லாமல் இருந்தால் மதுரையே குலுங்கக்கூடிய வகையில் பிரமாண்டமாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்கும், நேரடியாக நாங்களும் வந்திருப்போம்.

அமைச்சர் திரு.மூர்த்தி அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாவிட்டாலும், அவர் ஒருவார காலமாக ஜல்லிக்கட்டுப் போட்டியைப் பிரம்மாண்டமாக நடத்திக் காட்டிய பெருமை அவரைச் சாரும். இந்த விழாவையும் அதற்கு இணையாக நிச்சயமாக நடத்தி இருப்பார். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அது கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும், அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அதைப் பிரம்மாண்டமாக நடத்திக் காட்டுவதில் திரு.மூர்த்தி சிறந்த வல்லவராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடியவர். எத்தனையோ விழாக்களை மதுரையில் அவருக்கே உரியப் பாணியில் பிரம்மாண்டத்தோடு நடத்திக் காட்டியிருக்கிறார்.

காளையை அடக்க எப்படி மூக்கணாங்கயிறு அவசியமோ, அதைப் போல நாங்கள்தான் அவரைக் கட்டுப்படுத்துவோம். இல்லாவிட்டால் மிகப் பிரம்மாண்டத்தைக் காட்டிவிடுவார்.

பத்திரப் பதிவுத்துறை அமைச்சராக இருந்து, அந்தத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து, அதன் வழியாக அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் துறையாக அதனை மாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர் திரு. மூர்த்தி அவர்கள்.

அதைப் போலத்தான் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராசன் அவர்கள். அவர் எந்த அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நான் அதிகம் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், பூரிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மூன்று தலைமுறைகளாக இந்த மாநிலத்தில் வளர்ச்சிக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட குடும்பத்தைச் சார்ந்தவர் பி.டி.ஆர். அவர்களது குடும்பம். இது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

பி.டி.ராஜன் அவர்கள் இந்த மாநிலத்தின் அமைச்சராக இருந்தவர்கள். சில காலம் ஃபர்ஸ்ட் மினிஸ்டராகவும் இருந்தவர். தமிழகத்தில் கூட்டுறவுத்துறை செழிக்க வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டவர், அதற்கு அடித்தளம் அமைத்தவர் பி.டி.ராஜன் அவர்கள்.

பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்பைக் காக்கக்கூடிய வகையில் அவையின் தலைவராகவும், அதற்குப் பிறகு அமைச்சராகவும் இருந்தவர். அவரது அருமைப் புதல்வர் தான் நம்முடைய பழனிவேல் தியாகராசன் அவர்கள், இன்று நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அமைச்சரவையிலே மிகமிகக் கடினமான துறை எது என்றால், அது நிதித்துறைதான்.

நிதி நிலைமை மோசமாக இருந்தாலும், அதைக் காரணமாகச் சொல்லாமல், நிதியை வழங்க வேண்டிய நெருக்கடியான கடமை அமைச்சர் பொறுப்பேற்று இருக்கக்கூடிய பழனிவேல் தியாகராசனுக்குத்தான் உண்டு.

நிதியை உருவாக்கவும், இந்த அரசின் கொள்கைத் திட்டங்களை வகுப்பதிலும் தனது மொத்த திறமையையும் வழங்கிவருபவராகப் பழனிவேல் தியாகராசன் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்.

அமைச்சர்கள் மூர்த்தியும், பழனிவேல் தியாகராசனும் இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்கள். அமைச்சர்கள் இருவருக்கும் ஈடு கொடுத்துச் சிறப்பாகப் பணியாற்றக்கூடிய மாவட்ட ஆட்சியருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். அதேபோல அவர்களுக்குத் துணை நின்று கொண்டிருக்கும் அரசு அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் நான் என்னுடைய இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சங்க கால நகரமாக மதுரை இருந்தாலும் நாம் பார்க்கும் நவீன மதுரையை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

- நகராட்சியாக இருந்த மதுரையை 1971இல் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தி மேம்படுத்திய அரசு, நம்முடைய தி.மு.க. அரசுதான்.
- மாவட்ட நீதிமன்றம் அமைக்க அடிக்கல் நாட்டியவர் முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள். அதைத் திறந்து வைத்தவர் முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.
- சென்னை உயர்நீதிமன்றக் கிளை மதுரையில் அமைய வேண்டும் என்று முதன்முதலாக 1973ஆம் ஆண்டு முயற்சித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். 1989ஆம் ஆண்டும் முயற்சித்தார். 1996ஆம் ஆண்டு நிலத்தை கையகப்படுத்த உத்தரவு பிறப்பித்தார். அதற்காக ரூ.5 கோடியை ஒதுக்கினார். அதுவும் கழக ஆட்சியில்தான், 2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது.
- மதுரை சுப்பிரமணியபுரம் மேம்பாலம் கட்டப்பட்டு, அதற்கு ‘மதுரை முத்து மேம்பாலம்’ என்ற பெயர் சூட்டியவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.
- ஆண்டாள்புரம் பாலத்துக்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரைச் சூட்டியவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.
- மதுரை தெற்குவாசல் இருப்புப்பாதை மேம்பாலம் கட்டப்பட்டு, ‘தியாகி என்.எம்.ஆர்.சுப்புராமன் மேம்பாலம்’ என்று பெயர் சூட்டப்பட்டது.
- மானம் காத்த மருதுபாண்டியருக்குச் சிலை அமைக்கப்பட்டது.
- தமிழைச் செம்மொழி என்று 100 ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவிய பரிதிமாற்கலைஞருக்கு மணிமண்டபம்.
- திராவிட மொழிநூல் ஞாயிறு என்று போற்றப்பட்ட தேவநேயப் பாவாணருக்கு மணிமண்டபம் அமைத்த அரசும் கழக அரசுதான்.
- மதுரா கோட்ஸ் மேம்பாலம், ஆனைக்கல் வைகை ஆற்றின் குறுக்கே மேம்பாலம், வைகை ஆற்றின் குறுக்கே 3 தரைப் பாலங்கள், வைகை ஆற்றின்

குறுக்கே மேம்பாலம், செல்லூர் அருகே தத்தநேரி இருப்புப்பாதை, உயர்மட்ட மேம்பாலம் ஆகியவை கழக ஆட்சியில்தான் அமைக்கப்பட்டன.

- மதுரை வடபகுதியிலிருந்து 27 கி.மீ. முதல் ரிங்ரோடு, மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம், மாட்டுத்தாவணியில் வணிக வளாகம், பூ மார்க்கெட், சென்ட்ரல் மார்க்கெட்.
- மதுரை இரயில் நிலையம் அருகே எல்லீஸ் நகர் மேம்பாலம், மதுரை மத்தியப் பகுதியில் மதுரை அண்ணா பல்கலைக்கழகம், இரண்டு பாலிடெக்னிக்குகள், வைகை இரண்டாம் குடிநீர்த் திட்டம் மற்றும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம், வாடிப்பட்டியில் கைத்தறி ஜவுளி பூங்கா
- இந்தியாவுக்கு வளம் சேர்க்கும் திட்டமாக மாறியிருக்கக் கூடிய சேது சமுத்திரத் திட்டத்தின் தொடக்கவிழாவை நாம் நடத்தியதும் மதுரையில்தான்!
- மதுரை விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக ரூ.120 கோடி மதிப்பீட்டில் மாற்றினோம். புதிய டெர்மினல் முனையக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, திறந்து வைக்கப்பட்டதும் தி.மு.க. ஆட்சியில்தான்!
- மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு புதிய கட்டடத்துக்கு 2007இல் நான்தான் அடிக்கல் நாட்டினேன்.

இப்படி மதுரைக்குச் செய்த சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இத்தகைய சாதனைச் சரித்திரத்தை மீண்டும் தொடங்கி இருக்கிறோம்.

சங்கம் வளர்த்த மதுரையில் மாபெரும் நூலகம் அமையப் போகிறது. அதுவும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பெயரால் அமையப் போகிறது. ரூ.114 கோடி மதிப்பீட்டில் அது கட்டப்பட இருக்கிறது. 2.70 ஏக்கர் நிலத்தில், 2,13,288 சதுர அடி கட்டடப் பரப்பில், 8 தளங்களுடன் அமையப் போகிறது. இந்த நூலகத்துக்குத் தேவையான நூல்கள், மின் நூல்கள், இணையவழிப் பருவ இதழ்கள் ஆகியவை வாங்க ரூ.10 கோடியும், தொழில்நுட்பச் சாதனங்கள் வாங்குவதற்கு ரூ.5 கோடியும் ஒதுக்கீடு செய்ய இருக்கிறார்கள். காலத்தால் அழிக்க முடியாத அறிவுக்கருவூலமாக கலைஞர் நினைவு நூலகம் அமையப் போகிறது. அதுவும் மதுரை மண்ணில் அமையப் போகிறது என்பது உங்களுக்கு மட்டுமல்ல; எங்களுக்கும் பெருமையாகும்.

அதேபோல் மதுரை நகரை மேம்படுத்துவதற்காக மதுரை நகர வளர்ச்சிக் குழுமத்தை உருவாக்கி இருக்கிறோம்.

மதுரையில் மக்கள்தொகையின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. எனவே அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்கித் தர வேண்டியது ஒரு அரசின் கடமையாகும். அந்தக் கடமையை, இந்த அரசு அமைந்ததும் உணர்ந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

1972ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் முதன்முதலாகச் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தை உருவாக்கினார். அதுதான் சென்னையை நவீனச் சென்னையாக உருவாக்கியது.

அந்த வரிசையில் மதுரை நகர வளர்ச்சிக் குழுமத்தைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருப்பதை எண்ணி நான் பெருமையாகக் கருதுகிறேன். இதன்மூலமாக மதுரை மாநகருக்குப் பல்வேறு திட்டப்பணிகளைச் செயல்படுத்தித் தர உள்ளோம். இந்த வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்த 14 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளோம்.

மதுரையானது மாமதுரையாக, அழகான மதுரையாக, எல்லா வகையிலும் தன்னிறைவு பெற்ற மதுரையாக மாற்றிக் காட்டப்படும் என்று இக்கூட்டத்தின் வாயிலாக, இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் உறுதி அளிக்கிறேன்.

இதன்தொடர்ச்சியாக மேலும் சில அறிவிப்புகளைச் செய்ய நான் விரும்புகிறேன்.

- மதுரை மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட வார்டுகளில் பாதாளச் சாக்கடை வசதிகளை அமைக்கவும், இந்த வசதி ஏற்கெனவே உள்ள பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்புப் பணிகளை மேம்படுத்தவும் ரூ.500 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும்.
- மதுரை நகரின் மையப் பகுதியில் தற்போது அமைந்துள்ள பல்வேறு மொத்த விற்பனை சந்தைகள் அனைத்தையும் புறநகர்ப் பகுதிகளுக்கு மாற்றி, நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான திட்டம் ரூ.50 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்.
- உலகப் புகழ்பெற்ற மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே தீவிபத்தில் சேதமடைந்த வீரவசந்தராயர் மண்டபம் ரூ.18 கோடி மதிப்பீட்டில் விரைவில் புனரமைக்கப்படும். திருப்பணிகளும், புனரமைப்புப் பணிகளும் விரைவில் மேற்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகளில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தப்படும்.
- மதுரை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள பல்வேறு மொத்த விற்பனைச் சந்தைகள் அனைத்தையும் புறநகர்ப் பகுதிகளுக்கு மாற்றி, நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஒரு திட்டம் ரூ.50 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்.

- மாநகராட்சி பகுதிகளில் அதிகரித்து வரும் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு, ரூ.100 கோடி மதிப்பில் வைகை ஆற்றின் வடகரையில் உள்ள சாலையை நீட்டிப்பதற்கும், மேலக்கல் சாலையை அகலப்படுத்துவதற்கும் தேவையான பணிகள் செயல்படுத்தப்படும்.
- நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள மத்திய சிறைச்சாலை, மாநகராட்சிக்கு வெளியே புதிய இடத்திற்கு மாற்றி அமைக்கப்படும். தற்போது உள்ள அந்த சிறைச்சாலை இடம், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு உகந்த வகையில் பசுமைப் பகுதியாக மேம்படுத்தப்படும்.
- வண்டியூர், செல்லூர் மற்றும் தென்கரை ஏரிப்பகுதிகள், பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் வகையில் பொதுப் பயன்பாட்டு இடங்களாக மேம்படுத்தப்படும்.
- விரகனூர் சந்திப்பு, அப்போலோ மருத்துவமனைச் சந்திப்பு, மண்டேலா நகர்ச் சந்திப்பு, இராஜாஜி மருத்துவமனைச் சந்திப்பு போன்ற அதிகப் போக்குவரத்து நெரிசல் காணப்படும் சந்திப்புகளில், புதிய மேம்பாலங்களை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளும் விரைவில் தொடங்கப்படும்.
- தொழில் வளர்ச்சியில் மதுரை மாவட்டத்தை முன்னிறுத்தும் வகையில் மதுரையில் புதிய சிப்காட் தொழில் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.
- உலகத் தமிழர்களின் உணர்வோடு கலந்துவிட்ட பண்பாட்டு அடையாளமான ஏறு தழுவுதலை நம் வீர விளையாட்டை முறைப்படுத்திப் பாதுகாப்பது நம் கடமையாகும். உலகெங்கிலும் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் நவீன வசதிகளுடன் கூடிய மாபெரும் அரங்கம் ஒன்று மதுரை, அலங்காநல்லூர் பகுதியில் அமைக்கப்படும்.
- தமிழரின் வீர விளையாட்டுகள் மற்றும் பாரம்பரிய காளை இனங்கள் குறித்த அருங்காட்சியகம் ஒன்று ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் பாதுகாப்புடன் போட்டியைக் கண்டு களிக்கக்கூடிய வகையில் நிரந்தர அரங்கம் வீரர்கள் மற்றும் காளைகளின் நலம் காக்க மருத்துவமனைகள் எனப் பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டதாக இந்தத் திட்டம் அமையும். இன்றைய நாள் ரூ.51.77 கோடி மதிப்பிலான பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ரூ.49.74 கோடி மதிப்பிலான பணிகளைத் தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன்.

அமைச்சர்கள் மூலமாகக் கிடைத்த மனுக்கள், முதலமைச்சரின் முகவரித் திட்டத்தின் மூலமாகக் கிடைத்த மனுக்கள் என்ற வகையில், எங்களுக்கு 40,978 மனுக்கள் கிடைத்துள்ளன. இதில் முதல் கட்டமாக 23,879 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் 67,831 பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படுகின்றன. இதன் மதிப்பு ரூ.219 கோடி ஆகும்.

மொத்தமாக இன்றைய நாள் மட்டும் ரூ.342.33 கோடி மதிப்பிலான பணிகள் மக்களுக்குக் கிடைத்துள்ளன.

மதுரை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 6 தளம் கொண்ட கல்விக் கூடம், 5 தளம் கொண்ட குடியிருப்பு வளாகம், குருவிக்காரன் சாலையில் உயர்மட்ட மேம்பாலம், முடுக்குவார்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை, மணியாஞ்சியில் கூடுதல் வகுப்பறை, யா.ஒத்தக்கடையில் கூடுதல் வகுப்பறை, செல்லம்பட்டி, கருப்பட்டி, அரசப்பட்டியில் அங்கன்வாடி கூடங்கள் ஆகியவை திறக்கப்படுகின்றன.

இப்படி ஊர் ஊராக, பகுதி பகுதியாக, என்னென்ன தேவையோ அவை அனைத்தையும் செய்து கொடுக்கும் அரசாக இந்த அரசு இருக்கும். ஊரின் தேவை, ஒரு வட்டாரத்தின் தேவை, ஒரு தெருவின் தேவை, தனிப்பட்ட ஒரு மனிதனின் தேவை என்ன என்பதைக் கேட்டறிந்து நிறைவேற்றித் தரும் அரசாக இந்த அரசு இருக்கும். மைக்ரோ அளவிலான பிரச்சினையையும் கூர்மையாகப் பார்த்து நிவர்த்தி செய்யும் அரசாக இந்த அரசு இருக்கும்.

பெரிய, பெரிய திட்டங்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் தருகிறோமோ, அதே அளவுக்கு ஒரு தனிமனிதனின் விருப்பத்துக்கும், தேவைக்கும் முக்கியத்துவம் தரும் அரசாக நாங்கள் இருப்போம்.

அதனால்தான் ஒட்டுமொத்தமாக மதுரை வளர்ச்சிக்கான நகர வளர்ச்சிக் குழுமத்தை அமைத்துள்ளோம். தனி மனிதர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளோம். இதுதான் எங்களது ஆட்சியின் இலக்கணம்!

மதுரை வாழ்க! இம்மாநிலம் வாழ்க!

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி வாயிலாக, மனித வள மேலாண்மைத்துறை சார்பில் கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 வருவாய் மாவட்டங்களில் ரூ.2.93 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்களைத் திறந்து வைத்தார்.

கொளத்தூரில் குடிநீர் திட்டப்பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.01.2022 அன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கௌதமபுரம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியில் குடிநீர் வசதி செய்து தரும் பணி மற்றும் ஜி.கே.எம். காலனியில் கழிவுநீர் அகற்றும் நிலையம் அமைக்கும் பணிகளைத் துவக்கி வைத்து, அசோக் அவென்யூ, ரங்கதாஸ் காலனி, அஞ்சுகம் நகர் ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால்கள் பணிகள் மற்றும் தார்ச்சாலை அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கௌதமபுரம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரும் வகையில், வியாசர்பாடி நீர்நிலை பகிர்மான நிலையத்திலிருந்து ஜவஹர் சாலை வரை 2.8 கி.மீ. தூரத்திற்கு ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, ஜெகநாதன் சாலை மற்றும் அசோக் அவென்யூ பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கிநிற்கும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர், ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் சென்னைப் பெருநகர்க் குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.40.30 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் அகற்றும் நிலையம் அமைக்கும் பணியினைத் துவக்கி வைத்தார். ரங்கதாஸ் காலனி மற்றும் நேதாஜி காலனி மெயின் ரோட்டில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், அஞ்சுகம் நகர் 12ஆவது தெருவில் தார்ச்சாலை அமைக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைபெற்றுவரும்

அனைத்துப் பணிகளையும், விரைவாகவும், தரமாகவும், குறித்த நேரத்திலும் முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டப் பகுதிகளில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் சாலைப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்து, குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர் அகற்றும் நிலையம் அமைக்கும் பணிகளைத் துவக்கி வைத்தார்.

சென்னை மாவட்டத்தில், 2,900 பயனாளிகளுக்குத் திருமண நிதியுதவி

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் திருமண உதவித் திட்டம் என்பது பெண்களின் உயர்கல்வியை ஊக்கப்படுத்தும் வகையிலும், பெண்களின் திருமணத்திற்காகப் பெண் குழந்தைகளின் பெற்றோருக்குத் திருமண நிதியுதவி மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்கு 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்பட்டு வருகிறது.

திருமண நிதியுதவி திட்டங்களின்கீழ், 2021–2022ஆம் நிதியாண்டிற்கு ரூ.762.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பட்டம், பட்டயப் படிப்பு படித்த 53,599 பயனாளிகள், பட்டதாரியல்லாத 41,101 பயனாளிகள் என மொத்தம் 94,700 பயனாளிகள் பயனடைய உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை மாவட்டத்தைச் சார்ந்த 2,900 பயனாளிகளுக்குத் திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் அடையாளமாக 5 பயனாளிகளுக்குத் திருமண நிதியுதவித் தொகையுடன் 8 கிராம் தங்க நாணயத்தை வழங்கினார்.

குறளோவியம் – திருக்குறள் மேசை நாட்காட்டிப் புத்தகம் விற்பனை

திருக்குறளை இளைய தலைமுறையினரிடத்தில் கொண்டு சேர்க்கும் வண்ணம், தீராக் காதல் திருக்குறள் என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்தப்படும் எனச் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற, குறளோவியம் என்ற தலைப்பில் மாநில அளவிலான ஓவியப் போட்டியினைத் தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் தமிழ் இணையக் கல்விக்கழகம் இணைந்து நடத்தியது.

மாநிலம் முழுவதும் இருந்து ஏறத்தாழ 12 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் திருக்குறள் கருத்தை மையப்படுத்திய சிறப்பான 365 ஓவியங்களைத் தெரிவு செய்து, திருக்குறள் மேசை நாட்காட்டிப் புத்தகத்தைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் வடிவமைத்து வெளியிட்டுள்ளது. இந்நாட்காட்டிப் புத்தகத்தை எல்லா ஆண்டுகளிலும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில், ஆங்கில தேதி மட்டும் இடம்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதைப் பொதுமக்களும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுருள்கட்டுடன் வண்ணத் தாள்களில் அச்சிடப்பட்டுள்ள இம்மேசை தினசரி நாட்காட்டிப் புத்தகம் ஒன்றின் விலை ரூ.350/– (ரூபாய் முந்நூற்று ஐம்பது மட்டும்) சேவை வரி உட்பட மற்றும் தபால் செலவு ரூ.80/– தனி. இந்நாட்காட்டிப் புத்தகம் வேண்டுவோர் தங்களுக்குத் தேவையான எண்ணிக்கை விவரம் மற்றும் முழுமையான முகவரியுடன், அதற்கான தொகையினை வரைவோலையாக இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை என்ற (DD in Favour of The Director, Tamil Virtual Academy, Chennai) பெயரில் அனுப்ப வேண்டும். வரைவோலையின் பின்புறம் குறளோவியம் நாட்காட்டிப் புத்தகம் என்று எழுதி, தங்கள் பெயர் மற்றும் அலைபேசி எண்ணைக் கண்டிப்பாகக் குறிப்பிடவேண்டும். மேலும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் https://www.tamilvu.org/tva_cal_2022_online/ என்ற இணையதளத்தில் பதிவு செய்து, உரியத் தொகையினை இணைய வழியில் செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம். மேலும், நாட்காட்டிப் புத்தகம் தேவைப்படுவோர் சென்னை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் புத்தக விற்பனை மையங்கள் செயல்படும் பள்ளிக் கல்வித்துறை வளாகம், நுங்கம்பாக்கம் மற்றும் கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக வளாகம் மற்றும் கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக்கழகம் (தொலைப்பேசி எண் 044 2220 9400) ஆகிய இடங்களில் நேரிலும் வாங்கிக்கொள்ளலாம்.

மேலும், விவரங்களுக்கு முனைவர் இரா. சிங்காரவேலன், ஆய்வு வளமையர் அவர்களை +91 86104 67558 என்ற எண்ணில் கட்செவி அஞ்சல் (Whatsapp) குறுஞ்செய்தி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

தனியார் இ–சேவை மையங்களுக்கான ஆணை

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள் 22.01.2022 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின்கீழ் தனியார் பிரவுசிங் சென்டர்கள் மூலம் இ–சேவை மையங்கள் தொடங்குவதற்கான ஆணைகளை 36 நபர்களுக்கு வழங்கினார்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.671.15 கோடியில் திட்டப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.662.22 கோடி மதிப்பீட்டில் 17 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.8.93 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

நகரங்களின் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதற்கும், நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சியை அடைவதற்கும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் மற்றும் திருப்பூர் ஒன்றியங்களைச் சார்ந்த 155 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.99.24 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

கரூர் மாவட்டம், தாந்தோணி ஒன்றியத்தைச் சார்ந்த 274 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.81.41 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி (தெற்கு), பொள்ளாச்சி (வடக்கு) மற்றும் கிணத்துக்கடவு ஒன்றியங்களைச் சார்ந்த 212 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.69.31 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகராட்சிக்கான ரூ.185.24 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்;

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியத்தைச் சார்ந்த ராயக்கோட்டை மற்றும் 28 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.8.46 கோடி மதிப்பீட்டிலானக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் பேரூராட்சிக்கான ரூ.30.11 கோடி மதிப்பீட்டிலான பாதாளச் சாக்கடை திட்டம்; எஸ்.கண்ணனூர் பேரூராட்சிக்கான ரூ.19.45 கோடி மதிப்பீட்டிலான பாதாளச் சாக்கடை திட்டம்;

ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சிக்கான ரூ.51.50 கோடி மதிப்பீட்டிலான பாதாளச் சாக்கடை திட்டம்;

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சிக்கான ரூ.34.51 கோடி மதிப்பீட்டிலான பாதாளச் சாக்கடை திட்டம்;

தூத்துக்குடி மாநகராட்சி, சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ்த் தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் ரூ.35.84 கோடி மதிப்பீட்டிலான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம்; வ.உ.சி. கல்லூரி அருகில் ரூ.9.76 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்துப் பூங்கா, அறிவியல் பூங்கா, கோளரங்கம் மற்றும் மானுடவியல் பூங்கா; ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட சி.வ.குளம் முள்ளிக்குளம் மீளவிட்டான் குளம்;

மதுரை மாநகராட்சி, அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு நிதியின்கீழ்க் குருவிக்காரன் சாலையில் ரூ.23.17 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட உயர்மட்டப் பாலம்; திண்டுக்கல் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ்க் கரூர் சாலை, பெஸ்கி காலேஜ் எதிர்புறம் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுரம் செயலாக்க மையக் கட்டடம்;

கோயம்புத்தூர் மாநகராட்சி, கரும்புக்கடை தெற்கு மண்டலத்தில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புறச் சுகாதார மையக் கட்டடம்; ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் காளப்பட்டி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம்; ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கே.கே.புதூர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள உணவுக்கூடம்;

என மொத்தம் ரூ.662.22 கோடி மதிப்பீட்டிலான 17 முடிவுற்றத் திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

நகராட்சி நிருவாகத்துறை சார்பில் திண்டுக்கல் மாநகராட்சி, திருவள்ளுவர் சாலையில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையம்;

திண்டுக்கல் மாநகராட்சி, கமலா நேரு மருத்துவமனை சாலையில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் நகரச் சமுதாய சுகாதார மையமாக மேம்படுத்தும் பணி;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகராட்சி, நேரு நகரில் ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள நகர்ப்புற வீடற்றவர்களுக்கான கட்டடம், காமராஜ் காலனியில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையம், மத்திகிரி பகுதியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள நவீன எரிவாயு தகன மேடை;

என மொத்தம் ரூ.8.93 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

நாட்டுப்பற்றின் அடையாளம்

இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு
நாட்டுப்பற்றின் அடையாளமாக விளங்கும்
நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கு
எனது வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.
சூரியக் கதிர்களைப் போலவே
அவர் புகழும் நாடெங்கும் பரவியுள்ளது.
அவர் காட்டிய ஒளியில்
நாட்டுப்பற்றுடன் முன்னோக்கிச் செல்வோம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

கலங்காத உள்ளம் படைத்தவர்களே
இறுதி வெற்றிக்கு உரியவர்கள்...
- நேதாஜி

23.01.2022 அன்று நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 126ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை, காமராசர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலையின்கீழ் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.01.2022 அன்று சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், உயர்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அண்ணா பல்கலைக்கழகத்தின் சென்னைத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து ரூ.10 கோடி மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தினைத் தொடங்கி வைத்தார்.

உயர்கல்வியினை அனைவரும் பெறும் வகையிலும், சமத்துவம் மற்றும் சமூகநீதிக்கு உட்பட்டு அனைத்துப் பிரிவினரையும் கல்வியின் எல்லைக்குள் கொண்டுவரும் வகையிலும், கொள்கைகள் வகுக்கப்பட்டு, தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது. தமிழக அரசின் கல்வி குறித்த பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளும், பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித்துறையின் சிறப்பான செயல்பாடுகளும் இதற்குக் காரணம்.

2021–2022ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், ‘‘மற்றுமொரு புதிய முன்மாதிரி முயற்சியாக, ஆளில்லா விமானங்களுக்கெனத் தமிழ்நாடு ஆளில்லா விமானக் கழகம், அண்ணா பல்கலைக்கழகச் சென்னைத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து துவக்கப்படும் என்றும், இந்நிறுவனம், தமிழ்நாடு மட்டுமல்லாது, பிற மாநிலங்களிலும் உள்ள அரசுசார்ந்த முகமைகள் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துவதில் உறுதுணையாக இருக்கும்’’ என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ஆளில்லா விமானங்களை, பேரிடர் மேலாண்மை, விவசாயம், கட்டுமானக் கண்காணிப்பு, வரி திட்டமிடல், சுகாதாரம், வானவியல், சுற்றுச்சூழல் ஆய்வுகள் போன்ற அரசுத் துறைகளின் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்காகச் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து ரூ.10 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் உள்ள டாக்டர் கலாம் மேம்பட்ட ஆளில்லா விமான ஆராய்ச்சி மையமானது சமூகப் பயன்பாடுகளுக்கான ஆளில்லா விமான வடிவமைப்பு மற்றும் மேம்பாடு குறித்தத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

மேலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 1 மெகாவாட் சூரிய மின்சக்தி மையத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 21 பணியாளர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 15 பணியாளர்களின் வாரிசுதாரர்கள் என மொத்தம் 36 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 4 வாரிசுதாரர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆளில்லா வான்வழி வாகனக் கண்காட்சியைப் பார்வையிட்டார். மேலும், ஆளில்லா வான்வழி வாகனத்தின் செயல்பாடுகள் குறித்த விவரங்களையும் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்களே, துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களே, தொழில்நுட்பக் கல்வி

இயக்குநர் திருமதி க.லட்சுமிபிரியா, இ.ஆ.ப., அவர்களே, கல்லூரிக் கல்வி இயக்குநர் முனைவர் சி.பூரணசந்திரன் அவர்களே, அண்ணாப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் ஆர். வேல்ராஜ் அவர்களே, திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் தாமரைச்செல்வி அவர்களே, இஸ்ரோ முன்னாள் இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாத்துரை அவர்களே, பேராசிரியர் பெருமக்களே, அரசு உயர் அலுவலர்களே, அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்கல்வித்துறையின் சார்பில் நடைபெறும் இந்த விழாவானது எங்களையெல்லாம் ஏன், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேறறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் அமைந்த பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பது மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

அறிஞர்களுக்கு எல்லாம் அறிஞர் பேறறிஞர் அண்ணா அவர்கள்! சென்னை கன்னிமரா நூலகத்தில் இருக்கும் பெரும்பான்மையான முக்கியமானப் புத்தகங்களைப் படித்தவர் பேறறிஞர் அண்ணா அவர்கள். அத்தகைய பேறறிஞர் பெயரால் அமைந்த பல்கலைக்கழகத்தின் அரங்கத்தில் இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ள நம்முடைய உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் பொன்முடி அவர்களை நான் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் இருந்து அவர் மாணவராக அரசியலில் இறங்கி விழுப்புரம் கல்லூரியில் பேராசிரியராக இருந்தபோது அமைச்சராக ஆகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி இருக்கிறார். தமிழகத்தில் இருக்கும் அனைத்துப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்தையும் வழிநடத்தக் கூடிய மாபெரும் பணியைச் சுமந்து கொண்டு இருப்பவர்தான் நம்முடைய பொன்முடி அவர்கள்.

அவர் அரசியல், வரலாறு, பொதுத்துறை நிருவாகம் எனப் பல்வேறு பாடங்களில் முதுநிலைப் பட்டம் வாங்கியவர். அனைத்துக்கும் மணிமகுடமாக முனைவர் பட்டம் பெற்றவர். உயர் கல்வித்துறையைக் கவனிக்க அனைத்து வகையிலும் பொருத்தமான அனைத்து உயர் கல்வியைப் பெற்றிருக்கக்கூடியவர்.

தமிழ்நாட்டின் உயர் கல்வியை உயரமான நிலைக்குக் கொண்டுவர நித்தமும் உழைத்துக் கொண்டிருக்கக்கூடியவர். அத்தகைய ஒரு முனைப்போடு செயல்பட்டுவரும் முனைவர் பொன்முடி அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

உயர்கல்வித் துறையில் கருணை அடிப்படையில் 36 வாரிசுதாரர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. கருணை அடிப்படை என்ற பிரிவின்கீழ் இந்த வேலைகள் வழங்கப்பட்டு இருந்தாலும், கல்வித் தகுதியின் அடிப்படையில்தான் உங்களுக்குப் பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வித் தகுதி அடிப்படையில் பணி கிடைத்த உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களுக்குக் கொடுத்த பணியை, இதைவிட வேறு யாரும் சிறப்பாகச் செய்துவிட முடியாது என்று சொல்கின்ற அளவுக்கு நீங்கள் பேர் வாங்க வேண்டும். அதற்கு நான் முன்கூட்டியே உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாருடைய வாரிசு என்பதற்காக உங்களுக்கு இந்தப் பணி கிடைத்துள்ளதோ, அவர்கள் இருந்தால் பெருமைப்படக்கூடிய அளவுக்கு நீங்கள் பணியாற்ற வேண்டும். உங்களது குடும்பத்தின் பெருமையை நிலைநாட்டும் வகையில் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதே விழாவில் தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் மற்றும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் 1 மெகாவாட் சூரிய சக்தி மையத்தை துவக்கி வைத்துள்ளேன். இங்கும் சூரிய சக்தியைத்தான் தொடங்கி வைத்துள்ளேன்.

சூரியன் என்று சொன்னாலே அது சக்திதான். சூரியன் என்ற சொல்லையும், சக்தி என்ற சொல்லையும் யாராலும் பிரிக்க முடியாது. நான் அரசியல் பேசுவதாக யாரும் கருதவேண்டிய அவசியமில்லை. அது தேவையுமில்லை. சூரிய சக்தியை உருவாக்கும் மையத்தைத்தான் நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

கிராமப்புற மின்மயமாக்கல் நிறுவனக் குழுமத்தின் நிதியுதவியுடன் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் சூரிய சக்தி மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் மின் தேவை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய சூரிய ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைப் போல அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இது போன்ற முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இது போன்ற முன்னோட்டமான முயற்சிகள் தொடர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா பல்கலைக்கழகமானது பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி மையங்களை உருவாக்கி வருவதை அறியும்போது உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது.

எம்.ஐ.டி. வளாகத்தில் ஏரோநாட்டிகல் துறை சார்பில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த வரிசையில் அண்ணாப் பல்கலைக்கழகத்தின் விண்வெளி ஆராய்ச்சி மையம் சார்பில் ட்ரோன் எனப்படும் ஆளில்லா வான்வழி சிறிய ரக விமானத்தின் வடிவமைப்பையும், அதற்கான மாதிரிகளையும் தயாரித்துள்ளார்கள். இதற்குக் காரணமாக ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். அவர்கள் அனைவரையும் தனித்தனியாகப் பெயரைச் சொல்லி நான் பாராட்டியதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் நிதியுதவியால் இந்த வான்வழி ஆராய்ச்சி மையம் பல்வேறு ட்ரோன்களை தயாரித்து வழங்கி வருகிறது. முதலில் இது காவல்துறையில் பயன்படுத்தப்பட்டது. பின்னர் வான்வழியில் புகைப்படம் எடுக்கவும், பேரிடர் மேலாண்மைக்கும், சுரங்கங்களை அளவீடு செய்யவும் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்ற ட்ரோன்களின் தேவை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

தமிழ்நாட்டின் தொழில்நுட்ப முயற்சிகளுக்கு இது முன்மாதிரியாக அமைகிறது. அனைத்துப் பல்கலைக்கழகங்களும், வெறுமனே பட்டம் வழங்கும் பல்கலைக்கழகங்களாக இல்லாமல் ஆராய்ச்சி நிறுவனங்களாக மாற வேண்டும், ஏராளமான கண்டுபிடிப்புகளைச் செய்து அவர்கள் அர்ப்பணிக்க வேண்டும்.

தமிழகத்தில்தான் ஆற்றல்மிக்க இளைஞர் சக்தி அதிகம். இந்தியாவில் இருக்கும் மிக முக்கியமான 100 கல்வி நிறுவனங்களில் 30க்கும் மேற்பட்டவை தமிழகத்தைச் சேர்ந்தவைதான் என்பதை அண்மைக்கால தரவரிசை முடிவுகளை நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், உயர் ஆராய்ச்சி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருப்பதுபோல எந்த மாநிலத்திலும் இல்லை.

தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகத்தின் அனைத்து நாடுகளிலும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். உயர் பொறுப்புகளை வகிக்கிறார்கள். இந்த இளைஞர்கள் எல்லாம் தமிழ்நாட்டின் உயர்கல்வியால் உயர்ந்தவர்கள், உயர்ந்த நிலைக்குச் சென்றவர்கள்தான், அந்த நிலையை இன்னும் கூடுதலாக உயர்த்த வேண்டும்.

ஆய்வுகள், ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் இன்னும் அதிகமாக வேண்டும். வெளிநாடுகளில் இருக்கும் புதுவிதமான படிப்புகள், பட்டங்கள் அனைத்தும் தமிழ்நாட்டின் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் நாம் புகுத்த வேண்டும். செயற்கை நுண்ணறிவு குறித்த படிப்புகள் இன்று முக்கியமானதாகச் சொல்லப்படுகிறது.

● டேட்டா சைண்டிஸ்ட்டுகள், ● சைபர் செக்யூரிட்டி ஸ்பெஷலிஸ்ட், ● ஆர்ட்டிபிஷியல் இண்டலிஜெண்ட், ● கஸ்டமர் சக்ஸஸ் ஸ்பெஷலிஸ்ட், ● சோஷியல் இன்ஜினியரிங், ● டிஜிட்டல் மார்க்கெட்டிங், ● பிகேவியர் எக்கனாமிக்ஸ், ●கேம் தியரி, ●வரலாற்றின் புவியியல், ● பொருளாதாரத்தின் வரலாறு, ● யுனிவர்ஸ் குறித்த படிப்புகள்.

இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இதுபோல நிறைய இருக்கிறது. இப்படி என்னென்ன படிப்புகள் எல்லாம் புதுமையாக வந்திருக்கிறதோ அவை அனைத்தையும் கற்க, இன்றைய மாணவர்களை உயர்கல்வித்துறையானது அவர்களுக்கு ஊக்கமாக, தூண்டப்படக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

இது குறித்து உயர் கல்வித்துறை நிபுணர்கள் கூடி மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்க வேண்டும். கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற பட்டம் நமக்கு போதாது. உயர் கல்வியில், ஆராய்ச்சிக் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற பட்டத்தை நாம் பெற்றாக வேண்டும். அதை நோக்கி உயர்கல்வித்துறை செயல்பட வேண்டும் எனக் கேட்டு, இந்த நிகழ்ச்சியிலே பங்கேற்க நல்ல வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்தில் ரூ.130.20 கோடியில் 900 அடுக்குமாடிக் குடியிருப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சிவகங்கை மாவட்டம், கழனிவாசல் திட்டப்பகுதியில் ரூ.130.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 900 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணியினைக் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

“சமூக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் ஒருங்கிணைந்த தேசியத் திட்டம்”

“**ச**மூக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் ஒருங்கிணைந்த தேசியத் திட்டம்” என்ற தலைப்பிலான தேசிய இணையக் கருத்தரங்கை AIBCF, SRA, PAGAAM, BAMCEF, We The People, LEAD INDIA ஆகிய அமைப்புகள் இணைந்து **26.01.2022** அன்று நடத்தியது. இந்த கருத்தரங்கில், மாண்புமிகு மகாராஷ்டிரா மாநில உணவு, நுகர்பொருள் வாணிபம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ஷகன் சந்திரகாந்த் புஜ்பால், மாண்புமிகு ஆந்திர மாநிலக் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் ஆதிமுலப்பு சுரேஷ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.பி.வில்சன், திரு.டெரிக் ஓ பிரையன், திரு.மனோஜ் குமார் ஜா, திரு.ஈ.டி. முகம்மது பஷீர், அலகாபாத் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் திரு.வீரேந்திர சிங் யாதவ், பீகார் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு.தேஜஸ் வி. யாதவ், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் திரு.கி.வீரமணி, PAGAAM நிறுவனர் திரு.சர்தார் தஜிந்தர் சிங் ஜல்லி, BAMCEF நிறுவனர் திரு.பி.டி.போர்க்கர், LEAD அமைப்பின் தலைவர் (அமெரிக்கா) டாக்டர் ஹரி எப்பனபள்ளி, AIBF ஒருங்கிணைப்பாளர், அமைப்பாளர் நீதியரசர் திரு.வி.ஈஸ்வரய்யா ஆகியோர் கலந்து கொண்டு, மருத்துவப் படிப்பில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தியதில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் எடுத்த முயற்சிகளைப் பாராட்டி ஆற்றிய உரை.

திராவிடர் கழகத்தின் தலைவர் மானமிகு அய்யா ஆசிரியர் அவர்களே! AIBF அமைப்பின் தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு நீதியரசர் திரு.ஈஸ்வரய்யா அவர்களே! மாண்புமிகு மகாராஷ்டிர மாநிலத்தின் உணவுத் துறை அமைச்சர் திரு.ஷகன் சந்திரகாந்த் புஜ்பால் அவர்களே!

மாண்புமிகு ஆந்திர மாநிலத்தின் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் ஆதிமுலப்பு சுரேஷ் அவர்களே! பீகார் சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் திரு.தேஜஸ்வி யாதவ் அவர்களே! திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் 27 விழுக்காடு சட்டப் போராளியுமான வழக்கறிஞர் திரு.வில்சன் அவர்களே!

கேரள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் எம்.பி. திரு.முகம்மது பஷீர் அவர்களே! அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் திரு.டெரிக் ஓ பிரையன் அவர்களே! ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.மனோஜ் குமார் ஜா அவர்களே! அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் திரு.வீரேந்திர சிங் யாதவ் அவர்களே!

PAGAAM நிறுவனத்தின் திரு.சர்தார் தஜிந்தர் சிங் ஜல்லி அவர்களே! BAMCEF நிறுவனர் திரு.பி.டி.போர்க்கர் அவர்களே! லீட் இந்தியா அறக்கட்டளை தலைவர், டாக்டர் ஹரி எப்பனப்பள்ளி அவர்களே! சமூக நீதியில் பற்றுக்கொண்டு இந்தியா முழுவதும் செயல்பட்டு வரக்கூடிய செயல்பாட்டாளர்களே!

மனித உரிமையினுடைய ஆர்வலர்களே! வழக்கறிஞர்களே! அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம். வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் இது! சமூக நீதி வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க நாள் இந்த நாள்!

சமூக நீதியை அடித்தளமாகக் கொண்ட ஒரு அகில இந்தியா கூட்டமாக இந்தக் கூட்டம் காணொலிக் காட்சி மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்முடைய மானமிகு ஆசிரியர் அவர்கள் இங்கே பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். திராவிட இயக்கம் பாராட்டை எதிர்பார்க்கவில்லை, இது திராவிட இயக்கத்தின் கடமை என்று சொன்னார். அதை நானும் வழிமொழிவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதனைப் பாராட்டு விழாவாக நான் கருதாமல், அடுத்தகட்ட சமூக நீதி உரிமையைப் பாதுகாக்க

எடுக்கக்கூடிய நடவடிக்கைக் கூட்டமாகவே நான் இதைக் கருதுகிறேன். காணொலி வாயிலாக இந்தக் கூட்டம் நடந்தாலும், கண்கொள்ளாக் காட்சியாக இது அமைந்திருக்கிறது. இப்போது என் வருத்தம் எல்லாம், இதைக் காண்பதற்குத் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரும் இல்லையே என்பது மட்டும்தான் வருத்தமாக இருக்கிறது.

இந்தியா முழுவதும் சமூக நீதி பேரியக்கம் பரவ வேண்டும் என்று அவர்கள் மூவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்கள். அந்த உழைப்பு வீண் போகவில்லை. இந்திய வரைபடத்தின் கிழக்கும், மேற்கும், வடக்கும், தெற்கும் எனப் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் இந்தக் காணொலி வாயிலாக இன்றைக்கு இணைந்திருக்கிறோம். சரியாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்மையெல்லாம் இணைத்தது சமூக நீதி என்ற கருத்தியல்தான்.

திராவிட இயக்கம் போட்ட விதை தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் முளைக்கத் தொடங்கியிருக்கிறது. அதன் அறுவடையைத்தான் இப்போது நாம் பார்க்கிறோம். அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பு SRA, PAGAAM, BAMCEF, We the people, LEAD India ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருக்கக்கூடிய சமூக நீதி நிகழ்ச்சியில் பேசிய அனைவரும் அதிகப்படியான அளவிற்கு என்னைப் பாராட்டிப் பேசியிருக்கிறீர்கள். இந்தப் பாராட்டுக்கள், புகழுரைகள் அனைத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடிக்கணக்கான தொண்டர்களுக்கு நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

தொண்டர்களின் பலத்தால் அவர்கள் நித்தமும் அளித்து வரக்கூடிய ஊக்கத்தால்தான் இந்த எளியேனால் இத்தகைய சாதனைகளுக்கு முடிந்த அளவு பங்களிப்புச் செலுத்த முடிகிறது.

தொடர்ச்சியான போராட்டத்தின் மூலமாக, சமூக நீதிக்கான வெற்றியை அடைந்துள்ளோம். இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை அனைத்து இந்திய மருத்துவக் கல்லூரிகளிலும் பெற்றிருப்பதன் மூலமாக, சமூக நீதி வரலாற்றில் மாபெரும் சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இந்தச் சாதனை என்பது சாதாரணமாகக் கிடைத்துவிட வில்லை. மக்கள் மன்றத்திலும், நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும், நீதிமன்றத்திலும் நடத்திய போராட்டங்களின் மூலம் இந்தச் சாதனையை நாம் பெற்றிருக்கிறோம். இந்தப் போராட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான பங்களிப்பைச் செய்துள்ளது என்பதைத் தலை நிமிர்ந்து சொல்வதை நான் பெருமையாக நினைக்கிறேன்.

சமூக நீதி என்பது திராவிட இயக்கம் இந்த நாட்டிற்குக் கொடுத்த மிக முக்கியமான கொடையாகும். சமூக நீதி என்பது அனைத்துச் சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியாகும்.

அனைத்துச் சமூகத்திற்குமான இட ஒதுக்கீட்டை 1921ஆம் ஆண்டு வழங்கியது நீதிக் கட்சியின் ஆட்சி. இந்த இட ஒதுக்கீட்டிற்கு, அதனுடைய முறைக்கு உச்சநீதிமன்றத்தால் ஆபத்து வந்தபோது கடுமையாகப் போராடி 1950ஆம் ஆண்டு அரசியல் சட்டத் திருத்தத்தைச் செய்ய வைத்தவர்கள் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராஜரும்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 31 விழுக்காடாக ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். பட்டியலினத்தவர் இட ஒதுக்கீட்டை 16 விழுக்காட்டிலிருந்து, 18 விழுக்காடாக ஆக்கியதும் தி.மு.க.தான். இந்த 18 விழுக்காட்டில் பழங்குடியினரும் இருந்தார்கள். அவர்களுக்குத் தனியாக 1 விழுக்காடு வழங்கி, முழுமையாக 18 விழுக்காடும் பட்டியலினத்தவர்களுக்குக் கிடைக்க வழி செய்து இன்றைய 69 விழுக்காட்டைக் கொண்டுவந்தது தி.மு.க.

மதம் மாறிய ஆதிதிராவிட கிறிஸ்துவர்களையும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்ததும் தி.மு.க. தான். மிகவும் பிற்படுத்தப்பட்ட 107 சாதியினருக்குத் தனியாக 20 விழுக்காடாகப் பிரித்து, மிகப் பிற்படுத்தப்பட்டோர் எனப் பெயரிட்டு ஒதுக்கீடு வழங்கியது தி.மு.க.

அருந்ததியினருக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கியது தி.மு.க. இசுலாமியர்களுக்கு 3.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கியது தி.மு.க.

மண்டல் ஆணையத்தின் பரிந்துரைப்படி, ஒன்றிய அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்குப் பிரதமர் வி.பி.சிங் மூலமாக வலியுறுத்தி அதையும் பெற்றோம்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் நிறைவேற்றியது தி.மு.க. இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். சமூக நீதி கருத்தியலுக்குச் செய்த மாபெரும் பங்களிப்பாகும்.

இதனுடைய தொடர்ச்சியாக, 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை மருத்துவ படிப்புகளில் வழங்க வலியுறுத்திப் போராடினோம், இப்போது பெற்றுத் தந்திருக்கிறோம்.

அகில இந்திய அளவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். ஒன்றிய ஆட்சியாளர்களிடம் தொடர்ந்து எடுத்துச் சொல்லி வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் எப்போதும் இடம்பெறும் கொள்கையாக அது அமைந்திருந்தது.

2019ஆம் ஆண்டு முதல் இதற்கான முனைப்புகளை அதிகமாக எடுத்தோம். நம்முடைய கழகத்தின் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்கள் தன்னுடைய சொந்த வழக்கைப் போல இதனை அவர் நடத்தினார். இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், அவரை வழக்கறிஞர் என்று சொல்வதைவிடச் சமூக நீதிப் போராளியாகவே இதில் அவர் செயல்பட்டார். MBBS, OBC இட ஒதுக்கீடு குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிடுமாறு 2019ஆம் ஆண்டு பிரதமருக்கு நான் கோரிக்கை வைத்தேன். நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர்கள் இது குறித்து கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இடங்களில் ஓபிசி இட ஒதுக்கீடு தொடர்பாக ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களை நமது கழக எம்.பி. வில்சன் அவர்கள் நேரடியாகச் சந்தித்துக் கடிதமும் கொடுத்து வலியுறுத்தியிருக்கிறார். ஆனால், ஒன்றிய அரசு சரியான பதிலைச் சொல்லாத காரணத்தால், நான் ஒன்றிய அரசுக்குக் கண்டனம் தெரிவித்தேன்.

இவர்களிடம் சும்மா கேட்டால் கிடைக்காது என்ற காரணத்தால்தான் 2020ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழக்கைத் தாக்கல் செய்தோம், அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தினோம். தி.மு.க. தொடுத்த வழக்கை உயர்நீதிமன்றத்தில் போடச் சொன்னார்கள். அப்போதும் ஒன்றிய அரசு மனம் இரங்கவில்லை. சலோனி குமாரி வழக்கைக் காரணமாகக் காட்டினார்கள். அந்த வழக்கு முடிந்தால்தான் முடிவெடுக்க முடியும் என்று சாக்குப் போக்குச் சொன்னார்கள். தி.மு.க. போட்ட வழக்கு வேறு, சலோனி குமாரி வழக்கு வேறு என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு வழங்கியாக வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. 2021–2022ஆம் ஆண்டிலிருந்து வழங்க வேண்டும் என்று உத்தரவும் போட்டது. இதுதான் மிகப்பெரிய வெற்றியாகும். ஆனாலும், இதனை ஒன்றிய அரசு வழங்காத காரணத்தால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் நீதிமன்ற அவமதிப்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. முறையாகச் செயல்படுத்துங்கள் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

26.07.2021 அன்றுதான் இந்தியாவின் சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள், நீதிமன்ற உத்தரவுகளுக்கு இணங்குவதாகச் சொல்லி உறுதியளிக்கிறார். ஏதோ பா.ஜ.க. அரசுதான் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு உரிமை தூக்கித் கொடுத்ததைப் போலச் சிலர் பரப்புரை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நடந்த உண்மை எதுவும் தெரியாது.

2020ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. வழக்குப் போட்டது. 2021ஆம் ஆண்டு சூலை மாதம்தான் பா.ஜ.க. அரசு இதனை ஒப்புக் கொண்டது. இந்த உண்மைகளை அவர்கள் மறக்கலாம். ஆனால் மறைக்க முடியாது. இது ஏதோ ஒரு வழக்கின் வெற்றி அல்ல. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனத்தின் வெற்றி ஆகும். இதோடு நமது பணி முடிந்துவிடவில்லை. சமூக நீதி என்பது சமூக சமத்துவம் ஆகும். அது கல்வியில் வேலைவாய்ப்பில் மட்டுமல்ல, அனைத்து இடங்களிலும் உருவாக்கப்பட வேண்டும்.

“எங்கெல்லாம் அநீதி இருக்கிறதோ அங்கெல்லாம் நீதியை நிலைநாட்ட வேண்டும்” என்று உலகப் பொருளாதார மேதை அமர்த்தியா சென் சொல்லியிருக்கிறார்.

அத்தகைய நீதியை உருவாக்கவே திராவிட இயக்கம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இரத்த பேதம் இல்லை, பால் பேதம் இல்லை என்பதே திராவிட இயக்கத்தின் அடிப்படை இலட்சியம் ஆகும். சமூக நீதியும், பெண்ணுரிமையும்தான் தலையாய இலட்சியம் ஆகும்.

இந்த மகத்தான கொள்கையைத் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் கொண்டு சேர்க்கும் பணியை நாங்கள் தொடங்க இருக்கிறோம்.

கிராண்ட் மாஸ்டர்-2022 பட்டம் பெற்ற சதுரங்க விளையாட்டு வீரருக்கு உயரிய ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சதுரங்க போட்டியில் 2019ஆம் ஆண்டு சர்வதேச மாஸ்டர் பட்டம் மற்றும் 2022ஆம் ஆண்டு கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வன் பரத் சுப்ரமணியம் அவர்களுக்கு ரூ.8 இலட்சம் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலையை வழங்கினார்.

சென்னையில் 9ஆம் வகுப்பு படித்து வரும் செல்வன் பரத் சுப்ரமணியம், 2013ஆம் ஆண்டு முதல் தனது ஐந்தாவது வயதிலிருந்து மாநில, தேசிய மற்றும் சர்வதேச சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்று வருகிறார். சர்வதேசப் போட்டிகளில் தொடர்ச்சியாகப் பங்கேற்றுச் சிறப்பாக விளையாடிய செல்வன் பரத் சுப்ரமணியம் 2019ஆம் ஆண்டு சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்றார். மேலும், 2022ஆம் ஆண்டில் தனது 14ஆவது வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்று இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

செல்வன் பரத் சுப்ரமணியத்திற்கு 2019ஆம் ஆண்டு சர்வதேசச் சதுரங்க மாஸ்டர் பட்டம் வென்றமைக்காக 3 இலட்சம் ரூபாயும், 2022ஆம் ஆண்டு கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றமைக்காக 5 இலட்சம் ரூபாயும் சேர்த்து, மொத்தம் ரூ.8 இலட்சம் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பிப்ரவரி 03:
பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாள்

பேரறிஞர் அண்ணா அவர்களின்
53ஆவது நினைவு நாளையொட்டி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
03.02.2022 அன்று சென்னை, காமராஜர் சாலை,
மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா
அவர்களின் நினைவிடம் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து
மரியாதை செலுத்தினார்.

"கலைஞர் எழுதுகோல் விருது"

அரசாணை வெளியீடு

இதழியல் துறையில்

சமூக மேம்பாட்டிற்காகவும்,
விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும்
பங்காற்றிவரும் ஒரு சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும்

"கலைஞர் எழுதுகோல் விருது"

மற்றும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன்
பாராட்டுச் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்படும்.

"பத்மஸ்ரீ" விருதாளருக்கு வாழ்த்து



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை
07.02.2022 அன்று தலைமைச் செயலகத்தில்,
பத்மஸ்ரீ விருதிற்கு அறிவிக்கப்பட்டுள்ள
புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையைச் சேர்ந்த
சதிராட்டக் கலைஞர் திருமதி முத்துக்கண்ணம்மாள்
அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

அன்பும், மனிதநேயமும் தழைத்திடச் செய்திடுவோம்

வாடிய பயிரைக் கண்டால் மனம் வாடும் இரக்கமும், பட்டினி வயிறுகளின் பசியாற்றிட அணையா அடுப்பு மூலம் உணவளிக்கும் கருணையும், சாதி பேதமற்ற சமரச சன்மார்க்க நெறியும் கொண்டவரான வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் அவர்களின் நினைவைப் போற்றி, அன்பும் மனிதநேயமும் தழைத்திடச் செய்திடுவோம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

கச்சத்தீவு புனித அந்தோணியார் தேவாலய பெருவிழாவில் பங்கேற்பதை உறுதிசெய்ய வேண்டும்

தமிழக மீனவர்கள் கச்சத்தீவில் உள்ள புனித அந்தோணியார் தேவாலயத்தின் வருடாந்திரப் பெருவிழாவில் தடையின்றிப் பங்கேற்பதை உறுதி செய்யுமாறு இலங்கை அரசை வலியுறுத்திடக்கோரி, மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.02.2022 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், கச்சத்தீவு புனித அந்தோணியார் தேவாலயத்தில், புனித அந்தோணியார் வருடாந்திரப் பெருவிழா ஒவ்வொராண்டும் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கொண்டாடப்படுகிறது என்றும், இவ்விழாவில் பங்கேற்க விரும்பும் தமிழக மீனவப் பக்தர்களின் பாதுகாப்பான பயணத்திற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழக அரசு செய்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பல்வேறு காரணங்களை முன்வைத்து இந்த ஆண்டு திருவிழாவில் தமிழக மீனவ பக்தர்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளது தமது கவனத்திற்கு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் மற்றும் பக்தர்கள் கச்சத்தீவு புனித அந்தோணியார் தேவாலயத்துடன் ஆன்மீக மற்றும் உணர்வுப்பூர்வமான தொடர்பைப் பல ஆண்டுகளாகக் கொண்டுள்ளனர் என்றும், கச்சத்தீவு திருவிழாவில் பங்கேற்க இலங்கை அதிகாரிகளால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது தமிழக மீனவர்களிடையே பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் பாரம்பரியமாகப் புனித அந்தோணியார் தேவாலயத்தின் வருடாந்திரப் பெருவிழாவில் தமிழக மீனவர்கள் தடையின்றிப் பங்கேற்பதை உறுதி செய்யுமாறு இலங்கை அரசை வலியுறுத்திட வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளதோடு, இம்முயற்சி இரு நாட்டு மக்களிடையே நல்லுறவைப் பேணுவதை உறுதிசெய்யும் என்று தான் நம்புவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர்.பாலு அவர்கள் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களை நேரில் சந்தித்துக் கடிதத்தினை வழங்கினார்.

இராமானுஜர் பொற்சிலை
தேசிய ஒருமைப்பாட்டின் அடையாளம்

இராமானுஜரின் பொற்சிலைத் திறப்பு நிகழ்வுக்கு என்னை அழைத்தமைக்காக எனது மரியாதை கலந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இந்தச் சீரிய தருணத்தில், இராமானுஜர் அவர்களின் சமத்துவக் குரல் நாடெங்கும் சிறப்போடும் எழுச்சியோடும் ஒலிக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமத்துவத்தின் சிலை என்னும் இந்த அடையாளம், அனைவரையும் உள்ளடக்கி ஒட்டுமொத்தமாக நம் நாடு வளர்ச்சிபெறத் தற்போது மிகவும் தேவைப்படும் ஒன்றாகும்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் தன் வாழ்நாளெல்லாம் சமத்துவத்துக்காகப் பாடுபட்டவர் எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்று சுட்டிக்காட்டுவது எனது கடமையாகும். ராமானுஜரது வாழ்க்கையின் சாரத்தை எடுத்துச் சொல்லும் வகையில் அவர் ஒரு தொலைக்காட்சித் தொடருக்குக் கதை, வசனம் எழுதினார். அவரது இலக்கிய, திரைப் படைப்புகளில் இதுவே இறுதியானதாகும். அதே நேரத்தில் எந்நாளும் உயிர்ப்புடன் இருந்து அடுத்துவரும் தலைமுறைகளிடம், குறிப்பாக நம் நாட்டின் இளைஞர் திரளிடம் இராமானுஜர் என்னும் மாபெரும் சமூகச் சீர்திருத்தவாதியின் வாழ்வையும், பணிகளையும் கொண்டு செல்லும் படைப்பாக அது அமைந்திருக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றித்தான் தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு தற்போது நடைபெற்று வருகிறது என்பதனையும் நான் இத்தருணத்தில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இராமானுஜர் பரப்பிய சீர்திருத்தங்கள் எங்களது நெஞ்சுக்கும் நெருக்கமானவைதாம். அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகத்தான், அனைத்துச் சாதிகளைச் சேர்ந்தவர்களையும் அர்ச்சகர்களாக எனது அரசு நியமித்து, தமிழ்நாட்டுக் கோயில்களின் கருவறையில் பூசை செய்வதில் சமத்துவத்தை உறுதிசெய்துள்ளது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த எட்டு மாதங்களில், மாநிலத்தில் கோயில்களின் நிருவாகம் முறையாக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் உள்ள கோயில்களின் சிறப்பான நிருவாகத்துக்குத் தேவையான நிதியினை ஒதுக்கியிருப்பதோடு, கோயில் பூசாரிகளின் நலன்களையும் காத்து வருகிறோம். இந்து சமய மற்றும் அறநிலையத்துறையில்தான் பக்தர்களும், அர்ச்சகர்களும் பயன்பெறும் எண்ணற்ற நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது நாட்டிலேயே மிகச் சிறப்பான கோயில் நிருவாகத்தினைக் கொண்ட மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

தங்களது நிகழ்வு பெரும் வெற்றியடைய எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் இராமானுஜரின் "சமத்துவ சிலையானது" என்ற இந்த அடையாளம் தேச ஒருமைப்பாட்டின் அடையாளமாகத் திகழ வேண்டும் என்ற எனது விருப்பத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

(இராமானுஜரின் பொற்சிலைத் திறப்பு விழாவிற்கு திரு. த்ரிதண்டி சின்ன ஸ்ரீமன் நாராயண ராமானுஜ ஜீயர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து எழுதிய கடிதம் – 05.02.2022)

பிப்ரவரி 6 : நாராயணசாமி நாயுடு அவர்களின் பிறந்த நாள்

உழவர் பெருந்தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களின் 97ஆவது பிறந்த தினத்தையொட்டி 06.02.2022 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், வையம்பாளையம் பகுதியில் உள்ள மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

உத்தமத்தியாகி

தமிழ்நாட்டு உழவர் வாழ்வுக்காகவும்,
உரிமைக்காகவும் வாழ்நாளின் இறுதிவரை
உழைத்த உத்தமத் தியாகி நாராயணசாமி
நாயுடு அவர்களின் பிறந்த நாள் இன்று.

அவரது சிந்தனைகள், எண்ணங்களை
நிறைவேற்றும் அரசாக நமது அரசு இருக்கும்
என இந்நாளில் உறுதியேற்கிறேன்!

பெரியவரின் புகழ் எந்நாளும்
நிலைக்கட்டும்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

பிப்ரவரி 01: ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பிறந்த நாள்

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் 128ஆவது பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் 01.02.2022 அன்று விழுப்புரம் மாவட்டம், ஓமந்தூர் அரசு மணிமண்டபத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

ஜனவரி 27: சுவாமி சகஜானந்தா பிறந்த நாள்

சுவாமி சகஜானந்தா அவர்களின் பிறந்த நாளையொட்டி 27.01.2022 அன்று கடலூர் மாவட்டம், உசுப்பூர் ஊராட்சி, சுவாமி சகஜானந்தா நினைவு மண்டபத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சியர் (மு.கூ.பொ) திரு.சஞ்சித் சிங், இ.ஆ.ப., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தமிழரசு

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

தமிழரசு (தமிழ்) மாத இதழ்

தனி இதழ்	:	ரூ.20
ஆண்டுச் சந்தா	:	ரூ.240
ஆயுள் சந்தா	:	ரூ.2,000 (10 ஆண்டுகள்)

தமிழரசு (ஆங்கிலம்) மாத இதழ்

தனி இதழ்	:	ரூ.20
ஆண்டுச் சந்தா	:	ரூ.240
ஆயுள் சந்தா	:	ரூ.2,400 (10 ஆண்டுகள்)

தமிழரசு சந்தாத் தொகையினை வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ **இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை–600 113** என்ற முகவரிக்குத் தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் கைப்பேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்பித் தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழரசு இதழுக்கு www.tamilarasu.org என்ற இணையதளத்தில் சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு 15.01.2022 அன்று,
சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், திருக்குறள் நாட்காட்டியை வெளியிட்டார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 75ஆவது நினைவு நாளையொட்டி, 30.01.2022 அன்று
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆ.ர்.என். ரவி அவர்கள்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆகியோர்,
சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகள் அவர்களின்
திருவுருவச் சிலையின்கீழ் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,